விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 21 சனிக்கிழமை (03.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 046

## இறைமை பகிரப்பட முடியும் - த.தே.கூ பகிர முடியாது - இடைக்கால அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமும் புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையும் ஒன்றுக்கொன்று முரணானதாக உள்ளது.

இடைக்கால அறிக்கையில் பகிரப்படாத இறைமை என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பகிரப்படக்கூடிய இறைமை என குறிப்பிடப்பட்டுள்ளது என யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான குமாரவடிவேல் குருபரன் தெரிவித்துள்ளார்.

இடைக்கால அறிக்கையில் சமஷ்டியே உள்ளது எனவும் தமிழர்களுக்கு போதிய அதிகாரம் வழங்கப்படுகின்றது எனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரசாரம் செய்துவரும் நிலையில்,

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்தி கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஒற்றை 23

### மூன்று அரசியல் கைதிகளின் வழக்கு

## வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிப்பு

(வவுனியா)

அநுராதபுரம் சிறையில் தடுத்து வைத்துள்ள அரசியல் கைதிகள் மூவருக்கு எதிரான வழக்கு விசாரணையை அநுராதபுரம் மேல் நீதிமன்றிலிருந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்படுவதாக சட்டமா அதிபரால் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நேற்று அறிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்ட அரசியல் கைதிகள் மூவரின் சார்பாக அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணையை அநுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கு 23

## 100கோடி கேட்கிறது த.தே.கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடமிருந்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நூறு கோடி நட்டஈடு கோரியுள்ளது.

போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து கூட்டமை 24

### வாள்வெட்டில் கைதான

## ஐந்து சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மற்றும் வவுனியாவில் பதுங்கியிருந்த வேளை கைது செய்யப்பட்ட ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் என பொலிஸாரால் கூறப்பட்ட இக்ரம் நவிந்த 23

### மைத்திரியின் அடுத்த அதிரடி

## மற்றுமொரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவைகள் மற்றும் மிஹின் லங்கா விமான சேவை நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகளை ஆராயும் ஜனாதிபதி ஆணைக் 23

### பிணைமுறி மோசடி சம்பவத்தில்

# மகேந்திரன் உள்ளிட்ட மூவர் சந்தேக நபர்கள்

### குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் வாக்குமூலம் வழங்க கொழும்பு நீதிமன்றம் உத்தரவு





***(கொழும்பு) மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி சம்பவத்தில் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் உள்ளிட்ட மூன்று பேர் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் சந்தேக நபர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.*** *(23-ம் பக்கம் பார்க்க...)*

## வடக்கில் விகாரை அமைப்பதற்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்குகிறதா?

### சட்டத்தரணி மணிவண்ணன் கேள்வி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் ஆயிரம் விகாரைகளை அமைக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்திருக்கின்ற நிலையில் தாம் உள்ளூராட்சி பிரதேச சபைகளுக்கு ஆட்சிக்கு வந்தால் அதற்கான அனுமதியை வழங்கமாட்டோம் என தமிழ்த் தேசிய பேரவையின் யாழ்.மாநகர சபையின் முதன்மை வேட்பாளரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடக்கு - கிழக்கில் விகாரைகள் அமைப்பதற்கு ஆதரவு வழங்குகின்றதா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் 23

### சுதந்திரதினம், பிணைமுறி விவாதத்தில்

## கூட்டமைப்பு பங்கேற்கமாட்டாது

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

70 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகளில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என, எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடும் பொருட்டு எதிர்வரும் தினங்களை ஒதுக்கியிருப்பதன் காரணமாக, இந்நிகழ்வில் பங்குபற்ற முடியாதென அவர் அறிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 06 ஆம் திகதி நாடாளுமன்றில் இடம்பெறவுள்ள பிணைமுறி மோசடி 23

## அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் பெப்ரவரி 4-ம் திகதி இடம்பெறவிருக்கின்ற 70-வது தேசிய சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்வுக்கு அமைவாக, சதொச நிறுவனம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது 23

## விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் ஒரு மாதத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

புங்கன்குளம் சந்தி அரியாலையை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அல்பிறேட் அன்றூ (வயது64) என்ப 23

## பெண் சமூக செயற்பாட்டாளர் கொலைக்கு விசாரணை வேண்டும்

### தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இளவாலை சேந்தான்குளம் பகுதியில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட சமூக செயற்பாட்டாளரின் கொலை தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்குறித்த விடயம் தொடர்பில் தேசிய மீனவ ஒத்து 23

### 34 ஆண்டுகளின் பின்னர்

## மண்கிண்டி முருகன் ஆலயம் இராணுவத்தினரால் விடுவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை, சாம்பல் தீவு ஆத்திமோட்டைப் பகுதியில் உள்ள மண்கிண்டிமலை முருகன் ஆலயம் விடுவிக்கப்பட்டுள்ளது.

34 ஆண்டுகளாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த ஆலயம் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த ஆலயத்தை புதிதாக அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை. மேலும் கணினியில் பில் போடும் அனுபவமுள்ளவர்களும் இரு பாலாரும் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு:-**

**0775269182, 0773482634** (2630)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இராமநாதன் நுண்கலைக்கழகம்
## முதலாம் அரையாண்டு பரீட்சைகள்-2016
## கல்வியாண்டு 2015/ 2016

- முதலாம் அரையாண்டு பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் இசை, நடன மற்றும் சித்திரமும் வடிவமைப்புப்பட்டத் துறை முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களிடமிருந்து 07.02.2018 திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் உதவிப்பதிவாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம் அலுவலகத்திலிருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தமது துறைத் தலைவர்கள் ஊடாக உதவிப்பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
- மீள்பரீட்சார்த்திகள் ஒரு பாட அலகிற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 250/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையிலோ (162100160000880) செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் தவறாது இணைத்தல் வேண்டும்.

*விண்ணப்பமுடிவுத்திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மாணவர்கள் கவனத்திற் கொள்ளவும்.*

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
01/02/2018 (சி-1479)


## பணியாளர் தேவை

நெல்லியடியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் சேவை நிலையத்தில் பணிபுரிய பெண் பணியாளர் ஒருவர் தேவை. சனி ஞாயிறு 10.00 தொடக்கம் 3.00 வரை நேரில் வரவும்.

**தூரிகை**

யா/நெ.ம.ம.வி வீதி,
நெல்லியடி (சி-1485)

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலிப் பகுதியில் அரச பணிபுரியும் குடும்பமொன்றுக்கு தங்கியிருந்து வீட்டுப்பணி செய்வதற்கு பணிப்பெண் தேவை.
**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

தொடர்பு
**077 663 1655**

## வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## மைட்டி ஹெல்த் கிளப் ஒப் கொழும்பு நடாத்தும்
## இலவச ஆலோசனை முகாம்

சிறப்பு அதிதிகள் கலந்து சிறப்பிக்க உள்ளனர்
**இந்திய வம்சம் டெஸ்ட்டியூப் பேபி மையத்தின்**
Dr.D. சிலம்பு செல்வி M.D.,DGO,.DNB
அவர்கள் வருகை தருகிறார்



குழந்தை இல்லா தம்பதிகள்
இந்த முகாமுக்கு வருவதன் மூலமாக
உங்கள் வம்சம் தழைக்கும்

**யாழ்ப்பாணம்**
**Feb 04.02.2018** (சி-174)
**075 0 252 141, 0755728138**

## அன்பான உருத்திரபுரம் வட்டார மக்களே!



வட்டார அபிவிருத்தியே எமது நோக்கு, இதனாலேயே தேர்தலை நோக்காகக் கொள்ளாது முன்னதாகவே மக்கள் நலன் கருதி குடும்ப சுகாதார நிலையம், கழிவகற்றும் நடவடிக்கைகள் அதிகாரிகளின் உதவியுடன் எம்மால் செயற்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து உங்கள் ஆதரவுடன் உள்ளூர் குறுக்கு வீதிகள் திருத்தம், வட்டாரத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களை ஒன்றிணைத்து தேசிய மட்டப்பயிற்சிகள் கிடைக்கச் செய்தல், இயங்காத நிலையிலுள்ள சந்தைகளை இயங்கச் செய்தல் போன்ற மக்கள் நலன்சார்ந்த நடவடிக்கைகள் எமது பெண் வேட்பாளர் மூலம் செயற்படுத்தவுள்ளோம். (சி-020)
உங்கள் பொன்னான வாக்குகளை சைக்கிள் சின்னத்திற்கு வழங்கி **சண்முகலிங்கம் தயாளினி** வெற்றி பெற்று வட்டார அபிவிருத்தி சிறப்படைய உதவுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

நன்றி

**உருத்திரபுரம் வட்டார நலன் விரும்பிகள்**



மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ப்ரத்யங்கிரா சக்தி பீடம்



**ஸ்ரீ மஹா கால பைரவர்**
**ஸ்ரீ மஹா ப்ரத்யங் கிரா தேவி தேவஸ்தானம் வட்டுக்கோட்டை**
**பிரதி தேய்பிறை பஞ்சமி திதியில் ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா உடன் உறை ஸ்ரீவராஹீ தேவிக்கு ஹோமம் நடைபெற்று வருகின்றது.**
**வரும் 04.02.2018 ஞாயிற்றுகிழமை வரும் மாலை**
**5 மணி முதல் 7 மணி வரை நடைபெறும்**



## ஹோமதிரவியங்களும் அதன் பலாபலன்களும்

01.மிளகாய் வற்றல்:-துர்சக்திகள், சூழ்ச்சி, கண்திட்சி, மாந்திரிகங்களின் தொல்லைகளில் இருந்து விடுபட மஹா நிகும்பலா ஹோமம் (மிளகாய் வற்றல் யாகம்) ஸ்ரீ மஹாப்ரதியங்கிரா தேவியாக்த்திற்கு மட்டும் மிளகாய் வற்றல் நிவேதனம் செய்யலாம்.
02.கல்வியில் மேன்மை பெற:-தாமரை பூ, அறுகம் புல், மாதுளம்பழம், சிவப்புபூ.
03.நோயால் பீடிக்கப்பட்டவர்கள்:-வாழைப்பூ, தினை, சுக்கு, திப்பிலி, மிளகு, அதிமதுரம், நெற்பொரி, வெண்பட்டு, பேரீச்சம்பழம், கற்கண்டு, தேசிக்காய், வெற்றிலை.
04.சிறந்த ஆரோக்கியத்திற்கு:-சமித்து வகைகள் (கருங்காலி, அத்தி, இத்தி, ஆல், அரசு, மா, பலா) தேன், சுத்தமான நெய் (பால் பண்ணை பசுநெய்) அலரி பூ, செவ்வாழைப்பழம், திராட்சைபழம், மஞ்சள்கட்டி)
05.தேவதைகளின் அருள் ஆசி பெற:-(யஷிணி) கடம்பம்பூ
06.மன அமைதிக்கு:-வெண்கடுகு, முத்து, கொள்ளு, உரிக்காத தேங்காய்.
07.துர்தேவதைகள், துர்மந்திரங்களில் இருந்து நிவர்த்தி பெற:-(ஊமத்தம் பூ, கருங்காலி, கரு நீலக்கல், செந்தாமரை புஸ்பம் சிவப்பு சந்தனம், (தாளம்பூ குங்குமம்), செந்தூரபொடி, வெள்ளெருக்கு பூ, சுத்தமான பசு நெய், பால், குங்கிலியம், குங்குமபூ, கோரோசனை, பருத்திக்கொட்டை, பாதரசம், வேப்பம்பூ, வேப்பெண்ணை, நெய், மூங்கில், சமித்து, வெள் எருக்கு சமித்து, ஓமத்திரவிய வகைகள் (108, 1008)
08.சகல ஐஸ்வரியங்களுக்கும்:-எள்ளு, நவதானியம், வெட்டிவேர், லாமிச்சை வேர், மரிக்கொழுந்து, சாதிப்பூ, சாதிக்காய், சிவப்பு சேலை, மா இலை, பனங்கிழங்கு, கரும்பு மேற்குறிப்பிட்ட திரவியங்களை சமர்ப்பித்து அம்பாளின் அருள் ஆசிகளை பெற்று கொள்ளுங்கள்.

★ வரும் 07.02.2018 புதன்கிழமை தேய்பிறை அஷ்டமியில் ஸ்ரீமஹா காலபைரவருக்கு மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை விஷேட பூசை நடைபெறும்.
★ வருகின்ற 15.02.2018 வியாழக்கிழமை மாலை 5.00-7.00 மணிவரை ஸ்ரீமஹா ப்ரத்தியங்கிரா தேவிக்கு மஹா நிகும்பலா ஹோமம் (மிளகாய் வற்றல் யாகம்) நடைபெறும்.

**தொ.பே:-0212252020, 0764730091**

**தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை**
**(சங்கரத்தை சந்தி, இலங்கை வங்கி அருகாமையில்)**

# வாக்களிக்காதவர்களிடம் செலவுத் தொகையை அறவிட தேர்தல்கள் ஆணைக்குழு அதிரடி முடிவு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் தபால்மூலம் வாக்களிக்க விண்ணப்பித்துவிட்டு வாக்களிக்காதவர்களிடம், அதற்கான செலவுத் தொகையை அறவிடுவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு ஆலோசனை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனை தெரிவித்துள்ளார்.

தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்து, அதற்குத்தகைமை பெற்ற 4 ஆயிரம் வாக்காளர்கள் இதுவரை வாக்களிக்கவில்லை எனவும் ஒவ்வொரு அஞ்சல் வாக்குகளுக்கும், அரசாங்கத்துக்கு 750 ரூபா வரை செலவாவதாகவும், அரச பணியாளர்கள் பொறுப்புடன் செயற்பட்டு வாக்களிக்காவிட்டால், அதற்கு ஏற்படும் செலவை அறவிடுவதற்கான ஏற்பாடுகள் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். எனவே, வாக்களிக்காத அரச பணியாளர்களிடம் விளக்கம் கோரவும், செலவுத் தொகையை அறவிடவும் தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், தபால் வாக்குகள் ஏற்கனவே எண்ணி முடிக்கப்பட்டு விட்டதாக பரப்பப்படும் வதந்திகளில் உண்மையில்லை என்றும் எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதி மாலை 4 மணிக்குப் பின்னர் அவை எண்ணப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)


## எமது இலக்கு நோக்கிய பயணத்தில் இதுவரை நாம் ஆற்றிய மக்கள் பணிகளிலிருந்து சில...

பகுதி 01

செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எழுபதாம் ஆண்டின் ஆரம்பங்களில் இருந்து பதினைந்து வருடங்களுக்கு மேற்பட்ட ஆயுதப்போராட்ட வரலாற்றையும். அந்தப் போராட்டம் திசைவழி மாறிப் போனதால் இலங்கை. இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 30 வருடங்களுக்கும் மேலாக தேசிய அரசியல் அனுபவ வரலாற்றையும் தன்னகத்தே கொண்டவர். மக்கள் பணிக்கான இந்த இலட்சியப் பயணத்தில் தனது வழிகாட்டலினாலும், யதார்த்த மதிநுட்பச் சிந்தனையாலும் தோழர்களின் துணையோடு தொடர்ந்தும் எமது மக்களின் உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டு இருப்பவர்.

இந்த நெடிய போராட்டத்தில், மக்கள் வழங்கிய அரசியல் பலத்திற்கு அளவாக இடையறாத தன் முயற்சியால் மக்களை பாதுகாப்பதிலும். தாயக பிரதேசத்தை மீளக்கட்டி எழுப்புவதிலும் கணிசமான சாதனைகளை நிகழ்த்தியவர்.

யுத்தத்தை நடத்திய அரசுகளுடனும். யுத்தத்தை வெற்றிகொண்ட அரசுடனும். மக்கள் நலனுக்காகவும். தாயக தேசத்தின் மீள் எழுச்சிக்காகவும். இணக்க அரசியல் நடத்தி தமிழர்கள் தோற்றுப்போனவர்களல்லர் என்பதை மீண்டும் தென் இலங்கையில் உரக்கச் சொன்னவர்.

தமிழ் மக்கள் நடத்திய அகிம்சை வழிமுறை மற்றும் ஆயுத வழிமுறைப் போராட்டங்கள் முடிவுக்கு வந்திருந்தாலும், அந்தப் போராட்டங்களை நடத்துவதற்குக் காரணமாக இருந்த காரணிகளும். கோரிக்கைகளும் இன்னும் தீர்வு காணப்படாமலே நீறுபூத்த நெருப்பாக தமிழர் மனதில் இருந்து வருகிறது என்று நாடாளுமன்றத்திலேயே எடுத்துரைத்து, வன்முறையை வெற்றிபெற்றதைப்போல். தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வுகளை வழங்கி எங்கள் மக்களின் மனங்களையும் வெற்றி பெறுங்கள் என்று ஆட்சியாளர்களுக்கு தொடர்ந்து அறைகூவல் விடுப்பவர்.

இவ்வளவு காலமும் தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்து. சுயநல அரசியல் நாடகமாடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் சுயரூபம் தற்போது அம்பலமாகியுள்ளதால். கூட்டமைப்பை இனியும் நம்பிப் பயனில்லை என்ற நிலைக்கு தமிழ் மக்கள் விழிப்படைந்துவிட்டார்கள். மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக மாற்றுத் தலைவர் ஒருவர் அவதரிப்பார் என்று சிலர் வாதிடத் தொடங்கியுள்ளார்கள்.

ஆனால் மாற்றுத் தலைவர் என்பவர். எமது மக்களின் வலிகளையும். துயரங்களையும் அனுபவிக்காதவராகவோ. மக்களோடு வாழாதவராகவோ. தமிழ் மக்களின் துயரத்தை தூரத்திலிருந்து வேடிக்கை பார்த்துவிட்டு. பொழுதுபோக்காக அரசியல் தலைமை ஏற்க வரும் விருந்தாளியாகவோ இருக்க முடியாது.

மக்களுக்கு தலைமை கொடுப்பவர் மக்களோடு வாழ்பவராகவும்.
மக்களின் துயர் துடைப்பவராகவும். மக்களின் மீட்சிக்காக வாழ்விடங்களை நோக்கி கால்பதித்து நடந்து வருபவராகவும் இருக்க வேண்டும். அத்தகைய ஒரே தலைவராக நமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே இருக்கின்றார்.

அழைத்த குரலுக்கு பதிலளிக்கும் மக்கள் சேவகனாகவும், முன் வைத்த கோரிக்கைகளுக்கு தன்னால் முடியுமான முயற்சிகளை செய்து தீர்வைப்பெற்றுக்கொடுப்பவராகவும் இருக்கும் ஒரே தலைவர் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மட்டும்தான்.

அத்தகைய தலைவரால் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட மக்கள் பணிகளில் இருந்து சிலவற்றை மீண்டும் மீட்டிப்பார்ப்பது அவசியமாகின்றது....

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்து வெளியேறிய பின்னர்.

1986ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இந்தியா சென்றிருந்து தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், 1990 களின் நடுப்பகுதியில் தாயகம் திரும்பினார்.

அப்போது தமிழ் மக்கள் தொடர்ந்தும் யுத்தவடுக்களை சுமந்து நின்றனர். அவலப்பட்ட தமிழ் மக்களை முதலில் கரைசேர்க்கும் கப்பலாக ஈ.பி.டி.பி.யும், அதன் மாலுமியாக தோழர் டக்ளஸ் தேவானந்தாவும் களமிறங்கினார்கள்.

தமிழர் தேசமெங்கும் இருந்து உயிர்காக்க ஓடிவந்தோரை கொழும்பில் இடைத்தங்கல் முகாம்கள் அமைத்து பாதுகாத்தார்.

யாழ். தீவக மண்ணில் திக்கற்று நின்ற தீவக மக்கள். கதவுகளைப்பூட்டி வீடுகளுக்குள் அச்சத்தில் உறைந்து கிடந்த அந்தப் பயங்கரத்தை அகற்றுவதற்காக செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களே தோழர்கள் புடை சூழ தீவகத்தில் கால் பதித்தார். ஆபத்திலிருந்து காக்க வந்த செயலாளர் நாயகத்தின் கரங்களை பற்றிக்கொண்டு கதறி அழுத தீவக மக்களின் கண்ணீரைத் துடைத்து. அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொடுத்தார்.

**வீணைக்கு ஆணை வழங்குங்கள்!**
**சாதித்த நம் கரங்கள் சரித்திரம் படைக்கும் நாளை!!**

**அன்றாடத்தீர்வு! அபிவிருத்தி தீர்வு!! அரசியல் தீர்வு!!!**
**மத்தியில் கூட்டாட்சி!**
**மாநிலத்தில் சுயாட்சி!!**

என்றும் மக்கள் சேவையிலுள்ள
**டக்ளஸ் தேவானந்தா பா. உ**
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)





(சி-017) தொடரும்...


# கோத்தபாயவின் கோரிக்கை மீண்டும் நிராகரிக்கப்பட்டது



(கொழும்பு)

அவன்கார்ட் வழக்கில் இருந்து தம்மை விடுவிக்குமாறு கோரி, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மீண்டும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தால் குறித்த கோரிக்கை நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவன்கார்ட் நிறுவனத்தினால் அரசாங்கத்திற்கு 1,140 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் எழுத்து மூல அனுமதியை பெறாது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து, அதற்கு எதிராக கோத்தபாய ராஜபக்ஷவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

எவ்வாறாயினும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் அல்லது ஆணைக்குழு சார்பாக எவரேனும் ஒருவர் வழக்கு தாக்கல்செய்வதற்கு ஆணைக்குழுவிடம் எழுத்து மூலம் அனுமதியை பெற வேண்டிய அவசியம் இல்லை என மேல் நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய கோத்தபாய ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்த நீதிபதி, கொழும்பு பிரதம நீதவானால் வழங்கப்பட்ட உத்தரவு சட்டரீதியானது எனவும் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# ராஜபக்ஷவினரை பாதுகாக்கவில்லை

## ஐ.தே.க.நிலைப்பாடு குறித்து ஜனாதிபதிக்கு பிரதமர் பதில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி ராஜபக்ஷவினரை பாதுகாக்க போவதில்லை எனவும் ராஜபக்ஷவினருக்கு ஒரு சட்டம் ஏனையோருக்கு ஒரு சட்டத்தை அமுல் படுத்தவில்லை எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். சட்டத்திற்கு முன் அனைவரும் சரிநிகர் சமன். ராஜபக்ஷவினருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுக்கள் மட்டுமல்ல ஏனையோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கும் சட்டத்தை சரிசமனாக செயற்படுத்த வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை.

எமது கட்சியினருக்கும் ஏனைய கட்சியினருக்கும் சட்டத்தை வெவ்வேறு விதமாக அமுல்படுத்துவதில்லை.

ராஜபக்ஷவினர் சிலர் சட்டத்திற்கு முன் கொண்டு செல்லப்பட்டு வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. அதேவிதமாக ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அனைத்து நடவடிக்கைகளும் சட்டத்திற்கு அமையவே முன்னெடுக்கப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# 1ம் ஆண்டு நினைவுகளுடன்



## அமரர் யோகேஸ்வரன் விசாகம்மா

**(முன்னைநாள் ஆசிரியர் விசாகம்மா ரீச்சர்)**

**திருதியை: 03.02.2018**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30.11.1937 | 12.02.2017 |

ஓராண்டு மறைந்தாலும் மறக்க முடியவில்லை உங்கள் நினைவுகள். இறுதிநேரம் வரை அன்புடன் எமை அரவணைத்த உங்கள் கரங்கள் எமது உயர்வுக்காய் எப்பாடுபட்ட உங்கள் கரங்கள், மிதித்த புல்லு சாகாத உங்கள் பாதங்கள், பிறர் மனம் நோகா உங்கள் உள்ளம், விசாகம்மா ரீச்சர் என்றாலே திரும்பிப் பார்க்கும் உள்ளங்கள்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி சமைத்த எங்கள் தெய்வமே எம்மைவிட்டு பிரிந்து ஓராண்டு நிறைவில் அப்பாவுடன் சந்தோசமாக இருப்பீர்கள்.

**உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் உங்கள்**

**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள், மருமக்கள்**

**10ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு**
**முல்லைத்தீவு. தொ.பே.0778379289**

(C-1477)

# மரண அறிவித்தல்



## திருமதி அன்னபூரணம் காசிப்பிள்ளை

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 08 - 10 - 1931 | 31 - 01 - 2018 |

யாழ்.மீசாலையைப் பிறப்பிடமாகவும் நுணாவிலூர், டென்மார்க் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் தற்போது இல.576, 6ஆம் யுனிற் இராமநாதபுரம், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட அன்னபூரணம் காசிப்பிள்ளை கடந்த 31.01.2018 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் அன்னலட்சுமி (மணி), இராமலிங்கம் (ராசா - பிரான்ஸ்), சாந்தநாயகி (தேவி), வன்னியசிங்கம், மகேஸ்வரி (லலிதா - சுவிஸ்), சறோஜினி (ராதா - சுவிஸ்), சண்முகலிங்கம் (லிங்கம் - டென்மார்க்), இராஜேஸ்வரி (குட்டி - டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சரவணமுத்துவின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற பெரியதம்பி, தவமணி, சபாரத்தினம், சிவாயினி, பாலசுப்பிரமணியம், சந்திரகாந்தன், விஜயமதி, யோககுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சயந்தன், சயந்தன், நிஷாந்தன், திலீபன், தினுஷா, அனுஷா, சிந்துயா, ஜெனா, சரண்ராஜ், சரண்யா, பிரவிந்தன், சகானா, சாரங்கி, பபிதா, அபிலாஸ், மிதுசன், மிறன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபர்ணா, ஆருசா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2018) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமநாதபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-1483)

**இல.576, 6ஆம் யுனிற்**
**இராமநாதபுரம், கிளிநொச்சி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்-2018



## ஆதரிப்பீர் உதயசூரியனை

★ ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழப் புரட்சி அமைப்பு, ஜனநாயக தமிழரசுக் கட்சி, புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் என ஐந்து கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்னும் மாற்று அணியை உருவாக்கியுள்ளோம்.

★ தமிழ்த்தேசியக் விடுதலைக் கூட்டமைப்பை உருவாக்க சக அமைப்புக்களுடன் பேசினோம். பெரும்பான்மையானோர் உடன்பட்டார்கள். ஓரிருவர் பின்வாங்கினர். போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள முயற்சித்தோம். அதுவும் கைகூடாமல் போய்விட்டது. எனவே புதிய மாற்று அணியில் அவர்களை இணைத்துக்கொள்ள முடியவில்லை.

★ ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையும் உள்ளடக்கிய ஐக்கிய முன்னணிக்கான ஒரு அடித்தளம் இடப்பட்டுள்ளது.

★ உதயசூரியன் சின்னத்தை தமிழ் மக்களின் பொதுவான சின்னமாக நாம் ஏற்றுள்ளோம்.

★ அரசியல் தீர்மானங்களை ஒருமித்த கருத்துடன் எடுக்கும் பொருட்டு, உயர்மட்ட அரசியல் குழுவொன்றை நியமித்துள்ளோம்.

★ எதிர்காலத்தில் சகல தமிழர் தரப்பையும் இக்கூட்டமைப்பில் இணைத்துக்கொண்டு ஒரு வலுமிக்க தமிழர் தரப்பாக செயற்படுவோம்.

★ தேர்தலுக்குப் பின்னர் அனைவரும் ஒன்றிணைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

★ தமிழ் மக்களின் எதிர்காலம் எவ்வாறு இருக்க வேண்டும், வடக்கு-கிழக்கை எவ்வாறு செல்வம் கொழிக்கும் பூமியாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற கனவுகளுடன் களமாடியவர்கள் நாம்.

★ அந்தக் கனவுகளை நனவாக்க மாற்று அணி மிக முக்கியமானது என்பதை உணர்ந்து அதனை உருவாக்க விடாமுயற்சியுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளோம்.


★ 40ஆண்டுகால எமது அனுபவங்கள் இவைகளுக்கு ஒரு உந்துசக்தியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

நவீன உலகில் கிராமங்களின் வளர்ச்சிக்கேற்ப எமது கிராமங்களையும் அபிவிருத்தி செய்ய எண்ணியுள்ளோம்.

★ கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, ஏற்றுமதியை ஊக்குவிக்கும் திட்டங்களை வகுத்து உற்பத்தியைப் பெருக்கி, உட்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்து நகர்ப்புற நெரிசலைக் குறைத்து கிராமங்களை வளம் கொழிக்கும் பிரதேசமாக மாற்ற எண்ணியுள்ளோம்.

★ எனவே தென்னிலங்கை ஆளும் கட்சிகள், அந்தக் கட்சிகளின் பங்காளிகள், சில சுயேட்சைகள், தனிவழி செல்வோர் என்பவர்களைப் புறந்தள்ளி புதிய மாற்றத்திற்கான எமது பொதுச்சின்னமான உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து வடக்கு-கிழக்கெங்கும் அவர்களை அதிகூடிய பெரும்பான்மையுடன் வெல்ல வைக்குமாறு அன்புடனும் உரிமையுடனும் தாழ்மையுடனும் வேண்டுகின்றேன்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி**



X

அனைவரும் வாக்களிப்பில் கலந்து கொள்ளுங்கள்.
உதயசூரியனுக்கு வாக்களியுங்கள்

**தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பு**

(சி-018)

## நினைவுகூருகின்றோம்



**04.01.2018 அன்று சிவபதமடைந்த எமது நண்பன் குகநாதனின் அன்புத் தந்தையார் கனகசபை இலங்கநாதன் அவர்களை இந்நாளில் நினைவுகூருகின்றோம்.**

பொன்னை நிகர்த்தன்ன புதல்வர்களைப் பெற்று
பாரினில் அவர் உயர பல்கலை ஊட்டிய
உங்கள் நினைவை நாம் மீட்க
ஒரு யுகம் போதாது-இறைவா
உன்னிடம் அனுப்பிவிட்டு தவிக்கின்றோம்-அவரை
உன் அருகில் பத்திரமாய் வைத்திரு.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

**மகாஜனன்கள் 1987 சா/த, 1990 உ/த மாணவர்கள்.**

(2628)

## க.பொ.த.(உ/த) விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து க.பொ.த. (உ/த)-2018இல் இரண்டாம் தடவையாக தோற்றும் மாணவர்கள், அதிபர் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி 2018.02.15ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பதாரிகள் பாடசாலைக்கு சமுகமளிக்கும் போது தேசிய அடையாள அட்டை, க.பொ.த.(உ/த) -2017இல் தோற்றிய சுட்டெண், பாடசாலைச் சீருடை என்பவற்றைக் கவனத்தில் கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ)

## இராசி பலன்

**மீனம்:** திறமைகள் வெளிப்படும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மிதுனம்:** செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** களஸ்திர நன்மையுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் மனங்கோணாது நடந்து கொள்வது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மகரம்:** புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**சிம்மம்:** ஆழ்ந்த சிந்தையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**தனுசு:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், விருந்தினர் வருகையுண்டு, நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் மேன்மையுண்டு.

**துலாம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செல்வ நிலை உயரும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்.

**கன்னி:** செலவீகளில் தாராளம் காட்டுவீர்கள், ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம்.

### கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன் | | ராகு |
| சூரி, புத, கேது, சுக் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அவிட்டம், சதயம்<br>இரவு 8.45 மணிக்கு<br>கன்னி-சந் | | சந் |
| சனி | செவ் | குரு | |

**03.02.2018**

தை 21, சனிக்கிழமை,
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
திருதியை பிற்பகல் 2.56 மணிவரை
பூரம் பிற்பகல் 3.29 மணிவரை
சுபநேரம் 3.35-5.05 மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

## உமையாள்புரம் ப.நோ.கூ.சங்கம் மூடல்

# மக்களின் பங்களிப்பு அதிகரிக்கப்படுமாகில் மீளவும் திறப்பது தொடர்பில் ஆராயப்படும்

### கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் அமைந்துள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்தை மீள ஆரம்பிப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி வடக்கு பலநோக்கு பகுதிக்குரிய சங்கம் ஒன்று உமையாள்புரம் பகுதியில் அமைந்துள்ளது. குறித்த சங்கமானது மீள்குடியேற்றத்தின் பின்னர் திறக்கப்பட்டு நடவடிக்கை இடம்பெற்று வந்த நிலையில் தற்போது அது சுமார் ஒரு வருட காலமாக மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

இடம்பெயர்ந்து மீளவும் நாங்கள் எங்களின் இடத்திற்கு வந்த பின்னர் குறித்த சங்கமானது இயங்கியது. தற்போது அந்த சங்கமானது மூடிய நிலையில் காணப்படுவதால் பரந்தன் சந்திக்கு சென்றே பொருட்களை பெற்றுக்கொள்ள கூடியதாக உள்ளது. அத்தோடு தட்டுவன்கொட்டி கிராம மக்களும் இந்த சங்கத்தினையே பயன்படுத்தி வந்த நிலையில் அது பூட்டப்பட்டுள்ளது. உரிய அதிகாரிகள் இதனை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த கரைச்சி வடக்கு சங்கத்தில் நிதி பிரச்சினை காணப்படுகின்றது. அத்தோடு இச் சங்கத்தில் மக்கள் பொருட்களை கொள்வனவு செய்வது குறைவாக காணப்படுவதால் வியாபாரமும் குறைவாக இருக்கின்றது. மக்களின் பங்களிப்பு அதிகரிக்குமானால் ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயப்படும் என அவர் தெரிவித்தார். (2-315)

## 'தீர்வு கிடைக்காவிடின் தொடர் போராட்டம்'

# நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் வவுனியாவில் நேற்று கவனயீர்ப்பு

(குருமன்காடு)

சம்பளப்பிரச்சினை உள்ளிட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.



நாடளாவிய ரீதியில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரின் சம்பள உயர்வு, நியமனத்தில் அரசியல் தலையீடு, தனியார் மயப்படுத்த முயற்சி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை பணிப்புறக் கணிப்பை மேற்கொண்டனர்.

அதற்கு ஆதரவாக வவுனியா நீர்வழங்கல் வடிகாலமைப்பு உத்தியோகத்தர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதுடன் அவர்களது அலுவலகத்திற்கு முன்னால் ஒரு மணிநேரம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர். இதன்போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

மக்களுக்கு அவசியமான தேவையினை நாம் நேரம் பாராது வழங்கி வருகின்றோம். எமக்கு 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பு இன்று வரை இந்த அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை. உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு 10 வீத நியமனம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் அது நிறுத்தப்பட்டு தற்போது அரசியல் ரீதியாக நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

எமது நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையை தனியார் மயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனைநாம் வன்மையாக கண்டித்து எமக்கு நீதியை வழங்குமாறு இந்த போராட்டத்தை மேற்கொள்கின்றோம். எமக்கு தீர்வு கிடைக்காது விடின் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் தெரிவித்தனர்.(2-250-281)




# குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்ட தூரம் பயணிக்கின்றோம்

## -பாதிக்கப்பட்ட மக்கள்-



(கண்டாவளை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நிலவும் வரட்சி காரணமாக தமக்கான குடிநீர் பெற்றுக் கொள்வதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆரோக்கியபுரம் எட்டாம் கட்டை, ஆகியபகுதிகளிலும் ஆனைவிழுந்தான் அக்கராயன் ஆகிய பகுதிகளிலும் வாழ்ந்து வரும் குடும்பங்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இப்பகுதியில் கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுவதுடன், எஞ்சியிருக்கின்ற கிணறுகளில் ஒரு சில கிணறுகளைத் தவிர ஏனைய கிணறுகள் உவர் நீர்க்கிணறுகளாகவே காணப்படுகின்றன.

இதனால் இந்தப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் தமக்கான குடிநீரைப்பெற்றுக் கொள்வதில் மிக நீண்ட தூரம் பயணித்து தமக்கான குடிநீரைப்பெறவேண்டிய அவலநிலை காணப்படுகின்றது.

ஆகவே இவ்வாறு காணப்படுகின்ற பிரதேசங்களுக்கு குடிநீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரியுள்ள மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக மேற்கொண்ட பயிர்ச்செய்கைகள் தண்ணீர் இன்றி அழிவடைந்து வருவதாகவும் பாதிக்கப்பட்டமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (2-315)

# உற்பத்தி செய்யப்படுகின்ற 10 ஆயிரம் லீற்றர் பால் உள்ளூர் தேவைகளுக்கு பயன்படுகின்றது

### கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலில் பத்தாயிரம் லீற்றர் வரையில் உள்ளூர் தேவைக்குப் பயன்படுத்தப்படுவதாக மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் எஸ்.கௌரிதிலகன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தேவைகளில் ஒன்றாக கால்நடை வளர்ப்பு காணப்படுகின்றது.

இந்நிலையில் கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரவைகள் இன்மை மற்றும் பாலுக்கான விலைதளம்பல் என்பவற்றால் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரப்பணிப்பாளர் மாவட்டத்தில் திறந்தவெளி வளர்ப்பு முறையிலான கால்நடைகளே அதிகம் உள்ளன.

உள்ளக வளர்ப்புமுறைகளில் குறைந்த பண்ணையாளர்களே கால்நடைகளை வளர்த்து வருகின்றனர்.

தற்போது 35ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் மாவட்டத்தில் காணப்படுகின்றன.

நாளொன்றுக்கு இருபத்து இரண்டாயிரம் லீற்றர் வரையான பால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இதில் 12ஆயிரம் லீற்றர் பால் பண்ணையாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றது. ஏனைய பத்தாயிரம் லீற்றர் பால் உள்ளூர் தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் குறிப்பிட்ட சில பகுதிகளில் பாலை சந்தைப்படுத்துதலில் சிரமங்கள், பாலுக்கான விலைத் தளம்பல் என்பன காணப்படுவதாக பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்ற பண்ணையாளர்கள் தமது திணைக்களங்களிடம் தொடர்புகொண்டால் அதற்கான நடவடிக்கைகளை செய்து கொடுக்க முடியும்என்றும்அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)

## இல்லமெய்வல்லுநர் திறனாய்வு

(பூநகரி)

கிளி/பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் கு.லெனின்குமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் அ.நடராஜன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.ஜோன் குயின்ரஸ், கௌரவவிருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள உதவிக்கல்விப் பணிப்பாளர் தி.ஆயவன், பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரெட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(2-84)

# சுவரொட்டிகளை அகற்ற களத்தில் மூன்று குழுக்கள்

(கிளிநொச்சி)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலையொட்டி சட்ட விரோதமான முறையில் ஒட்டப்பட்டுள்ள பிரசார சுவரொட்டிகளை அகற்றவும் வீதிகளில் கீறப்பட்டுள்ள சின்னங்கள் அழிப்பதற்கும் கிளிநொச்சி மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தால் நேற்று முன்தினம் முதல் மூன்று குழுக்கள் களத்தில் இறக்கி விடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி. அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் கட்சிகள் சுயேட்சைக் குழுக்கள் ஆகியவற்றினால்சட்டவிரோதமான முறையில் பிரசார சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுக் காணப்படுகின்றன.

இதேவேளை பிரதான தார் வீதிகளில் கட்சிக்கான சின்னம் பெயின்ரினால் கீறப்பட்டுள்ள நிலையும் காணப்படுகின்றது.

இந்நிலையில் இவற்றை அழிப்பதற்கான பெயின்றுகள் உள்ளடங்கலாக மூன்று குழுக்கள் களத்தில் இறக்கி விடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-254)

# முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள்

## கரை திரும்புவதற்கு வெளிச்சவீடு அவசியம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு வெளிச்சவீட்டை அமைப்பதற்கு. உரிய பொறுப்பாளர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவில் வெளிச்ச வீடு ஒன்று இல்லாததால் அங்கு தொழில் செய்கின்ற மீனவர்கள் இரவு நேரங்களில் தொழிலுக்கு சென்று திரும்பும்போது திசைமாறிச் சென்று பலத்த இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்த நிலை மாற்றம் பெற்று எமது முல்லைத்தீவு மீனவர்கள் தொழிலைச் செய்து கரைதிரும்புவதற்காக வெளிச்சவீடு அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

மேலும் இரவு நேரங்களில் திசைமாறிச் செல்லும் மீனவர்களின் இடர்பாடுகள் மற்றும் அவர்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு முல்லைத்தீவு நகரில் 1896 ஆம் ஆண்டு இலங்கை துறைமுக அதிகார சபையால் கலங்கரை விளக்கம் என்று சொல்லப்படும் வெளிச்சவீடு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது.

1896 ஆம் ஆண்டு 66அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருந்த குறித்த வெளிச்சவீடானது கடந்த காலங்களில் நடைபெற்ற அனர்த்தங்களோடு அழிவடைந்துவிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இப்போது முல்லைத்தீவு கடற்பரப்பில் 5000இற்கு மேற்பட்ட மீனவர்கள் தொழில் செய்து வருகின்றார்கள். மீனவர்கள் வெளிச்சவீடு இன்மையால் தமக்கு ஏற்படும் சிரமங்களை தங்களுடைய அமைப்புகளின் ஊடாக உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியிருந்தனர். இருந்தும் அதற்கான தீர்வுகள் அவர்களுக்குக் கிடைக்காத நிலை தொடர்ந்து காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்களிலும், மாகாணசபை அமர்வுகளிலும் தொடர்ச்சியாக பலதடவை வலியுறுத்தப்பட்டது.

இன்றுவரை மாவட்ட மீனவர்களின் அத்தியாவசிய இத்தேவை நிறைவேற்றப்படவில்லை. தொடர்புடையவர்கள் விரைந்து இத் தேவையின் இன்றியமையா நிலையை கவனத்தில் கொண்டு உதவ வேண்டுமென தெரிவித்தார். (2-281)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்-2018

- கொண்ட கொள்கை வழிநின்று குரல் கொடுக்கும் நேர்மையான அரசியல்
- தமிழரின் அவலத்தை சர்வதேசத்திற்கு எடுத்துரைக்கும் வல்லமை
- எங்கள் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு. அதற்காக சர்வதேசத்தின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல்
- விலைபோகாத, ஊழலற்ற, நேர்மையான தெரிவு





சுபீட்சமான தமிழர் வாழ்வுக்காக உங்கள் வாக்குகள்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்



(அ-019)

தமிழ்த் தேசியப் பேரவை

உரிமைக்காக ஏங்கும் தமிழ் மக்கள்


# அரசாங்கத்திற்கான ஆதரவு கூட்டமைப்பின் இராஜதந்திரம்

## செல்வம் எம்.பி. விளக்கம்



(கல்முனை)


அரசாங்கத்திற்கான கூட்டமைப்பின் ஆதரவானது ஒரு இராஜதந்திரமே தவிர அதனை அரசாங்கத்திடம் சோரம் போவதாக கூற முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலக நாடுகள் எமது ஆயுதப் போராட்டத்தை மௌனிக்கச் செய்த பின்னர் தமிழ் மக்களின் இறைமை, உரிமை, விடுதலை என்பன சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மீது சுமத்தப்பட்டது.

நாங்கள் பல சந்தர்ப்பங்களில் பல விட்டுக் கொடுப்புகளைச் செய்துள்ளோம். ஆனால் நாம் ஒத்துழைக்கவில்லை என இந்த அரசாங்கமும் தங்களது நியாயப்பாட்டை சொல்வதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கின்ற காலகட்டத்தில் இருக்கின்ற காரணத்தினாலேயே சில சந்தர்ப்பங்களில் இந்த அரசாங்கத்திற்கு உதவி வருகின்றோம் என்பதே உண்மை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முன்னாள் எம்.பி.சரண முன் பிணையில் விடுவிப்பு



(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தன, முன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதவான் மனுஜா லக்மாலி முன்னிலையில், அவருக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக கடமையாற்றிய காலத்தில், தமக்கு வேண்டப்பட்டவர்களின் வாகனத்தை லொத்தர் சபை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதால், அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தியதாக தெரிவித்து இவருக்கு எதிராக மூன்று இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: செவ் 2இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:BA/பிரான்ஸ் PR
தொ.இ: B/7376

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 61 சூரி செவ் 10 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA/ஆசிரியர்
தொ.இ: B/7378

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 60
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
தொ.இ: B/7380

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 63 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: தொழில்நுட்ப உத்தியோகத்தர்
தொ.இ: B/7381

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 35 செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: HNDE, BA, MA/ஆசிரியர்
தொ.இ: G/6557

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 32
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6565

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 35
உயரம்: 150cm
தகைமை/தொழில்: BSc/அரசதொழில்
தொ.இ: G/6567

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6570

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5484
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## தற்காலிக ஆள் அடையாள அட்டைக்கான

# வாக்காளர்களைப் புகைப்படம் பிடிக்கும் வேலைத்திட்டம் கிளிநொச்சியில் இன்றுவரை

## உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்றுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பின் (பவ்ரல்) அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட தேர்தல் திணைக் களத்தின் ஏற்பாட்டிலும் வாக்காளர்களை இலவசமாகப் புகைப்படம் எடுத்து தேர்தல் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் தற்காலிக ஆள் அடையாள அட்டையை வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்று கிளிநொச்சி மாவட்ட தேர்தல் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலினை முன்னிட்டு வாக்களிக்கவுள்ள வாக்காளர்களில் சுமார் 4 ஆயிரம் பேருக்கு மேல் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள எந்த விதமான ஆள் அடையாள அட்டைகளும் இல்லாமல் இருப்பது தெரியவந்துள்ளதை அடுத்து "நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்றுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பின் (பவ்ரல்) அனுசரணையுடனும் கிளிநொச்சி மாவட்ட தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டிலும் வாக்காளர்களை இலவசமாக புகைப்படம் எடுத்து தேர்தல் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் தற்காலிக ஆள் அடையாள அட்டையை வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்று கிளிநொச்சி மாவட்ட தேர்தல் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆள் அடையாள அட்டை இல்லாத வாக்காளர்களை இலவசமாகப் புகைப்படம் பிடிக்கும் விசேட வேலைத் திட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டு இன்று சனிக் கிழமை பிற்பகல் 5 மணி வரை நடைபெறவுள்ளது.

இந் நிலையில், தேர்தல் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் தற்காலிக ஆள் அடையாள அட்டைக்கான புகைப்படங்கள் பிடிக்கும் இடங்கள் மற்றும் கால நேர அட்டவணை தொடர்பில், மக்களை விழிப்புணர்வூட்டுவதற்காக ஒலிபெருக்கி சாதனம் ஊடாக கிராமங்கள் தோறும் அறிவித்தல் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் பிரகாரம், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள பொதுநோக்கு மண்டபங்களில் வைத்து படப்பிடிப்பு நடைபெற்று வருகின்றது.

எனவே, வாக்காளர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தற்காலிக ஆள் அடையாள அட்டையைப் பெற்று தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் தெரிவித்துள்ளார். (2-15)

# இரண்டாயிரத்து 58 வாக்காளர்கள் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் தபால்மூலம் வாக்களித்துள்ளனர்

## உதவித்தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளின் தேர்தலினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற தபால்மூல வாக்களிப்பில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக 2 ஆயிரத்து 210 வாக்காளர்கள் வாக்களிக்க விண்ணப்பித்திருந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் ஐந்து மணிவரையிலான காலப் பகுதிவரை 2 ஆயிரத்து 59 வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாகவும் இன்னமும் 151 தபால்மூல வாக்காளர்களே வாக்களிக்க வேண்டியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்ட தேர்தல் திணைக்களத்திற்குட்பட்ட கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் தபால்மூலம் வாக்களிப்பதற்காக ஆயிரத்து 665 வாக்காளர்கள் வாக்களிக்க விண்ணப்பித்திருந்த நிலையில் ஆயிரத்து 552 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

இதே போன்று, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் 233 வாக்காளர்கள் வாக்களிக்க விண்ணப்பித்திருந்த நிலையில் 217 வாக்காளர்களும், பூநகரி பிரதேச செயலக பிரிவில் 312 வாக்காளர்கள் வாக்களிக்க விண்ணப்பித்திருந்த நிலையில் 290 வாக்காளர்களுமாக மொத்தம் 2 ஆயிரத்து 59 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த தபால்மூல வாக்களிப்பு வாக்காளர்களில் 699 பேர் வாக்களிக்க வேண்டிய நிலையில் இதுவரை 186 வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்துள்ளதாகவும் இன்னமும் 513 வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டியுள்ளது.

இந் நிலையில், தபால் மூல வாக்களிப்பு கடந்த 22, 25, 26 ஆம் ஆகிய தினங்களில் நடைபெற்று முடிந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணங்களினால் அன்றைய தினங்களில் தபால்மூலம் வாக்களிக்கத் தவறிய வாக்காளர்கள் நேற்று முன்தினம் வியாழக் கிழமையும் நேற்று வெள்ளிக்கிழமையும் கிளிநொச்சி மாவட்ட தேர்தல் திணைக்களத்திற்கு வருகை தந்து வாக்களிப்புச் செய்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (2-15)

# முல்லையில் ஆயிரத்து 812 பேர் நேற்று முன்தினம் தபால்மூல வாக்களிப்பில்

(பனிக்கன்குளம்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்து வாக்களிக்கத் தவறியவர்களுக்கான தபால்மூல வாக்குப் பதிவுகள் முல்லைத்தீவில் அமைதியான முறையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாடு பூராகவும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குப்பதிவின் முதலாம் கட்டம் கடந்த மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற நிலையில் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவுகள் 25, 26 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இவற்றில் வாக்களிக்கத் தவறிய பொலிஸார் பொலிஸ் நிலையங்களிலும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மாவட்ட செயலகத்திலும் ஏனைய அரச அலுவலர்கள், முப்படையினரும் மாவட்ட தேர்தல் அலுவலகத்திலும் தமது வாக்குகளைப் பதிவு செய்தனர்.

தபால்மூல வாக்களிப்பு தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கா.காந்தீபனிடம் தொடர்பு கொண்டு வினவியபோது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் தபால்மூல வாக்களிப்புக்குத் தகுதிபெற்ற ஆயிரத்து 958 வாக்காளர்களில் இது வரை ஆயிரத்து 812 பேர் நேற்று முன்தினம் வரை வாக்களித்துள்ளனர். இதில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு 713 பேரும் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு 860 பேரும் துணுக்காய் பிரதேச சபைக்கு 147 பேரும் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு 92 பேருமாக மொத்தமாக ஆயிரத்து 812 பேர் வாக்களித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றைய தினமும் வாக்களிக்கத் தவறியவர்களுக்கான இறுதிக் கட்ட வாக்களிப்பு முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் நடைபெற்றது. (2-281)



## வேட்பாளரின் பதாகைக்கு விசமிகளால் தீ வைப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த பதாகைக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா ஏ-9 வீதியில் அமைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி. வேட்பாளர் ஒருவரின் தேர்தல் அலுவலகத்திற்கு முன்பாக இருந்த பதாகைக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை குறித்த வேட்பாளர் அலுவலகத்தை திறப்பதற்காக வந்தபோது முன்பாக இருந்த பதாகைகள் தீயூட்டப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார்.

எனினும் குறித்த பதாகைகள் முழுமையாக எரியவில்லை.

இது தொடர்பாக வவுனியா பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பியின் வவுனியா அமைப்பாளர் கு.திலீபன் தெரிவித்துள்ளார். (2-250)

# மண்டைக்கல்லாறு பாலத்திற்கு அருகில்

## முதிரை மரக்குற்றிகளுடன் பாரவூர்தி கைப்பற்று



(பூநகரி)

யாழ்ப்பாணத்திற்கு பாரவூர்தியொன்றில் கடத்தப்படவிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியுடைய சுமார் 30 இற்கு மேற்பட்ட முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, பூநகரி பொலிஸ் நிலையத்திற்கு நேற்று அதிகாலை 5 மணியளவில் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபில பண்டார தலைமையில் விரைந்த பொலிஸ் குழுவினர் பூநகரி மன்னார் வீதியில் மண்டைக் கல்லாறு பாலத்தருகில் பயணித்துக் கொண்டிருந்த பாரவூர்தியொன்றை மறித்து சோதனையில் ஈடுபட்டனர்.

பாரவூர்தியினுள் வீட்டுப் பொருட்களுடன் தென்னங் கன்றுகள், புடைவைகள் ஆகியவற்றால் மறைத்து வைக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு கடத்தப்படவிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியுடைய சுமார் 30 இற்கு மேற்பட்ட முதிரை மரக்குற்றிகளை கைப்பற்றி பூநகரி பொலிஸ்நிலையம் கொண்டு சென்று தடுத்து வைத்துள்ளனர்.

இதன் போது குறித்த பாரவூர்தியில் பயணித்த ஒரு பெண் உட்பட இரண்டு குழந்தைகளும் பூநகரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சாரதியும் உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முதிரை மரக்குற்றிகளை வன வளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைத்து பின்னர் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளதாக பொலிஸ் நிலைய பத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-84)

# குடிநீர் விநியோகிப்பதற்கு வளப்பற்றாக்குறை

## பூநகரி பிரதேச சபையினர்

(சண்டாவளை)

பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட 11 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு வருடம் முழுவதும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் தேவை ஏற்படுகின்றது என பூநகரி பிரதேச சபையினர் தெரிவிக்கின்றனர்.

பூநகரிப்பிரதேசத்தில் மக்களுக்கான குடிநீரை வழங்குவதற்கு போதிய வளங்கள் இல்லாதிருப்பதுடன், குடிநீரைப் பெறுகின்ற இடங்களில் நீர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் பூநகரிப் பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பூநகரிப் பிரதேச சபையிடம் தொடர்புகொண்டு வினவியபோது, பிரதேச சபையினால் ஏற்கனவே குடிநீர் விநியோகிக்கின்ற பகுதிகளுக்கு தொடர்ச்சியாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மக்கள் கோரிக்கை விடுகின்ற பகுதிகளுக்கு மேலதிக சேவைகளை வழங்குவதற்கு பிரதேச சபையிடம் போதிய வளங்கள் இன்றிக் காணப்படுகின்றது.

இதனை விட தண்ணீரைப் பெற்றுக் கொள்கின்ற தெளிகரை போன்ற இடங்களில் போதியளவு தண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

இதேவேளை பாடசாலைகளுக்கு பிரதேச சபையூடாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் அவ்வாறு பாடசாலைகளில் விசேடதேவைகளுக்கு தண்ணீர் கோரும் பட்சத்தில் தண்ணீர் வழங்கப்படுவதாகவும் பிரதேச சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# சட்டத்திற்கு முரணாக செயற்படும் கூல் மீது உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடர முடியும்

## யாழ்.பல்கலை. சட்டத்துறை தலைவர் குருபரன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

சட்டத்துக்கு முரணான வகையில் செயற்பட்டு வருகின்ற தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர்ரான ரட்ணஜீவன் கூல் மீது உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க முடியும் என யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான குமாரவடிவேல் குருபரன் தெரிவித்துள்ளார். மேலும் நீதிமன்றை அவமதிக்கும் வகையில் கூல் வெளியிட்ட கருத்துக்களுக்கு கண்டனமும் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் தமிழ்த் தேசிய பேரவை கட்சி தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டது என தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் ஒருவரால் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து ஆலயத்தின் பிரதமகுரு மல்லாகம் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டு வழக்கிலிருந்து எந்த நிபந்தனையும் இல்லாமல் விடுவிக்கப்பபட்டார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் குறித்த வழக்குத் தொடர்பில் உரிய முறையில் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான ரட்ணஜீவன் கூல் கே.கே.எஸ்.பொலிஸ் அத்தியட்சகருக்கு மேலும் ஒரு முறைப்பாட்டை வழங்கினார்.

இதனால்ஆலயத்தின்பூசகர் சட்டத்தரணி மணிவண்ணனர், தமிழரசுக் கட்சி வேட்பாளர் எஸ்.சுகிர்தன், தமிழ்த்தேசிய பேரவையின் வேட்பாளர் நிகேதன் உட்பட 6 பேருக்கு நீதிமன்றம் .அறிவித்தல் அனுப்பியது. எனினும்ஏனையவர்களுக்கு கிடைத்த நீதிமன்ற அறிவித்தல் தனக்குக் கிடைக்கவில்லை என கூல் கூறுகின்றார். இதில் உண்மை என்ன என அனைவருக்கும் தெரியும்.

இதுதவிர குறித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதற்கான காரணம், முறைப்பாட்டாளரிடம்மேலதிக ஆவணங்கள் இல்லை என முறைப்பாட்டாளரே மன்றில் கூறிவிட்டார். அடுத்து விசாரணை செய்த பொலிஸார் போதிய ஆதாரங்கள் இல்லை என கூறிவிட்டனர். இந்த நிலையில் நீதிமன்றம் என்ன செய்ய முடியும்? இதனால் தான் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

தான் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் எடுக்கப்பட்ட படங்களை பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பிக்கவில்லை எனவும், நீதவான் எதிர்த்தரப்பு கொடுத்த ஆதாரங்களை வாசிக்கவில்லை எனவும் பச்சை பொய் கூறியுள்ளார். இந்தச் சான்றுகள் நீதிமன்றில் வழங்கப்பட்டதால் தான் மேலதிக சாட்சியங்களைப் பெறுவதற்காக 6 பேருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டது.

இவ் வாறு வழக்கில் என்ன நடைபெற்றது என்று தெரியாமல் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கூல் கருத்து வெளியிட்டமை கண்டிக்கத்தக்கது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெண் வேட்பாளர் ஒருவரைத் தாக்கினார் என்றும், தமிழரசுக் கட்சியின் யாழ்.மாநகர வேட்பாளர் ஆனோல்ட் 100 பேருடன் ஊர்வலம் சென்றார் என்பதற்கும் வலிமையான சான்றுகள் இருந்தும் அவை நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்படவில்லை.

ஆனால் ஆலய வழிபாட்டில் ஈடுபட்ட ஒரு சாதாரண விடயத்திற்கு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. குறித்த வழக்கை தொடர்ந்த கட்சி (தமிழரசுக்கட்சி) குறித்த கட்சிக்கு (தமிழ்த்தேசிய பேரவை) எதிரான பிரசாரமாக முன்னெடுத்து வருகின்றது. இதற்கு தேர்தல்ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரும் உடந்தையாக செயற்படுகின்றார்.

தமிழ்த்தேசிய பேரவையின் வேட்பாளரான மணிவண்ணன் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற நிகழ்வில் இல்லாத போதிலும் அவருக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டது என்பது அவர் மீது ஒரு தவறான விம்பத்தை ஏற்படுத்துவதற்காகவோ அன்றி வேறொன்றும் இல்லை. பிரதிப் பொலிஸ்மா அதிபர் வரைக்கும் பிரச்சினையைக் கொண்டு சென்றுவிட்டு, பொலிஸார் இலஞ்சம் பெற்றுவிட்டனர் என்று தற்போது கூறுவது எதற்காக?

நீதவான் நீதிமன்றத்தை கடுமையாக விமர்சிக்கும் கூல் தான் இந்த விடயத்தில் முரண்பாடான வகையில் செயற்பட்டு வருகின்றார். ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பொலிஸாருக்கு வாக்குமூலம் கொடுப்பது தேர்தல் சட்ட விதிகளுக்கு உட்பட்டதா?

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ஒரு கட்சியினரைப் பார்த்து கீழ்த்தரமான முறையில் விமர்சிக்கின்றார். தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான ரட்ணஜீவன் கூல் மல்லாகம் நீதிமன்றில் வழக்கு நடைபெற்றுக்கொண்டு இருக்கும் போதே கொழும்பிலிருந்து வெளிவருகின்ற பத்திரிகை மற்றும் இணையத்தளம் ஆகியவற்றுக்கு கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார்.

நீதிமன்ற விடயத்தை திசை மாற்றுவது என்பது தண்டனைக்குரிய குற்றமாகும். அவர் எழுதிய கட்டுரையில் சில தவறான சொற்பிரயோகங்களை நீக்கி விட்டுத்தான் ஒரு இணையத்தளம் அவரது கட்டுரையை பிரசுரம் கூட செய்துள்ளது. இவ்வாறு அனைத்து வகையிலும் கூல் தான் சட்டத்துக்கு முரணான வகையில் செயற்பட்டு வருகின்றார்.

தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய மீது நாங்கள் விமர்சனங்களை முன்வைக்க வில்லை. அவருடைய காலத்தில் நீதியான தேர்தல் நடைபெற்றது என நீதிமன்றில் கூட நாங்கள் கூறியுள்ளோம். குறித்த ஒரு உறுப்பினர் மாத்திரமே தேர்தல் ஆணைக்குழு மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றார்.

அரசியலமைப்பு 104 எச் 1 இன் பிரகாரம் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் சட்டத்திற்கு முரணான வகையில் செயற்பட்டால் உச்ச நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியும். அதனை தமிழ்த்தேசிய பேரவையின் வேட்பாளர் மணிவண்ணன் செய்ய வேண்டும். மேலும் தேர்தல் ஆணைக்குழுவை தவறாக பயன்படுத்தும் உறுப்பினர் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் அரசியல்வாதி ஒருவர் ஊடகங்களை மிரட்டுவது போன்று தேர்தல் ஆணைக்குழு உறுப்பினரான கூலும் மிரட்ட ஆரம்பித்திருக்கின்றார் என குருபரன் மேலும் தெரிவித்தார். (இ-4)

## தனியார் காணி விடுவிப்பு



(கரணவாய்)

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காங்கேசன்துறை மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள தனியார் காணி விடுவிப்பு தொடர்பான ஆவணம் தெல்லிப் பழை பிரதேச செயலாளர் சிவஸ்ரீ யிடம் 515 கட்டளைப்பிரிவின் அதிகாரியால் கையளிக்கப்பட்டது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் பிரதேச செயலாளர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலக அலுவலர்கள் மற்றும் இராணுவ வத்-தரப்பினரும் கலந்து கொண்டனர். (இ-60)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொறியியலாளர் நிறுவகம் - வட பிராந்திய (IESL) யாழ். முகாமையாளர் சம்மேளனம் (JMF) இணைந்து "வடக்கு பிராந் தியத்தில் இளைஞர் தொழில் முனைவு அபிவிருத்தி" என்ற விடயத்தினை பற்றிய கலந் துரையாடல் ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது. இக்கலந்துரையாடல்நாளை மறுதினம்திங்கட்கிழமைமாலை4.30 இற்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கருத்தரங்கின் வள வாளராக பேராசிரியர் கே. செல்வகுமார் கலந்துகொள் வார். இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-7)


வைத்தியம்

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு/மார்பு/கை) ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும்

தொடர்பு: Shan's Health Care, 255, K.K.S. Rd, Kokuvil. TP: 077 035 7307

(2470)



JAFFNA COLLEGE
UNDERGRADUATE DEPARTMENT
No.464, Hospital Road, Jaffna.

யாழ்ப்பாணத்தில் 120 வருடங்களுக்கு மேலாக ஆங்கிலக்கல்விக்கு ஒரே ஒரு ஸ்தாபனமாக விளங்கும் Jaffna College இந்த ஆண்டில் புதிதாக நான்கு பாடநெறிகளை ஆரம்பிக்கின்றது.

Advanced SPOKEN ENGLISH With Grammar

Speciality of this Course : பூரணமான Grammar, Vocabulary development, Role Play- Conversation Practice, Presentation, Group work மொத்தம் 2 1/2 மாதங்கள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினசரி காலை 8.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை வகுப்புக்கள் நடைபெறும்.

DIPLOMA IN ENGLISH

Reading | Writing | Speaking & Listening

"Diploma in English" இது ஓர் அதி உயர்தரம் வாய்ந்த இந்தப் பாடநெறி Cambridge, Pearson, Macmillan போன்ற நிறுவனங்கள் சிபார்சு செய்யும் அண்மைக் காலத்து அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

Course முடிவில் கல்லூரியினால் Certificate வழங்கப்படும். இந்தச் சான்றிதழ்கள் இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் நன்கு அறிமுகமானவை.

IELTS

இந்த ஆண்டில் BRITISH COUNCIL லில் IELTS பரீட்சை எழுதி அதிக பட்ச Band எடுப்பவர்களுக்கு ஆறு Scholarship ஒவ்வொன்றிற்கும் 3000 பவுண்ட்ஸ், இலங்கைப்பண மதிப்பில் ரூபா ஆறு இலட்சம் வரை கொடுக்க உத்தேசித்துள்ளது. நீங்கள் எமது கல்லூரியில் IELTSற்கு ஆயத்தப்படுத்தி ஓர் Scholarship வெற்றி பெறும் வாய்ப்பினைப் பெறுங்கள்.

Course Schedule
Full Time : Monday to Friday 1.00p.m. to 3.00p.m.
Part-time : Saturday and Sunday 9.00a.m. to 1.00p.m.

IELTS LIFE SKILLS A1 B1

IELTS - Registration Centre for British Council

மேலதிக விபரங்களுக்கு: (வி-1476)

JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT
No.464, Hospital Road, Jaffna.
Tel: 021 222 0384, 021 222 3382, 077 880 38

# இந்திய வரவு -செலவுத் திட்டத்தில் இலங்கைக்கு இரட்டிப்பு நிதியுதவி

## அயல் நாடுகளுக்கு கூடுதல் நிதி

(டில்லி)

இந்திய வரவு-செலவுத் திட்டத்தில், இலங்கை உள்ளிட்ட அயல்நாடுகளில் இந்திய வெளிவிவகார அமைச்சு மேற்கொள்ளும் உதவித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

தற்போது ஆட்சியிலுள்ள நரேந்திர மோடி அரசாங்கத்தின் கடைசி வரவு-செலவுத் திட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் அருண் ஜெட்லியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதில் இந்தியாவின் கடல்சார் மூலோபாய இராஜதந்திரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அயல்நாடுகளான இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவு, சிஷெல்ஸ், மொறிசியஸ் போன்ற நாடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக சீனாவின் தலையீடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக, இந்தியப் பெருங்கடலினுள்ள தீவு நாடுகளான இலங்கை, மாலைதீவு, சிஷெல்ஸ், மொறிசியஸ் போன்றவற்றுக்கு கணிசமான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு 200 கோடி இந்திய ரூபா ஒதுக்கப்பட்ட சிஷெல்ஸ்சுக்கு, இந்த ஆண்டு 300 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள 115 தீவுகளில் ஒன்றில் இந்தியா முழுமையான உட்கட்டமைப்பு வசதிகளையும் செய்து கொடுக்கவுள்ளது.

அத்துடன், விமான ஓடுபாதை, இறங்குதுறை என்பவற்றையும் இந்தியா அமைக்கவுள்ளது. இவை இராணுவ பயன்பாட்டுக்கு பயன்படுத்த அனுமதிக்கப்படாது.

கடந்த ஆண்டில் மொறிசியஸுக்கு 335 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிதி, இம்முறை 350 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான நிதி ஒதுக்கீடு, கடந்த ஆண்டு 75 கோடி ரூபாவாக இருந்தது. அது இம்முறை இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டு, 150 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் காங்கேசன்துறை துறைமுகத்தை இந்தியா புனரமைக்கவுள்ளது.

மாலைதீவுக்கு கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டது போன்று இந்த ஆண்டும் 125 கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஈரானின் சபஹார் துறைமுக அபிவிருத்திக்கு கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டது போன்று 150 கோடி ரூபாவை இந்த ஆண்டும் இந்தியா ஒதுக்கீடு செய்கிறது.

இந்தியாவின் வெளிநாட்டு உதவிகளில் பிரதான இடத்தை வகிக்கும் பூட்டானுக்கு, 2650 கோடி ரூபாய் ஒதுக்கப்படவுள்ளது.

நேபாளத்துக்கு 650 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 75 வீதம் அதிகமாகும்.

மியன்மாரில் திட்டங்களை மேற்கொள்ள 280 கோடி ரூபாய் ஒதுக்கப்படவுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், 15,011 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட, 213 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மணல் கடத்தி வந்த ஹன்டர் பொலிஸார் மீது மோத முயற்சி

## குடத்தனையில் பரபரப்பு சம்பவம்



(கரணவாய்)

மணல் கடத்தி வந்த ஹன்டர் வாகனத்தை பொலிஸார் நிறுத்த முற்பட்ட போது அவர்கள் மீது வாகனத்தால் மோதி விட்டு தப்பியோடிய ஹன்டர் வாகனம் கடல் நீரேரிக்குள் இறங்கியதையடுத்து கடத்தல்காரர்கள் தப்பியோடியுள்ளதாக காங்கேசன்துறை பிராந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு குடத்தனை ஆறாம் கட்டைச் சந்தியால் வரணி செல்லும் வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குடத்தனைப் பகுதியில் வகை தொகையின்றி மணல் கடத்தப்படுவதாகவும் இதற்கு பருத்தித்துறை பொலிஸார் உடந்தையாக இருப்பதாகவும் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து அவரின் கீழ் இயங்கும் விசேட பொலிஸ் குழு குடத்தனைப் பகுதியில் இரவு கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது.

அப்போது குடத்தனையில் இருந்து மணல்கடத்தி வந்த ஹன்டர்வாகனத்தினை பொலிஸார் மறித்துள்ளனர். வாகனத்தை நிறுத்தாத கடத்தல்காரர்கள் பொலிஸார் மீது வாகனத்தை மோத முற்பட்டுள்ளனர். இருப்பினும் பொலிஸார் பாய்ந்து தப்பிய நிலையில் அவர்களின்மோட்டார்சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

தப்பியோடிய வாகனம் குடத்தனை-வரணி வீதியில் உள்ள நீரேரி சதுப்புக்குள் இறங்கி சக்கரம் புதையுண்டு சரிந்த நிலையில் காணப்பட்டது. இதனையடுத்து கடத்தல்காரர்கள் தப்பியோடியுள்ளனர்.

குறித்த ஹன்டர் வாகனம் கொடிகாமம் பகுதியில் உள்ள ஒருவரின் பதிவில் உள்ளதாகவும் தற்போது அது குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரின் பராமரிப்பில் உள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இச்சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு அருகாமையிலேயே கடந்த 09.07.2017 அன்று மணல் கடத்தி வந்த வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் சமிக்ஞை காட்டிய போது தப்பிச் சென்ற வாகனம் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதில் இளைஞர் ஒருவர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

# டெங்கால் பலர் உயிரிழக்க அரசாங்கம் தான் காரணம்

## மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோய் தொற்றினால் மக்கள் உயிரிழக்கும் காரணத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார்.

சமகால அரசாங்கம் அச்சம் காரணமாக இரண்டரை வருடங்களுக்கு மேலாக தேர்தலை நடத்தவில்லை. இதனால் நகரங்களில் குப்பைகள் அதிகரித்து டெங்கு நோய் தொற்றில் பலர் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கல்கிஸையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மகிந்த இவ்வாறு குற்றம் சாட்டினார்.

உள்ளூராட்சி சபைகளை கலைத்து விட்டு தேர்தலை நடத்த தாமதித்துள்ளனர்.

உள்ளூராட்சி நிறுவனங்களை அரசாங்கம் தங்கள் கையில் எடுத்தமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலைக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் பொறுப்பு கூற வேண்டும் என மகிந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த காலத்திற்குள் நகரங்களில் குப்பைகள் அதிகரித்து துர்நாற்றம் வீச ஆரம்பித்து விட்டன. டெங்கு நுளம்பு தொற்றுகள் அதிகரித்துள்ளன.

டெங்கு தொற்றில் மக்கள் உயிரிழந்தனர். அரசாங்கம் கண்டுக்கொள்ளவில்லை என முன்னாள் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வடக்கு- கிழக்கு பிரிப்பு 'சிலரின் கபட நாடகம்'



## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

1987 ஆம் ஆண்டு இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தின் 13 ஆவது திருத்த சாசனத்தின் மூலம், வட கிழக்கு இணைப்பு இருந்து வந்த நிலையில், 18 வருடத்திற்குப் பின்னர் சிலரின் கபட நாடக நடவடிக்கை மூலம் நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்திருந்தது என எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் மாலை நற்பட்டிமுனை பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு முழுமையாக தமிழ் மக்கள் வாக்களித்து இருக்கின்றனர். இதன் பயனாக நாட்டில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய சம அந்தஸ்தை வழங்கக் கூடிய ஒரு அரசியல் தீர்வு ஏற்படவேண்டும் என்பதற்காக ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

முன்னைய ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அது பயனளிக்கவில்லை. அதன் பின் ஆட்சி மாற்றத்தினை தமிழ் மக்கள் ஏற்படுத்துவதற்கு முழுமையாக பங்களிப்பு வழங்கினார்.

அரசியல் தீர்வு விடயமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கணிசமான தூரம் பயணித்துள்ளது. இன்னும் ஒரு முடிவு கிடைக்கப்பெறவில்லை. அதனைப் பெறுவதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் 13 ஆவது அரசியல் சாசனத்தின் பிரகாரம் மாகாண சபைக்கான அதிகாரப் பகீர்வு அரசியல் சாசனத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட போதிலும் கூட அது முழுமையான தீர்வாக அமையவில்லை. அது நிலையான, உறுதியான, நிரந்தரமான அதிகாரப் பகிர்வாக அமையாதமையால் அன்று நாம் போட்டியிடவில்லை. ஏன் என்றால் முழுமையான தீர்வு எட்டப்படவேண்டும் என்பதற்காகப் போராடி வந்தோம்.

30 வருடகாலஆயுதப்போராட்டத்தின் பிற்பாடு தமிழ் மக்கள் உறுதியாகவும் ஒற்றுமையாகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய ஆணையின் பயனாலேயே இன்று தமிழ் மக்களின் பிரச்சினை சர்வதேசம் வரை தமிழ்க் கூட்டமைப்பு முன்னெடுப்பதற்கு உதவியாக இருக்கின்றது.

உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியல் சாசனத்தின் படி உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படும். அதுமட்டுமல்ல மத்திய அரசாங்கமோ மாகாண அரசாங்கமோ பல்வேறு சட்டங்களை உருவாக்கின்ற போது அதிகமான சட்டங்களை அமுல்படுத்துகின்ற அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படவேண்டும் என்ற விடயம் முன்வைக்கப்பட்டிருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# என் நெஞ்சில் இடம்கொண்ட ஈழத்துக் காந்தி அமரர் கந்தையா (காந்தி மாஸ்டர்)

ஈழத்தின் வடக்கே அமைந்த யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த நெய்தலும் மருதமும் சூழ்ந்த செந்நெல்லும் கரும்பும் தெங்கும் விளைகின்ற சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பழம்பெரும்பதியாம் மாதகல். இக்கிராமத்தில் வாழ்ந்த ஆறுமுகம் பொன்னம்பலத்திற்கும் நன்னிப்பிள்ளைக்கும் இரண்டாவது மகனாக 19.12.1918 இல் பிறந்தவர்தான் கந்தையா.

இவரின் சகோதரர்களாக செல்லையா, தில்லைநாதன், சின்னப்பிள்ளை ஆகியோராவார்.

கந்தையா தன் ஆரம்ப கல்வியை மாதகல் நுணசை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தொடங்கி 5 ஆம் வகுப்பு வரை அங்கு கல்வி கற்றார். பின்பு மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் 7 ஆம் வகுப்பு வரை கல்வி கற்றார்.

அதன்பின் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் கற்று இறுதியாக மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் கல்வி பயின்றார்.

இங்கு தமிழ் பேரறிஞரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பண்டிதர் க.பொ. இரத்தினம் தலைமையாசிரியராக இருந்தார். மாணவனின் கல்விச் செயற்பாடுகளையும் கல்வியில் ஆர்வத்தையும் நல்லொழுக்கங்களையும் அவதானித்த இவர் இவரிடம் அன்பும் பரிவும் காட்டி அவரின் கல்வி உயர்ச்சிக்கு உறு துணையாக விளங்கினார்.

இங்கு அமரர் அவர்கள் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்ததுடன் தானாகப் படித்து ஆசிரிய தராதரப்பத்திர பரீட்சையின் மூன்று பகுதிகளிலும் சித்தியடைந்ததால் தலைமை ஆசிரியர் க.பொ. இரத்தினம் அவர்களால் அப்பாடசாலையிலே தற்காலிக உதவி ஆசிரியராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

தலைமையாசிரியர் க.பொ. இரத்தினம் அவர்களின் சிபார்சின் பேரில் வவுனியாவில் உள்ள கருங்காலிக்குளம் அரசினர் பாடசாலையில் நிரந்தர நியமனம் கிடைத்தது. 19 வயதிலே ஆசிரியராக கடமையை ஆரம்பித்தார்.

அதன்பின் ஏறாவூர் அரசினர் பாடசாலை, பெரிய கிண்ணியா அரசினர் பாடசாலை, தாமரைவில்லில் புதிய அரசினர் பாடசாலை, திரியாய் அரசினர் பாடசாலை என்பவற்றில் 10 வருடங்கள் கடமையாற்றி அதற்கு மேல் அரச சேவையில் இருந்து 10.09.1947 இல் விலகுவதாக கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்து விலகிக் கொண்டார்.

அரச சேவையிலிருந்து விலகிய இவரை திருகோணமலையில் அன்று பிரதம கல்வி அதிகாரியாக இருந்த சந்திரசேகரம் அவர்கள் அப்போது இராம கிருஷ்ண மிஷன் தலைவராக இருந்த சுவாமி நடராஜானந்தா விடம் அழைத்துச் சென்று கலந்துரையாடிக் கொக்குவில் இராமகிருஷ்ண மிஷனில் ஆசிரியராக நியமனம் பெற்றுக் கொடுத்தார். பின்னர் தம்பலகாமம் சாரதா வித்தியாலயம், திருகோண மலை, கோணேஸ்வரா வித்தி யாலயம், திருகோணமலை புனிதவளனார் கல்லூரியிலும் ஆசிரியராக பணியாற்றி 25 வருட ஆசிரிய சேவையின் பின்னர் 43 ஆவது வயதில் ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.


"தம் கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் வாக்கிற்கு அமைய ஓய்வுபெற்றதிலிருந்து 99 வயதில் அமரராகும் வரை அதனை மெய்ப்பிக்கும் வகையில் பணி செய்வதையே தன் கடனாகக் கொண்டு வாழ்ந்தவர்.

அவருக்கு சாதி, சமய, இன, மத வேற்றுமைகள் எதுவும் கிடையாது. எல்லா மக்களும் கடவுளுடைய பிள்ளைகள், எல்லா சமய மக்களும் ஒரே கடவுளையே வணங்குகின்றனர். அனைத்துச் சமயங்களுக்கும் அடிப்படை அன்பு, ஆதலால் சமயப் போட்டி கள், தேசப்போட்டிகள் அரசியல் போட்டிகள் ஒன்றும் இருக்கத்தேவையில்லை.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கொள்கைக்கு எல்லோரும் அன்பாகவும் சகோதரர்களாகவும் வாழ வேண்டும் என்ற தத்துவத்தை நடைமுறையில் வாழ்ந்து காட்டினார்.

1941 ஆம் ஆண்டு முதல் இறுதிக் காலம் வரை வெள்ளிக்கிழமைகளில் உபவாசம் இருப்பதோடு இடை இடையே மௌன விரதமும் அனுஷ்டித்து வந்தார்.

1945 ஆம் ஆண்டிலிருந்து கோப்பி, தேநீர் அருந்து வதையும், 1947 இல் இருந்து காரம் சேர்ந்த உறைப்பு உணவு வகைகள் உண்பதையும் 1952 முதல் சோடாப்பானம், ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்கள் பருகுவதையும் கைவிடலானார்.



ஈழத்துக் காந்தி அடிகளார் அமரர் பொன்னம்பலம் கந்தையா (காந்தி மாஸ் ரர்) 03.02.2017 இல் அமரராகி ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

உயிர் வாழ்வதற்கு உண்டதேயன்றி சுவைக்க உண்டதற்காக உயிர் வாழ்வதில்லை என்ற காந்தியத் தத்துவத்தை இறுதி வரை உறுதியாகக் கடைப்பிடித்தார்.

02.04.1949 நீர்வேலி சி. வேலாயுதபிள்ளை பண்டிதர் துரைசிங்கம், ஹண்டி பேரின்ப நாயகம் போன்ற பேரறிஞர் பலரை உறுப்பினராகக் கொண்டு அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தை உருவாக்க உறுதுணையாக இருந்தார். சங்கத்தின் பொருளாளராக தெரிவு செய்யப்பட்டு பல ஆண்டுகள் கடமையாற்றினார்.

சத்தியசாயி சேவா சமித்தி, தெய்வீக ஒளிச்சங்கம், திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை, திருகோணமலை ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் சமாதான சபை, முதலிய தொண்டர் ஸ்தாபனங்களில் அங்கத்தவராக இருந்து கர்மயோகப் பணி புரியும் தளங்களாக கருதிப் பணியாற்றி வந்தார்.

இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணிபுரிந்த வேளையில் இராம கிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியோரின் கொள்கைகள், கோட்பாடுகளால் கவரப்பட்டார்.

ஆன்மீகப் பெரியோர்களின் ஆன்மீக அறநீதிக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி அவர்களின் ஆன்மீக மேம்பாட்டை வளர்க்க வேண்டுமெனப் பெரு விருப்பம் கொண்டார். ஓய்வு பெற்றதன் பின்னர் இச் சிந்தனைக்கு மெருகூட்டி எல்லா ஆலயத் திருவிழாக்களிலும் ஆன்மீகப் புத்தகங்களைக் கொண்டு சென்று அடக்க விலையில் விற்பனை செய்து பொது மக்களுக்கு சமய ஆன்மீகக் கருத்துக்களைப் பரப்பினார்.

இராமகிருஷ்ண விஜயப் புத்தகத்தை மக்களிடையே பரப்பி ஆன்மீகச் சிந்தனையை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலைகள், வீடுகள் தோறும் தள்ளாத வயதிலும் தானே நேரில் சென்று விநியோகம் செய்துவந்தார்.

நேரத்தை நல்ல முறையில் பயன்மிக்கதாக்க அமரர் அவர்கள் நேர முகாமைத்துவத்தை கடைப்பிடித்தார். ஒரு நாளில் உள்ள 24 மணித்தியாலயத்தில் குடும்பத்திற்காக உழைக்க 6 மணி த்தியாலமும் குடும்ப வேலைகளுக்காக 6 மணித்தியாலமும் 6 மணித்தியாலம் நித்திரைக்கு 6 மணித்தியாலம் மக்களுக்காகவும் ஆன்மீகப் பணிகளுக்காகவும் செலவிட்டார்.

அமரர் ஐந்து வயதில் படிக்கும் போது ஒரு சைவப் பெரியார் பாடசாலைக்கு வந்து நீங்கள் சைவப்பிள்ளைகள் மச்சம், மாமிசம் உண்ணக்கூடாது என்று பிரசங்கம் செய்தார்.

100 பிள்ளைகள் படித்த இடத்தில் இந்த உபதேசம் அமரர் காதில் ஆழமாகப் புகுந்தது. வீட்டிற்குச் சென்று தாயாரிடம் இந்தச் செய்தியையும் பிரசங்கத்தையும் கூறி இனிமேல் தான் மச்சம், மாமிசம் சாப்பிடமாட்டேன் என்று கூறினார்.

தாயாரும் உன் விருப்பம் அதை விட்டுவிடு என்று உத்தரவு கொடுத்தார். அன்றிலிருந்து மச்சம், மாமிசம் சாப்பிடுவதை விட்டுவிட்டார்.


அமரர் அவர்களுக்குக் கிடைத்த பட்டங்களும், பாராட்டுக்களும் ஏராளம். ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சிவத்தமிழ் விருது, திருகோணமலை ஆளுநர் விருது, திருகோணமலை நகர முதல்வர், சித்தாந்த ரத்தினம், காந்தியச்சுடர், இணைபணிச் செம்மல், மூதறிஞர் வாழ்நாள் சமூக சமயச் சாதனையாளர் என்பவையாகும்.

பட்டங்கள் பல கிடைத்த போதும் தனது பெயருக்கு முன்பாகவோ, அல்லது பின்பாகவோ அப்பட்டங்களை போட்டுக் கொள்ள விரும்பாதவொரு மனிதன் இவர். ஐயா 99 வயதைப் பூர்த்திசெய்து நூறாவது வயதில் அடியெடுத்து வைத் தார். நாம் சந்தோஷ மிகுதியால் மகிழ்ச்சியுற்று அமரரின் நூற் றாண்டு விழாவை மிகவும் சிறப் பாக கொண்டாடுவதற்கு ஆவ லாக இருந்தோம்.

எதிர்பாராத விதமாக 03.02.2017 ஆம் திகதி வெள்ளி எம்மை பெருந்துயரில் ஆழ்த்தி இறைவன் திருவடி நிழல் அடைந்தார்.

அளவையூர்
சைவப்புலவர், பண்டிதர்,
வைத்தியலிங்கம்,
பாலகிருஷ்ணன்

# அலோசியஸின் பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ்; 24 நிறுவன வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கான தீர்மானம் நீடிப்பு



(கொழும்பு)

பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் (அலோசியஸ்) நிறுவனத்திற்கு சொந்தமான 24 நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் நீடிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சார்பில் சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையைக் கவனத்திற் கொண்ட கொழும்பு மேல் நீதிமன்றம், மத்திய வங்கியின் நிதி விசாரணைப் பிரிவின் பணிப்பாளரினால் கடந்த வாரம் பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்திற்கு சொந்தமான 24 நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நீடிக்க உத்தரவிட்டுள்ளது.

இந்த வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கான தீர்மானம் 30 நாட்கள் செல்லுபடியாவதுடன், அதனை மீண்டும் புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் காணப்படுகின்றது.

பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனம் அல்லது அதன் சார்பில் செயற்படும் வேறு தரப்பினரால் மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கலின் மூலமாக முறையற்ற விதத்தில் ஈட்டப்பட்ட நிதி வேறு தரப்பினருக்கு வழங்கப்படுவதைத் தவிர்க்கும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம், குறித்த நிறுவனத்தினால் சட்ட விரோதமாக ஈட்டப்பட்ட நிதியை எதிர்காலத்தில் மீண்டும் அரசினால் அறவிடுவதற்கும் அரசுடைமையாக்குவதற்கும் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பயனற்று செல்லாது அமையும் வகையில் அந்த நிறுவனங்களின் கணக்குகளில் உள்ள நிதி பாதுகாப்பாக இருப்பது உறுதி செய்யப்படுகின்றது.

பிணைமுறி கொடுக்கல் வாங்கலினால் அரசிற்கு ஏற்பட்ட இழப்பை மீண்டும் அறவிடும் செயற்பாடுகள் மற்றும் இந்த சட்டவிரோத நடவடிக்கையுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதற்காக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளின் வெற்றி இந்த வழக்குத் தீர்ப்பின் மூலமாக மேலும் உறுதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாரதம்

## ஜல்லிக்கட்டுக்கு எதிரான வழக்கு அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றம்

### இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவிப்பு



(டில்லி)

ஜல்லிக்கட்டு சட்டத்திற்கு எதிராக பீட்டா உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் தொடர்ந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டியை நிரந்தரமாக நடத்தும் வகையில் தமிழக அரசு சட்டத்திருத்த மசோதாவை சட்டமன்றத்தில் நிறைவேற்றியது.

இதேபோல் கர்நாடகாவில் பாரம்பரியமாக நடத்தப்பட்டுவரும் கம்பளா எனப்படும், எருது பந்தயத்தை தடையின்றி நடத்துவதற்காக கர்நாடக மாநில சட்டமன்றத்தில் சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டங்களை எதிர்த்து விலங்குகள் நல அமைப்பான பீட்டா மற்றும் விலங்குகள் நல ஆர்வலர்களால் இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கின் விசாரணை தலைமை நீதிபதி உள்ளிட்ட 2 நீதிபதிகள் கொண்ட அமர்வில் நடைபெற்று வந்தது.

விசாரணையின்போது இரு தரப்பு வழக்கறிஞர்களும் தங்கள் வாதங்களை முன் வைத்தனர். அப்போது, மத்திய அரசின் பொது சட்டங்களை மீறும் வகையில் மாநில அரசுகள் சட்டம் இயற்ற முடியுமா? என நீதிபதிகள் கேள்வி எழுப்பியதுடன், ஜல்லிக்கட்டு அனுமதியை எதிர்க்கும் மனுக்கள் மீதான விசாரணையை அரசியல் சாசன அமர்வு விசாரிக்கும் என்றும் தெரிவித்தனர்.

இந்நிலையில், ஜல்லிக்கட்டு சட்டத்திற்கு எதிரான வழக்கை 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த அமர்வானது, ஜல்லிக்கட்டு விவகாரத்தில் கலாசார முக்கியத்துவம் மற்றும் தனியாக சட்டம் இயற்றுவதில் மாநில அரசுக்கு உள்ள அதிகாரம் குறித்து முடிவு எடுக்குமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (8-10)

## வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத் துறைக்கு 2.94 லட்சம் கோடி ஒதுக்கீடு

(டில்லி)

இந்திய அரசாங்கத்தின் 2018-2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில், பாதுகாப்புத்துறைக்கு 2.94 இலட்சம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் ஆயுதங்கள் மற்றும் இராணுவ தளபாடங்களுக்காக 93 ஆயிரம் கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவின் பாதுகாப்புத் துறைக்கு, கடந்த ஆண்டுடன் ஒதுக்கப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் 7.6 சதவீதம் அதிகமாகும். கடந்தாண்டு 2.74 இலட்சம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. அதில், ஆயுதம் உட்பட இராணுவ தளபாடங்களுக்கு மட்டும் 86 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது.

எல்லையில் பாகிஸ்தான் மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளினால் ஏற்படுத்தப்படுகின்ற அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் விதமாக பாதுகாப்பு துறையை மேம்படுத்த வேண்டும்.

அதற்காக பாதுகாப்புத் துறையினருக்கு நவீன தளபாடங்கள் வாங்கப்பட வேண்டும் என பாதுகாப்பு வல்லுநர்கள் தொடர்ந்து கருத்து தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-10)

## சிரியாவில் சுரங்க ...
## ஏவுகணைகள் ...





(டமாஸ்கஸ்)

சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் சுரங்க வைத்தியசாலை மீது சிரிய இராணுவம் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியதில் சுரங்க வைத்தியசாலை இடிந்து தரைமட்டமானது.

சிரியாவில் கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது. ஜனாதிபதி பசர்-அல்-ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

## யூதப்படுகொலை குறித்து போலந்து நாடாளுமன்றில் சர்ச்சைக்குரிய சட்ட மசோதா நிறைவேற்றம்

### சம்பந்தப்படுத்தினால் 3 ஆண்டுகள் சிறை

(வார்சா)

ஹிட்லர் தலைமையிலான நாஜிக்களின் ஆட்சி நடைபெற்றபோது யூதப்படுகொலையுடன் போலந்து நாட்டையோ, நாட்டு மக்களையோ தொடர்பு படுத்தினால் 3 ஆண்டுகள் தண்டனை விதிப்பதற்கான சட்ட மசோதா அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட மசோதாவுக்கு ஆதரவாக 57 எம்.பிக்களும், எதிராக 23 எம்.பிக்களும் வாக்களித்தனர்.



இதன் காரணமாக, போலந்துக்கும், நாஜிக்களின் கொடுமைகளுக்குப் பிறகு உருவாக்கப்பட்ட யூதர்களின் நாடான இஸ்ரேலுக்கும் இடையிலான உறவில் ஏற்கனவே காணப்படும் பதற்றம் மேலும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

ஜேர்மனியில் ஹிட்லரின் நாஜிக் கட்சி ஆட்சி செலுத்தியபோது, அண்டை நாடான போலந்து நாட்டை அவரது இராணுவம் கைப்பற்றியதைத் தொடர்ந்து இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

நாஜிக்களின் ஆட்சியின் போது போலந்து நாட்டின் ஆஷ்விட்ஸ் முகாமில் பெரும்பாலான யூதர்கள் உட்பட 11 இலட்சம் பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

யூதர்களின் படுகொலைக்கு, அப்போதைய போலந்து நாட்டினர் சிலர் உதவியளித்ததாக குற்றம் சாட்டப்படுகிறது. (8-10)

## செயற்கை... சீன விஞ்...

(பீஜிங்)

வளர்ச்சியடையாத காதுகளை கொண்ட 5 குழந்தைகளுக்கு ஆய்வுக் கூடத்தில் உருவாக்கப்பட்ட புதிய காதுகளை பொருத்தி சீன விஞ்ஞானி கள் சாதனை படைத்துள்ளனர்.

சீன விஞ்ஞானிகள் மனிதர்களின் வளர்ச்சியடையாத காதுகளில் உள்ள குருத்தெலும்பு செல்கள் மூலம் புதிய காதுகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். சில குழந்தைகளுக்கு மைரோடியா என்ற நோய் தாக்கியதால் பிறக்கும் போதே ஒரு காது வளர்ச்சியடையாமல் உள்ளது.

இந்நிலையில், மைரோடியா நோயால் பாதிக்கப்பட்ட 5 குழந்தை

# வெளிநாடு



# க வைத்தியசாலை

# ் வீசித் தகர்ப்பு!

ஹமா மாகாணத்தின் காபி ஷிதா நகரில் பூமிக்கு அடியில் 60 அடி (20 மீற்றர்) ஆழத்தில் 'அல் மகாரா' என்ற பெயரில் சுரங்க வைத்தியசாலையை கிளர்ச்சி யாளர்கள் கட்டியிருந்தனர்.

அங்கு மாதத்துக்கு 50 ஆயிரம் பேர் சிகிச்சை பெறுகின்றனர். 150 மிகப் பெரிய அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்று வந்தன.

இந்த நிலையில் சுரங்க வைத்தி யசாலை மீது சிரிய இராணுவம் 5 ஏவு கணைகளை வீசி அதிரடி தாக்குதல் நடத்தியது.

அது பூமியை துளைத்து சென்று தாக்கும் அதிநவீன சக்தி கொண் டவை.

ஏவுகணைகளின் தாக்குதலில் சுரங்க வைத்திய சாலை இடிந்து தகர்ந்தது. அதில் ஏற்பட்ட உயிர்ச்சேதம் மற்றும் காயம் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாக வில்லை. (8-10)



# புரட்சியாளர் பிடல் காஸ்ட்ரோ மகன் பிடலிடோ தற்கொலை

(ஹவானா)

கியூபா நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும் புரட்சியாளருமான பிடல் காஸ்ட்ரோவின் மூத்த மகன் தற்கொலை செய்துகொண்டார்.

கியூப புரட்சியாளரும் கியூபாவை 50 ஆண்டு காலம் ஆட்சி செய்தவருமான பிடல் காஸ்ட்ரோவின் மூத்த மகன் பிடல் காஸ்ட்ரோ டயஸ் பலார்ட் (வயது 68). இவரது முகத்தோற்றம் தந்தை பிடல் காஸ்ட்ரோவை போலவே இருந்ததால், பிடலிடோ என்று அழைக்கப்பட்டார்.




முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் படித்த அணு சக்தி இயற்பியலாளரான டயஸ் பலார்ட், கியூப மாநில கவுன்சிலின் அறிவியல் ஆலோசகராகவும், கியூபா அறிவியல் அகடமியின் துணைத்தலைவராகவும் பணியாற்றி வந்தார்.

68 வயதான டயஸ் பலார்ட், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டார். இதற்காக பல மாதங்களாக வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தார். அவரது வீட்டில் நேற்று முன்தினம் தற்கொலை செய்துகொண்டுள்ளார். என கியூப அரசு ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி அந்த நாட்டிற்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்த பிடல் காஸ்ட்ரோ கடந்த 2016 ஆம் ஆண்டு தனது 90 ஆவது வயதில் மரணமடைந்தார். அவர் மறைந்து ஒரு வருடம் நிறைவடைந்த நிலையில் அவரது மகன் தற்கொலை செய்தது கியூபா அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (8-10)

# தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் பயிற்சிபெற்ற ஆதாரங்கள் உள்ளன

## ஆப்கானிஸ்தான் தெரிவிப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடைபெறும் பயங்கரவாதத் தாக்குதல்களை நிகழ்த்தியவர்கள், பாகிஸ்தானில் பயிற்சி பெற்றதற்கான ஆதாரங்கள் உள்ளதாக ஆப்கானிஸ்தான் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஆப்கான் வெளியுறவுத் துறை அமைச்சர் வாயிஸ் அகமது பர்மாக், காபூல் நகரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானில், அண்மைக் காலமாக தொடர்ந்து நடைபெற்று வரும் பயங்கரவாதத் தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் பயிற்சி பெற்றதற்கான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன.

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதச் செயல்களை நடத்தி வரும் தலிபான் தலைவர்கள், பாகிஸ்தானில் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுகின்றனர்.

இதன்காரணமாக, நானும் உளவு அமைப்பின் தலைவர் மாஸூம் ஸ்டெனக்ஸாயும் பாகிஸ்தானுக்கு நேரடியாகவே சென்று, பிடிபட்ட பயங்கரவாதிகளின் வாக்கு மூலங்கள் உள்ளிட்ட ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளோம்.

ஆப்கான் மண்ணில் மேலும் தாக்குதல் நடைபெறுவதைத் தடுத்து நிறுத்தும்படி பாகிஸ்தானிடம் வலியுறுத்தினோம் என்றார்.

ஆப்கானிஸ்தானின் இந்தக் குற்றச்சாட்டு குறித்து பாகிஸ்தான் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

முன்னதாக, ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சர் வாயிஸ் அகமது பர்மாக் மற்றும் உளவு அமைப்பின் தலைவர் மாஸூம் ஸ்டெனேக்ஸாய் அடங்கிய குழு, பாகிஸ்தானுக்கு கடந்த புதன்கிழமை திடீர் பயணம் மேற்கொண்டனர்.

காபூலில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான புலனாய்வுத் தகவல்களையும், விசாரணையின்போது சேகரித்த ஆதாரங்களையும் பாகிஸ்தான் அரசிடம் வழங்குவதற்காகவே அந்தக் குழு அங்கு சென்றதாக தகவல்கள் தெரிவித்தன.

ஆப்கானிஸ்தானில் தலிபான் மற்றும் இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகள் கடந்த சில நாட்களாக அடுத்தடுத்து நடத்தி வரும் தாக்குதல்களில் சுமார் 200 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8-10)

# தைப்பூச திருவிழா கோலாகலம் மலேஷியாவில் பக்தி பரவசம்



(பத்துமலை)

மலேஷியாவில், பத்து மலை முருகன் கோவிலில் தைப்பூசத் திருவிழாவில், ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்கேற்று, அலகு குத்தி, காவடி சுமந்து, நேர்த்திக் கடன் செலுத்தினர்.

தமிழர்கள் அதிகளவில் வாழும், தென்கிழக்காசிய நாடுகளான, மலேஷியா, சிங்கப்பூரில், தைப்பூசம், ஆண்டுதோறும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மலேஷியாவில் உள்ள பத்துமலை முருகன் கோவிலில், தைப்பூசத் திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.


தைப்பூசத்தையொட்டி, ஆயிரக்கணக்கான தமிழர்களும், பிற இந்துக்களும், பத்துமலையில், 272 படிகள் ஏறி, முருகன் கோவிலுக்கு சென்றனர்.

பலர், முதுகிலும், கன்னத்திலும், நாக்கிலும் அலகு குத்தி, காவடி சுமந்து, நேர்த்திக் கடன் செலுத்தினர் பலர், பால் குடம் சுமந்து சென்று, முருகனை வழிபட்டனர்.

பத்து மலையில் ஏறுகையில், வழியில் உள்ள, உலகின் மிக உயரமான, 141 அடி முருகன் சிலையை, பக்தர்கள் வழிபட்டனர்.

மலேஷியாவின் 3.1 கோடி மக்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்கள். இங்கு 20 இலட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8-10)

# ைக காதுகள் உருவாக்கி
# ஞ்ஞானிகள் சாதனை




களுக்கு புதிய காதுகளை பொருத்தி விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். ஆய்வுகூடங்களில் புதிய காதுகள் வளர்க்கப்பட்டு அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டன. இந்தப் புதிய முயற்சியில் குழந்தைகளுக்கு இயற்கையான முறையில் குருதி குருத்தெலும்பு செல்கள் மூலம் புதிய காதுகள் பொருத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.


ஆரம்பத்தில் எலிகளின் உடலில் மனிதர்களின் குருத்தெலும்பு செல்கள் மூலம் புதிய காதுகள் வளர்க்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (8-10)

# துருக்கி இராணுவத்தின் வான்வழித் தாக்குதலில் 49 குர்து வீரர்கள் பலி

(பக்தாத்)

ஈராக்கின் வடக்கு பகுதியில் துருக்கி இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் குர்து படையைச் சேர்ந்த 49 வீரர்கள் பலியாகினர்.

இதுகுறித்து துருக்கி இராணுவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், "ஈராக்கின் வடக்குப் பகுதியில் சாப், அவசின் மற்றும் ஹக்குர்க் மாகாணத்தில் இரண்டு வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் குர்து படையைச் சேர்ந்த 41 வீரர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்துள்ளது.



குர்து படையினர் 1980 ஆம் ஆண்டு முதல் துருக்கியுடன் போரிட்டு வருகின்றனர். குர்து படையினர் துருக்கியில் குண்டுவெடிப்பு சம்பவங்களை நடத்திவருகின்றனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் குர்து படையினருக்கெதிராக துருக்கி இராணுவம் தொடர்ந்து வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

குர்து படையை துருக்கி தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. குர்து மற்றும் துருக்கி இடையே நடக்கும் போரில் இதுவரை 40,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8-10)

# மக்களின் வரிப்பணமான அரசநிதியை நாம் ஏன் பயன்படுத்தக்கூடாது?

## சிறிநேசன் எம்.பி.கேள்வி



(கொழும்பு)

மக்களின் வரிப்பணமான அரசநிதியை ஆளும் கட்சி எம்.பிக்கள், அமைப்பாளர்கள் பயன்படுத்தலாமென்றால் நாம் ஏன் பயன்படுத்தக்கூடாது? என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் கேள்வியெழுப்பியுள்ளார்.

காரைதீவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டடைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தங்களது நியாயமான உரிமைகளைக் கோரி அவ்வப்போது நடத்தி வந்த போராட்டங்களையும், ஒப்பந்தங்களையும் சிங்களத் தலைமைகள் அலட்சியப் படுத்திவந்த காரணத்தினால் தான் ஆயுதப்போராட்டம் உருவெடுத்தது.

1956இல் தனிச்சிங்களச் சட்டம், 1975இல் பௌத்தமத முன்னுரிமைச் சட்டம் போன்றன முரண்பாட்டை மேலும் கூர்மையாக்கின.

தமிழ்த்தேசியத்தை சிதைக்க, உடைக்க பணம், பதவியைக் கொடுத்துப் பார்த்தனர். மடங்கவில்லை. கடைசியாக கப்படுகொலை செய்துபார்த்தனர். அதுவும் சரிவ்ரவில்லை. சரணாகதி அரசியல் செய்வார்கள் என்று எதிர்பார்த்தனர். முடியவில்லை. அது இன்றும் தொடர்கிறது.

கருணா பிள்ளையான் ஊடாக மகிந்த இன்று மட்டக்களப்பில் மீன் சின்னத்திலும் வேறு சின்னத்திலும் தேர்தலில் குதித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் 2 கோடி ரூபா பெற்றதாக எம்மிலிருந்து பிரிந்து சென்றவர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அது அபாண்டமான பொய்.

மக்களின் வரிப்பணமான அரச நிதியை அரச எம்.பிக்களும், அமைப்பாளர்களும் அதனை பயன்படுத்தலாமென்றால் நாம் ஏன் பயன்படுத்தக் கூடாது?

உரிமையை மறந்து அபிவிருத்தி அரசியல் செய்யப்புறப்பட்ட ராஜன் செல்வநாயகம் தங்கேஸ்வரி அம்மையார், பியசேன போன்றோர் இன்று எங்கே? அரசாங்கத்திடம் சோரம் போய் எம்மை விமர்சித்தது தான் மிச்சம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலுள்ள விரிசல் சண்டையல்ல -அர்ஜுன சமாளிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டவையாக இருந்த போதிலும் இரு கட்சிகளின் தலைவர்களும் தமது கட்சிக்காகச் செயற்பட்டதைவிட நாட்டுக்காகவே கடந்த மூன்று ஆண்டுகளும் செயற்பட்டுள்ளனரென பெற்றோலிய வளங்கள் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டுள்ளதென பலர் தெரிவித்தாலும் அது உண்மையில் சண்டையல்ல. அவரவர் கருத்துக்களிலுள்ள வேறுபாடு மாத்திரமே எனவும் தெரிவித்தார்.

கொலன்னாவை ஸ்ரீ ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தேசிய அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்லவிடாமல் தடுப்பதானது மக்கள் கொடுத்த ஆணையை மீறும் செயற்பாடு.

உள்ளூராட்சித் தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகள் தனித்தனியே போட்டியிட்டாலும் கடைசியில் நாடு என்ற ரீதியில் இரண்டு கட்சிகளும் ஒன்றாக இணைவர்.

கடந்த இரண்டு வருடங்களில் நாங்கள் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தந்துள்ளோம். ஆனால் அதைவிட பெரிய வேலைகளும் உண்டு.

எதிர்வரும் இரண்டு வருடங்களே மிக முக்கியமான வருடங்களாகும். இந்தக் காலப் பகுதியில்தான் பல பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டி இருப்பதுடன் இரண்டு பிரதான கட்சிகளும் சேர்ந்து செயற்பட வேண்டிய கட்டாயமும் உள்ளது.

இன்று பலர் சொல்கின்றனர் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டுள்ளது என்று. ஆனால் உண்மையில் அது சண்டையல்ல. அவரவர் கருத்துக்களில் உள்ள வேறுபாடு மாத்திரமே.

வீட்டில் இருக்கும் தலைவனுக்கும் தலைவிக்கும் ஒரு கருத்து இருப்பதில்லை. அதுபோலவேதான் இதுவும். பிரச்சினைகள் வரும். ஜனாதிபதியும் பிரதமரும் சிறந்த மூளையுள்ள தலைவர்கள். அவர்கள் இந்தப் பிரச்சினைகளை சிறந்த முறையில் கையாளுவார்கள். அதைத்தான் நாட்டு மக்களும் விரும்புகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டவை. இந்த இரண்டு பிரதான கட்சிகளின் தலைவர்கள் தமது கட்சிக்காக செயற்பட்டதைவிட நாட்டுக்காகவே கடந்த மூன்று ஆண்டுகள் செயற்பட்டுள்ளனர். இதை இந்த நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று ஊடக சுதந்திரம் உண்டு. சுதந்திரமாக வீதியில் நடந்து செல்ல முடியும். ஜனநாயகம் இங்கு கூடுதலாக உள்ளது. மக்களுக்கு சுதந்திரமாக இங்கு வாழக்கூடியதாக உள்ளது. ஆனால் திருடர்களைப் பிடிப்போம் என்று மக்களுக்கு கொடுத்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப் படாமையே எமக்கு கவலையாகவுள்ளது.

இதுவே இன்று பிரச்சினையாகவுள்ளது. ஆனால் நாடு என்ற ரீதியில் நாங்கள் செய்ததை எண்ணி மகிழ்சியடைகின்றோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளை மையமாகக் கொண்டு மக்கள் வாக்களிக்கவில்லை. பாராளுமன்ற தேர்தலிலும் மக்கள் இந்த இரு பிரதான கட்சிகளுக்கு பெரும்பான்மை பலத்தை கொடுக்கவில்லை.

ஆனால் இரண்டு கட்சியும் இணைந்து நாட்டுக்கு சேவை செய்யவே மக்கள் வாக்களித்துள்ளனர்.

தற்போது எமக்கு முக்கியமானது கட்சி அரசியல் அல்ல. எமக்கு எந்த வேளையிலும் கட்சி ஒன்றை உருவாக்க முடியும். ஆனால் சிறந்த நாட்டை உருவாக்க முடியாது. ஆகவே இரண்டு கட்சிகளும் இணைந்து இனிவரும் காலத்தில் நாட்டுக்காக வேலை செய்ய வேண்டிய தேவையுள்ளது.

இதை செய்யாவிட்டால் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் அளித்த ஆணையை மீறுவதாகுமென அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-8)

# ரவி பதவி விலகாவிடின் நீக்குவதற்கு நடவடிக்கை


(கொழும்பு)

உபதலைவர் பதவியில் இருந்து ரவி கருணாநாயக்க விலகாவிடின், அவரைப் பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ.தே.கவின் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழு, ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்துள்ளது.

இந்த அறிக்கையை ஆராய்ந்த திலக் மாரப்பன தலைமையிலான ஐ.தே.கவின் உயர்மட்டக்குழு, ரவி கருணாநாயக்கவை, கட்சியின் உபதலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்குப் பரிந்துரைத்துள்ளது. எனினும், ரவி கருணாநாயக்க இன்னமும் பதவி விலகவில்லை.

இந்த நிலையில், அவர் பதவி விலகாவிடின், ஐ.தே.கவின் மத்திய செயற்குழு அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்" என்று ஐ.தே.கவின் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-7)



## இன்று ஒரு தகவல்

### சூழ்நிலை தெரியாத ஜென்மங்கள்!

திருமண இல்லங்களில் உம்மணாமூஞ்சியாக முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பவர்களையும் இழவு நடந்த வீட்டில் அரட்டை அடிப்பவர்களையும் பார்த்தால் எனக்கு கபகப என்று வருகிறது.

எந்தச் சூழ்நிலையில் ஒரு சுவட்டம் கூடியதோ அதே சூழ்நிலைக்கு மாற நம்மை நாம் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் என்ன மனநிலையில் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் சூழ்நிலை கட்டாயப்படுத்தும். அதற்கேற்ப நாம் மாறத்தான் வேண்டும்.

ஒருவருக்குத் தன் மகனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்துவிட்டது என்று ஏக சந்தோசம். ஆனால், நண்பரின் தாயார் இறந்துவிட்டார். அதில் கலந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை மனிதருக்கு சோகம் வரவில்லை. மகிழ்ச்சியான மனநிலை சிரித்துச் சிரித்துப் பேசினார்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு எரிச்சலாக இருந்திருக்கும்? "என்னடா இந்த மனுசன் சூழ்நிலை புரியாமல் அரட்டை அடிக்கிறாரே; இங்கிதம் தெரியாமல் நடந்து கொள்கிறாரே'' என்று அவர்களுக்குத் தோன்றியிருக்கும்!

சொந்தச் சோகம்; கடன் தொல்லை; வீட்டுப் பிரச்சினைகள்; அலுவலகக் கெடுபிடிகள் இவற்றுள் ஒன்றின் காரணமாக ஒருவர் திருமண இல்லத்திற்கு வந்தாலும் படு டல்லாக இருப்பார். சிலபேர் வந்த இடத்தில் இந்தக் குரங்குப் பயலுக்கு மயிலாட்டம் மனைவியா; இந்தப் பாவிப் பயலுக்கு எப்பேர்ப்பட்ட சம்பந்தம் என்று இல்லாத சோகத்தைப் புதிதாக வரவழைத்துக்கொள்வதும் உண்டு.

இவர்களின் பார்வைகள் இனி மாற வேண்டும். நம் துன்பம், நம் மகிழ்ச்சி எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்து விட்டு அங்கு நிலவும் புதிய சூழ்நிலைக்கு மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நம் துன்பங்களைக் கொஞ்சநேரம் மறக்க ஒரு திருமண இல்லத்து விஜயம் உதவக்கூடும். நம் துன்பங்கள் வெகு சாதாரணம் என்கிற மனப்பக்குவத்தை ஒரு சோக வீடு தரக் கூடும்.

மிதப்பிலும் களிப்பிலும் மட்டும் இருக்காதே! கொஞ்சம் யதார்த்தத்திற்கு இறங்கி வா என்று சொல்லாமலே சொல்லுவது தான் சோக வீடு.

இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளாமல் எது எப்படியிருந்தாலும் நான் எப்போதும் போலத்தான் இருப்பேன் என்று சொல்பவர்கள், பண்பு என்றால் கிலோ என்ன விலை என்று கேட்பவர்கள்!

**லேனா தமிழ்வாணன்**

# நாட்டைத் துண்டாட நான் இடமளியேன்!

## ஜனாதிபதி மைத்திரி உறுதி



(கொழும்பு)

**நாட்டைத் துண்டாடவோ அல்லது பிளவுபடுத்தவோ தான் ஒருபோதும் தயாராக இல்லை என்பதுடன் எவருக்கும் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடவும் இடமளிக்கப்போவதில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

பொலநறுவை, செவனபிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இன்று நாட்டிற்குத் தேவையாக இருப்பது மன்னராட்சி முறையன்றி மக்களாட்சி முறையே ஆகும். இதனையே மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

அத்தகையதொரு அரசியல் மற்றும் சமூக மாற்றத்தினை நாட்டில் ஏற்படுத்தவே கடந்த மூன்று வருட காலமாக நான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றேன்.

ஊழல் அரசியல்வாதிகள் இன்று ஒரே குழுவாக இணைந்திருக்கின்றனர் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் மக்களுக்கு சேவை செய்வதற்காகவோ அல்லது நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவோ ஒன்று படவில்லை.

தம்மது தனிப்பட்ட அபிவிருத்திக்காகவே அதிகாரத்தைக் கேட்கின்றனர்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டு மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கும், அதிகார துஷ்பிரயோகங்களைச் செய்து அரச வளங்களை அழிவடையச் செய்யும் அரசியல்வாதிக்கு எதிராக கடந்த ஆட்சிக் காலத்தில் எதுவித நடவடிக்கைகளும் அப்போதைய தலைவர்களால் மேற்கொள்ளப்படாததுடன், அவற்றைப் பற்றி உரையாடக் கூட அவர்கள் விரும்பவில்லை. இதனாலே கடந்த ஆட்சிக்காலத்தில் ஊழல் மோசடிகள் அதிகரித்திருந்தன.

ஊழல், மோசடிகளுக்கு எதிராகச் செயற்படுகையில் கட்சி, நிறம், பதவி, உறவுகள், மற்றும் நட்பு என்ற எந்தவொரு விடயத்தையும் கருத்திற் கொள்ளாததுடன், இன்று நாட்டில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது எனது சகோதரர்களுக்கும் அவ்விதமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுயநிர்ணய உரிமை தமிழரின் பிறப்புரிமை என்பதை இடித்துரைப்பதாக பெப்.10 தீர்ப்பு அமைய வேண்டும்

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை வலியுறுத்து

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவிருக்கும் பெப்-10 அன்று தாயகத் தமிழர்கள்வழங்கும் தீர்ப்பானது சுயநிர்ணய உரிமை தமிழர்களின் பிறப்புரிமை என்பதை இடித்துரைப்பதாக அமைய வேண்டும். ஆயுத மௌனிப்பின் பின்னர் சூன்யமாக்கப்பட்டுள்ள தாயக அரசியல் வெளியை மீட்டெடுக்கும் களமாக இத்தேர்தல் களத்தை நாம் பயன்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

இலங்கைத் தீவின் ஆதிகாலம்தொட்டு பூர்வீகக் குடிகளாக வாழ்ந்து வரும் தமிழர்களாகியஎங்களது மரபுவழித் தாயகத்தின் மீதான எமது உரித்தை நிலைநிறுத்தும் உன்னதநோக்கத்திற்காகவே பல்லாயிரக்கணக்கிலான மாவீரர்கள் தமது இன்னுயிரை ஆகுதியாக்கியுள்ளார்கள். அவ் உயரிய இலட்சியம் நோக்கிய பயணத்தில்தான் இலட்சக்கணக்கிலான தமிழ் மக்களும் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர்.

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் விடுதலை பெற்ற தேசத்தில், எதிர்கால சந்ததி சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காகவே அளப்பரிய தியாக வரலாறு படைக்கப்பட்டுள்ளது. அப்பேற்பட்ட உயரிய தியாகத்தின் அடித்தளத்தில் பலம்பெற்று அரசியல் சக்தியாக உருவாக்கப்பட வேண்டிய தமிழ்த் தேசியத்தை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முற்றாக நிராகரித்து சிதைக்கும் வேலையில் செயற்படுகின்றது.

இலங்கைத் தீவு சுதந்திரம் பெற்ற காலம் முதல் இன்றுவரை நடைபெற்று முடிந்த தேர்தல் வரலாற்றை எடுத்துப் பார்த்தோமேயானால் ஆட்சி-அதிகார இலக்கு நோக்கியதாக தமிழர்களின் வாக்களிப்பு என்றும் இருந்ததில்லை.

மாறாக தமிழர்களின் தன்னுரிமை சார்ந்தே வாக்களிப்புகள் நடந்துள்ளன. ஆயுத மௌனிப்பின் பின்னரான தமிழர்களின் வாக்களிப்புகளும் அவ்வாறே அமைந்திருந்தது என்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

இவ் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பும் முன்னிலும் பார்க்க அதி முக்கியமானகளமாக தமிழர்கள் முன் விரிந்துள்ளது. வாக்குரிமை உள்ள ஒவ்வொரு தமிழனும் கண்டிப்பாக வாக்களித்தே ஆக வேண்டியது இன்றியமையாதது ஆகும். இவ்விடத்தில் தான் அவ்வாறு செலுத்தும் வாக்கை யாருக்கு செலுத்துவது என்பது குறித்து தீர்க்கமான முடிவெடுக்க வேண்டியுள்ளது.

தமிழர் தாயகத்தில் அதுவும் தமிழர்கள் மத்தியில் விசேட அதிரடிப்படையுடன் நடமாடுபவர்களுக்கா எங்கள் வாக்கு?

உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வுத் திட்டமாக உருவாக்கப்பட்டிருந்த காரணத்திற்காகவே தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் ஒஸ்லோ உடன்படிக்கையை நிராகரித்திருந்தார். தேசியத் தலைவர் அன்று நிராகரித்த உள்ளகசுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு எட்டப்படும் என்று சம்பந்தன் கூறி வருகின்றார்

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு என்றபேச்சிற்கே இடம் இல்லை. ஆகவே சிந்தியுங்கள் மக்களே இப்படிப்பட்டவர்களுக்கா எங்கள் வாக்கு?

தாயகம்-தேசியம்-தன்னாட்சி உரிமை ஆகிய மூலாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை நிறைவேற்றும் வகையிலான தீர்வை நோக்கி உண்மை-நேர்மை-உறுதியுடன் தாயக அரசியல் வெளியில் செயற்பட்டு வருபவர்களின் சுத்தமான கரங்களைப் பலப்படுத்துவதாக எங்கள் வாக்குகள் மாறவேண்டும்.

நம்பி நம்பி ஏமாந்து போன கசப்பான வரலாறு காற்றோடு போகட்டும். இனியொரு விதி செய்ய பெப்ரவரி-10 அன்று வாக்குச்சாவடி நோக்கி அணிவகுப்போம் வாரீர். நினைத்தமாத்திரத்திலோ, எண்ணிய உடனேயோ மாற்றம் நிகழ்ந்துவிடப் போவதில்லை.

நாம் விரும்பும் மாற்றத்தை நமக்கான மாற்றத்தை நாம் தான் ஏற்படுத்தியாக வேண்டும். வாக்களிக்காது இருப்பதும் பெருந்தவறாகிவிடும்என அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நாட்டின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

நாட்டின் 70 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்வுக்கு அமைவாக சதொச நிறுவனம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளதாக சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

சதொச ஊடாக சுதந்திரத்தைக் கொண்டாடுவோம்என்ற தொனிப்பொருளில் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட இருக்கின்றது எனவும்இதன் மூலம் மக்கள் பாரிய அளவில் நன்மையடைவார்கள் எனவும் சதொச நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எஸ்.எச். எம்.பராஸ் தெரிவித்துள்ளார்.

அதன்படி ஒரு கிலோ பாஸ்மதி அரிசி 120 ரூபாவிற்கும், ஒரு கிலோ அரிசி 60 ரூபாவிற்கும், 500 கிராம் பெரிய வெங்காயம் 55 ரூபாவிற்கும், 500 கிராம் செத்தல் மிளகாய் 110 ரூபாவிற்கும், 500 கிராம் பருப்பு 54 ரூபா 50 சதத்திற்கும் விற்பனை செய்யப்படும் என சதொச நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிணைமுறி விவாதத்திற்கு மகிந்த வருவார் ரணில் வருவாரா?

## கூட்டு எதிரணி எம்.பி.ரோஹித கேள்வி



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகார விசாரணை அறிக்கை தொடர்பான விவாதத்தில் மகிந்த ராஜபக்ஷ கண்டிப்பாக கலந்துகொள்வாரென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கூட்டு எதிரணி ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள குறித்த விவாதத்தில் பிரதமர் ரணில் கண்டிப்பாக கலந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுனவின் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில் பிரதமரிடம் தெரிவிப்பதற்கு ஒன்றிணைந்த எதிரணிக்கு பல காரணங்கள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# தேசிய வினாவுக்கான ஒரு தீர்வு இன்னும் முன்வைக்கப்படவில்லை

## சிவில் சமூக அமைப்புக்கள் விசனம்

(கொழும்பு)

தேசிய வினாவுக்கான ஓர் அரசியல் தீர்வு, சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுத்துதல் தொடர்பாக இன்னும் தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை என சிவில் சமூக அமைப்புக்கள் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினம் நாளை 4ஆம் திகதி அரசாங்கத்தினாலும், சில அமைப்புக்களினாலும் கொண்டாடப்படவுள்ளன. இதனை கருத்திற்கொண்டு சிவில் சமூக அமைப்புக்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வியக்கத்தக்க சமூக நலச்சுட்டிகளுடன் சுமுக முறைமையான நாடாக இலங்கை விளங்குகின்ற போதிலும், நாட்டின் சுதந்திரத்திற்குப் பிந்திய வரலாறானது நீதி மற்றும் சமத்துவப் போராட்டங்களும், அரசுக்கெதிரான ஆயுதக் கிளர்ச்சிகளும் நிறைந்தனவாகவே காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் போராட்டங்களான து, கொடூரமான அரச ஒடுக்குமுறை, குடிமக்கள் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடு, மனித உரிமை மீறல்கள் என்பவற்றிற்கு எதிராகவே இடம்பெற்றுள்ளன. இதில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு, பலர் காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

ஏழு தசாப்தங்களாக இலங்கை சுதந்திர நாடாக இருக்கின்ற போதும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் துயரங்கள் கவனிக்கப்படாமலே உள்ளன.

அந்தவகையில் இராணுவமயமாக்கல், நில ஆக்கிரமிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அரசியல் கைதிகள் பிரச்சினைகள் தொடர்பாக இன்று நாடு முழுவதும் இடம்பெறும் போராட்டங்களே இதற்குச் சான்றாகவுள்ளன.

மேலும், மனித உரிமைப் பாதுகாவலர்களும், பத்திரிகையாளர்களும் அச்சுறுத்தல்கள் மற்றும் பிற கட்டுப்பாடுகளை தொடர்ச்சியாக எதிர்கொள்வதோடு அரசைச் சார்ந்தவர்கள் குற்றங்களைச் செய்துவிட்டு பயமற்றவர்களாக இருப்பதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அத்துடன் இனம், மதம், பால்நிலை சார்பு தொடர்பான பாரபட்சமான சட்டங்கள், வன்முறைகள் என்பன பரவலாகக் காணப்படுவதோடு, பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சட்டங்கள் மூலம் குடிசார் உரிமைகளை மட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் 2015 இல் நிகழ்ந்த மாற்றமானது ஜனநாயகத்தின் வெற்றியாகவும், இத்தனை கால போராட்டங்களிற்கான தீர்வாகவும் முன்னிறுத்தப்பட்டது. புதிய அரசியலமைப்பு, நிலைமாற்று நீதிப்பொறிமுறைகள் மற்றும் ஊழலற்ற நல்லாட்சிக்குத் தம்மை அர்ப்பணிக்கும் ஓர் அரசு என்பன வாக்குறுதிகளாக வழங்கப்பட்டன.

அந்தவகையில், அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் மற்றும் தகவலறியும் சட்டம் போன்றவை நம்பிக்கையளிப்பனவாக இருக்கின்றது. இதனை ஒரு மைல்கல்லாக நாம் கண்டுகொள்கின்ற போதிலும் தேசிய வினாவுக்கான ஓர் அரசியல் தீர்வு, மனித உரிமைகள், சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு, உண்மையான அமைதி, நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்துதல் தொடர்பான கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்த விளைகின்றோம் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அரசியல் அமைப்புக்கு ஆலோசனை வழங்க பொதுமக்களுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம்

(கொழும்பு)

நாட்டின்புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான ஆலோசனைகளை வழங்க பொதுமக்களுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக அரசியலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

பல அரசியல் கட்சிகள், அமைப்புகள் மற்றும் புத்திஜீவிகள் ஆகியோரிடமிருந்து புதிய அரசியலமைப்பிற்கான பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு மேலும் பொதுமக்கள் ஆலோசனைகளை வழங்குவதற்குக் கால அவகாசம் தேவைப்படுமாயின் அதனை வழங்கத் தயாராகவுள்ளதாக அரசியலமைப்பு சபையின் மேலதிக செயலாளர் யுரேஷா பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்துடன் அரசியலமைப்பு வழிநடத்தல் குழுவானது நாடாளுமன்றத்திற்கு இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்த பின்னர் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பிலும் ஆராய்ந்து அறிக்கையிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அடிப்படை உரிமை, நீதித்துறை, நிதி, தேசிய பாதுகாப்பு மற்றும் பொலிஸ் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய இடைக்கால அறிக்கை அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும் இந்த இடைக்கால அறிக்கை தொடர்பில் விவாதமொன்றும் முன்னெடுக்கப்படவில்லை. இது தொடர்பிலும் அரசியல் அமைப்பின் வழி நடத்தல் குழு தீர்மானிக்கவுள்ளதாக யுரேஷா பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார். (இ-7)

# திருக்குறள் மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் ஆண்டுதோறும் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமாகக் கம்பன் விழாக்களை நடத்திவருகிறது. அவ்விழாக்களின் வரிசையில் 2018 ஆம் ஆண்டுக்கான கொழும்புக் கம்பன் விழாவினை எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தவுள்ளது. இவ் விழாவை முன்னிட்டு நாவலர் நற்பணி மன்றத் தலைவர் என். கருணையானந்தன் அனுசரணையுடன் நடத்தப்படும் திருக்குறள் மனனப் போட்டிக்கான விபரங்களைக் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

இப்போட்டி இரு பிரிவுகளாக நடைபெறும். பாலர் பிரிவில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவர்களும் கீழ்ப் பிரிவில் தரம் 6 முதல் 8 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களும் கலந்து கொள்ளலாம். பாலர் பிரிவில் கலந்து கொள்வோர் குறிப்பிட்ட ஐந்து அதிகாரங்களை (50 குறள்கள்) மனனம் செய்தல் வேண்டும். கீழ்ப் பிரிவில் கலந்து கொள்வோர் குறிப்பிட்ட பத்து அதிகாரங்களை (100 குறள்கள்) மனனம் செய்வதோடு அக்குறள்களுக்கான பொருளறிவையும் பெற்றிருத்தல் வேண்டும். மனனம் செய்ய வேண்டிய அதிகாரங்கள் பற்றிய விபரங்களை போட்டியாளர்கள் உகரம் இணையத் தளத்தில் (www.uharam.com) அறிந்து கொள்ளலாம்.

மேற்படி திருக்குறள் மனனப்போட்டியில்கலந்து கொள்ள விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பெற்ற விண்ணப்பப் படிவத்தில் தமது முழுப் பெயர், வயது, பிறந்ததிகதி, முகவரி, தொலைபேசி இலக்கம், மாணவராயின் பாடசாலையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பதோடு தாம் கலந்து கொள்ளவுள்ள போட்டி விபரங்களையும் குறிப்பிட்டு, இல.12, இராமகிருஷ்ண கார்டன், கொழும்பு - 6 (Secretary,Colombo Kamban Kazhakam, 12, Ramakrishna Garden, Colombo - 06) எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் மேற்பக்கத்தில் போட்டியாளர் விண்ணப்பிக்கும் போட்டி விபரத்தையும் எழுதுதல் வேண்டும். 2018 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். போட்டி நடை பெறும் திகதி போட்டியாளர்களுக்குத் தனித்தனியே அறிவிக்கப்படும். பாடசாலை மாணவர்களது விண்ணப்பங்களைத் தனித்தோ, தமிழ் மன்றங்களின் ஊடாக ஒரே தொகுதியாகவோ அதிபரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்கலாம்.

தர்மான நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படும் எனவும் பேச்சுப்போட்டியில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித் துள்ளது.

பாலர் பிரிவினர்

(மனனம் செய்ய வேண்டிய அதிகாரங்கள்)

கல்வி-40ஆம்அதிகாரம், கல்லாமை-41 ஆம் அதிகாரம், கேள்வி-42ஆம் அதிகாரம், அறிவுடைமை-43 ஆம் அதிகாரம், குற்றம் கடிதல் 44ஆம் அதிகாரம்

குறிப்பு: மேலே தரப்பட்டுள்ள அதிகாரங்களிலுள்ள குறள்கள் 50ஐயும் மாணவர்கள் மனப்பாடம் செய்திருந்தால் போதுமானது.


கீழ்ப் பிரிவினர்

(மனனம் செய்ய வேண்டிய அதிகாரங்கள்)

பெரியாரைத் துணைக்கோடல் -45ஆம் அதிகாரம், சிற்றினம் சேராமை-46ஆம் அதிகாரம், தெரிந்து செயல்வகை-47ஆம் அதிகாரம், வலி அறிதல்- 48ஆம் அதிகாரம் காலம் அறிதல்-49ஆம் அதிகாரம், இடன் அறிதல்-50ஆம் அதிகாரம், தெரிந்து தெளிதல்-51ஆம் அதிகாரம், தெரிந்து வினையாடல்- 52 ஆம் அதிகாரம், சுற்றம் தழால்-53ஆம் அதிகாரம், பொச்சாவாமை-54ஆம் அதிகாரம்

குறிப்பு: மேலே தரப்பட்டுள்ள அதிகாரங்களிலுள்ள குறள்கள் 100ஐயும் அவற்றுக்கான பொருளையும் மாணவர்கள் மனப்பாடம் செய்திருக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இளைஞன் உயிரிழப்பு



(கொழும்பு)

வெலிகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பாரிய விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

டிப்பர் ரக வாகனம் ஒன்றும் ஆட்டோவும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகம, கொஹுனுகம பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞனே விபத்தில் உயிரிழந்துள்ளார். (இ-7)

# யாழில் மாபெரும் மருத்துவக் கண்காட்சி ஏப்ரல் மாதம் ஐந்து நாட்களுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடமானது தனது 40 ஆவது வருட நிறைவை முன்னிட்டு 5 வருடங்களுக்கு பின்னர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதிவரை மாபெரும் மருத்துவக் கண்காட்சியை யாழ். மருத்துவபீட வளாகத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி வைத்திய கலா நிதி எஸ்.ரவிராஜ் தலைமை யில் ஊடகவியலாளர் சந்தி ப்பு ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மருத்துவ பீடத்தில் இடம்பெற்றது. இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து உள்நாட்டு, வெளிநாட்டு யாழ். மருத்துவபீட பழைய மாணவர் சங்கங்கள் மற்றும் இவ லூஷன் பிறைவட் லிமிட்டட் ஆகியவற்றின் பங்களிப்போடு மாபெரும் மருத்துவக் கண்காட்சி - 2018 நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியானது மருத்துவத்துறையின் நவீன வளர்ச்சிகள், சிறந்த நடைமுறைகள் மற்றும் ஆய்வு முடிவுகள் பற்றிய விழிப்புணர்வுகளை மக்களுக்கு வழங்கவும், முறையான பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறை மேம்படுத்தல் பற்றிய முக்கிய சுகாதார தகவல்களை வழங்கவும், பிரதான தொற்றா நோய்களான நீரிழிவுநோய், உயர் குருதியமுக்கம், பாரிசவாதம், இருதய நோய்கள், நாட்பட்ட சுவாசநோய், புற்றுநோய்கள் மற்றும் ஏனைய முக்கிய நோய்கள் பற்றிய விழிப்புணர்வை வழங்கவும், வட மாகாண மக்களுக்கு இலங்கையில் கிடைக்கக்கூடிய சுகாதார சேவைகள் பற்றி விளக்கவும், பாடசாலை மாணவர்களுக்கு சுகாதார விஞ்ஞானம் சார்ந்த அறிவையும், ஆற்றலையும் மேம்படுத்தவும், இளைஞர்களுக்கு சுகாதாரத் துறைசார் தொழில் வாய்ப்புக்களை தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டல்களை வழங்கவும் இந்த மருத்துவக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் மக்களின் வாழ்க்கைத்தரமும் சுகாதார நிலையும் உயர்த்தப்படுத்தல், உணவுப்போசாக்கின் தரம் உயர்த்தப்படுதல், நோய் நிலைமைகளையும் அவற்றை தடுத்தல் சம்பந்த மான அறிவு மேம்படுத்தப்படல், தொற்றா நோய்களின் அதிகரிப்பு குறைக்கப்படுதல், பாடசாலை மாணவர்களின் உயிரியல் விஞ்ஞானம் தொடர்பான அறிவு மேம்படுத்தப்படல், சுகாதாரத்துறை சார்ந்த அறிவூட்டல் மூலம் சுகாதாரத்துறைக்குப் பொருத்த மானவர்க்ளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுதல் போன்ற விடயங்கள் ஏற்பாட்டாளர்களால் எதிர்பார்க்கப்படுகின்றன.

மேற்படி கண்காட்சியானது அடிப்படை உயிரியல் விஞ்ஞானம், நடைமுறை சவால்கள், நவீன மருத்துவ தொழில்நுட்பம், துறை வழிகாட்டல், குழந்தை, இளமைப்பருவ, வளர்ந்தோர் மற்றும் வயோதிப உடல், உள, ஆரோக்கியமும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் எனும் பிரதான தலைப்புகளினூடும் அவற்றிக்கூடாக பல உப தலைப்புக்களினுடனும் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இத்தோடு மருத்துவம் சார்ந்து நின்றுவிடாது கண்காட்சியை முன்னிட்டு புகைப்படப்போட்டி, பாடசாலை மாணவர்களுக்கான விநாடி வினாப் போட்டியும் அவற்றிற்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. வயதுஎல்லைகளின்றி அனைவரும் வருகை தந்து பயன் பெறக்கூடிய வகையில் கண்காட்சியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் காட்சிப்படுத்தல்கள், விழிப்புணர்வுகள், விளக்கவுரைகளோடு மட்டும் நின்று விடாமல் இலவச அடிப்படை மருத்துவ பரிசோதனைகள் அதனூடாக விளக்கங்களும் தேவைப்படின் மேலதிக பரிசோதனைகள் பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்களும் இங்கு விளங்கப்படுத்தப்படவுள்ளன என தெரிவித்துள்ளனா். (இ-9)

# செயல்முறைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் வருடம்தோறும் நடத்தி வரும் செயல் முறைப் போட்டி நாளை 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக்கல்லூரியில்நடைபெறும்

கோலம்போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல் முறைப் போட்டிகள் மத்தியபிரிவு, கீழ்ப்பிரிவு எனும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன. இப்போட்டிகளுக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 350 போட்டியாளர்கள் தோற்றவுள்ளனர்.

கோலம்போடுதல் போட்டி காலை 9 மணிக்கும், மாலை கட்டுதல் போட்டி மு.ப. 11.30 மணிக்கும் நடைபெறவுள்ளது. இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் போட்டியாளர்களே போட்டிகளுக்குரிய பொருட்களுடன் குறித்த நேரங்களுக்கு சமுகம் தரவேண்டும்எனவும் சைவ சமய அபிவிருத்திக்கழக பரீட்சைச் செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (இ)

# மாணவனை தண்டித்த ஆசிரியர் மீது தாக்குதல்

மாணவன் ஒருவனை தண்டித்த ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள் ளது.

கற்பிட்டி ஆலங்குடா பகுதியில் அமைந்துள்ள பாடசாலையொன்றின் ஆசிரியர் ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

மாணவனைத் தாக்கியதால் ஆத்திரமுற்ற ஆறு பேர், பாடசாலைக்குச் சென்று ஆசிரியரை தாக்கியுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த ஆசிரியர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தாக்குதல் சம்பவம் தொடர்பில் மாணவனின் தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாணவன், பாடசாலை மாணவிகளை தேவையற்ற வகையில் கிண்டலடித்த காரணத்தினால் தாம் தண்டனை வழங்கியதாக் ஆசிரியர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# "போதிமரக்குயில்" கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக சட்டத் துறை மாணவி அம்பிகை பஞ்சலிங்கத்தின் "போதி மரக்குயில்" கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் கவிஞர் சோ. பத்மநாதன் கலந்து கொள்வார். இந்நூலிற்கான முதற் பிரதியை யாழ் மக்கள் வங்கி பிராந்திய முகாமை யாளர் க.சுசீந்திரன் பெற்றுக் கொள்வார். (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1320

Search for people, places and things — Nagendram — Home

### கார்த்திகா


பொலிஸ், சி.ஐ.டி. இதற்கு இடையே ஒரு துப்பறியும் பிரிவு இருக்குன்னா அது...



மனைவிகள் பிரிவு தான்ப்பா இருக்கும்... கணவன்மார்களை என்னமா துப்பறியுறாங்க...

### டனுசியா

தக்காளி அழுகாம இருக்கனும்னா என்ன செய்யனும் தெரியுமா???



கிச்சு கிச்சு மூட்டி சிரிக்க வைக்கனும்

### பிரதாயினி

எந்தச் சோப்பு போட்டாலும் வெள்ளைக் கலர்லதான் நுரை வருது... அப்புறம் ஏன்




சோப்பு மட்டும் கலர் கலரா இருக்கு

### டனு டனுசியா

முடிக்க
முடியும் என்ற
தன்னம்பிக்கையும்
முடிக்க
வேண்டும் என்ற
கட்டாயமும்
முடியாத
காரியத்தையும்
முடித்து வைக்கும்



### பவன்யா

ஏன் மாமா எப்ப பாத்தாலும் கிரிக்கெட் விளையாடுறீங்களே புதுசா புளுவேல்ஸ் கேம் வந்துருக்காமே அதை விளையாடுங்களேன்...



மயிலு மாமா உன் கழுத்தில தாலி கட்டினேன் பாரு அதுதான் அந்த கேமின் பைனல் டாஸ்க்

### தேன்மொழி

கணவன்: என்ன சமைச்சிருக்க... சாணி வறட்டி மாதிரி இருக்கு... நல்லாவேயில்ல...!!!



மனைவி: கடவுளே... இவர் இன்னும் என்னவெல்லாம் சாப்பிட்டு பார்த்திருக்கிறாரோ தெரியலையே!!!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–143

## வீட்டிலொரு வீட்டுத்தோட்டம் பல் பயன் தரும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 159

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வீட்டுத்தோட்டம் என்பது சிறிய அளவில் ஒவ்வொரு குடும்பத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் பயிர் வகைகளை நடவு செய்து அதன் உச்சப் பயன்பாட்டை பெற்றுக் கொள்ளுதலாகும். வீட்டுத்தோட்டம் என்றவுடன் அதனை இளக்காரமாக நினைப்பதுவும் அதற்கான முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ள எவரும் முயற்சி செய்வதில்லை. வீட்டுத்தோட்டம் நாம் சுகமாக, சுகதேகியாக வாழ்வதற்கான ஒரு திறவுகோலாகும். அதற்கான வழிகளிலொன்று வீட்டுத்தோட்டம் ஒன்றினை ஒவ்வொருவர் வீட்டிலும் உருவாக்க வேண்டும். சிறுவர்களுக்கான பயனுள்ள திட்டமாக அவர்களின் தலைமைத்துவத்தினை வளர்க்கும் தளமாக உங்கள் வீட்டைச்சுற்றி வீட்டுத் தோட்டம் ஒன்றை அமைத்துக்கொள்ள அவர்களுக்கு வசதி செய்து கொடுங்களேன்! பிள்ளையும் வளமாக வளரும். அதேவேளையில் வீட்டைச்சுற்றி அனைவருக்கும் பயனுள்ள பலன்தரும் வீட்டுத்தோட்டம் தயாராகி விடும்.

ஒவ்வொருவர் வீட்டிலும் சிறியளவிலான வீட்டுத்தோட்டத்தை அமைத்துக்கொண்டால் அங்கே இலை மரக்கறிப் பயிர்களான முளைக்கீரை, வல்லாரை, பொன்னாங்காணி, முருங்கை, அகத்தி, பசளி, பொதினா என நாளுக்கொரு இலைக்கறிகளைப் பெற்றுக் கொள்ளலாம். இவற்றைவிட ஏனைய மரக்கறிகளையும் சிறியளவில் வளர்த்து வீட்டுக்குரிய தேவையைப் பூர்த்தி செய்யலாம். நஞ்சு சாப்பிட விரும்பாத மனிதர் வீட்டுத் தோட்டம் அமைத்திடல் நன்று. சுத்தமாகவும் பயமின்றியும் சாப்பிடலாம்.

'எதை வாங்கினாலும் நஞ்சாமே" என எங்களூர் பெரியவர் மரக்கறிச் சந்தையிலிருந்து விடுப்புக் கேட்டகதை இது. என்றாலும் பீடைநாசினிகள் அதிகளவில் பயன்படுத்தாத விளை நிலத்தில் பயிராகும் மரக்கறிப் பயிர்களிலிருந்து பெறப்படும் மரக்கறி வகைகளை விரும்பி வாங்கலாம். அதற்கும் மேலாக உங்களின் தேவைக்காக உங்கள் வீட்டிலேயே வீட்டுத் தோட்டத்தை அமைத்துக் கொள்ளுங்களேன். இதற்கெல்லாம் எங்கே நேரம் என எண்ணுகிறீர்களா? ஒருநாளின் 24 மணித்தியாலத்தில் அரைமணித்தியாலத்தை அந்த இனிய காலை அல்லது மாலைப் பொழுதை வீட்டுத் தோட்டத்திற்காகச் செலவிடலாமே. சுகாதாரமாக உணவு உண்டது போக காசும் மீதமாகும். இப்போதெல்லாம் உங்களுக்கு கோபம் அதியமாக வருகின்றதா? இதையும் விட மனவுளைச்சலிலிருந்து விடுபடத் தாவரங்களுடன் உறவாடலாமே. கோபம் அதிகமாக வருகிறதா? உங்கள் மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லையா? 'எனக்குப் பொறுமை இல்லை" என்கிறீர்களா? தாவரங்களைப் பாருங்கள். எவ்வளவு பொறுமையுடன் எது செய்தாலும் எது பேசினாலும் கோபப்படாதிருக்கும் அழகைப் பாருங்கள். பசுமையே மனதுக்கு அமைதி தரும். பசுமையே மன நிறைவைத் தரும். பசுமையே நல்ல உணவையும், குடிக்க நீரையும், சுவாசிக்க நல்ல காற்றையும் தரும். பசித்தவர்களுக்குப் பசுமையே ஆகாரமாகும். நோயுற்றவர்களுக்குப் பசுமையே மருந்தாகும். பசுமையே இறுதியில் நல்ல நினைவுகளாகும். எப்பொழுதும் 'சுமை' தாங்கியாகுவது 'பசுமையே' என்பதை நினைவில்



கொண்டால் பசுமையை வளர்க்க, அதனை மேம்படுத்த ஒவ்வொருவருக்கும் ஆவல் பிறக்கும்.

ஒருவருடன் கோபித்துக் கொள்ளும் நேரத்தில் ஒருமரம் நாட்டலாம். உறவை இணைப்பது மரம். கன்னிக்காலுக்கு அப்படியொரு பலம். ஊறவை உயிர்ப்பிப்பதும் மரமே. இறுதியில் உறவு அறுந்த பின்னும் சேர்ந்திருந்து இந்தக் 'கட்டை' வேக 'உடன் கட்டை' யாவதும் மரம்.

'பிளாஸ்ரிக்' மரங்களை, செடிகளை வைத்து அழகு பார்க்கும் அண்ணாவியாரின் மனமும் 'உயிரற்ற' பிளாஸ்ரிக்காக ஆகிவிடும். வீட்டில் வளரும் குழந்தை எப்போதும் புதுமையையே விரும்பும். தினந்தினம் வளரும் தாவரத்தை வீட்டில் காட்சிப் பொருளாக வைத்தாலும் அதில் மாற்றம் தினந்தினம் தெரியும். அந்த மாற்றம் குழந்தைகளின் மனதிலும் உடல் வளர்ச்சியிலும் செறியும், பதியும் இன்னும் மாற்றத்தையும் தோற்றுவிக்கும். எதையுமே செயற்கையாக்கி வாழ நினைக்கும் மனிதருக்கும் இறுதியில் 'செயற்கையே' வாழ்வு ஆகிவிடும். இயந்திர வாழ்க்கையைக் கொஞ்சம் மாற்றி சிறிது நேரமாவது எங்களுக்காக நாம் வாழும் சூழலுக்காக எமது எதிர்கால வளமான சந்ததிக்காக கொஞ்ச நேரமாவது இயற்கையுடனான வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கலாமே? சிந்திப்பதை செயலிலாக்கலாமே.

வீட்டுத்தோட்டம் ஒவ்வொரு வீட்டுக்கும் அவசியமானதாகும். பாடசாலைகளிலோ, அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற வேறுபாடில்லாத அளவிற்கு வீட்டுத் தோட்டத்தின் அவசியம் அலுவலகத் தோட்டமாக உணரப்பட்ட நிலையில் வீட்டுத்தோட்டத்தினை அவரவர் வசதிக்கேற்ப உருவாக்கிக் கொள்ளலாம். அதிலுள்ள பயிர்களுக்கு விசிறுவதற்கு அவரவர் வீட்டிலேயே மண்புழு சுரப்பினைத் தயாரித்து உடன் விசிறலாம். இவ்வாறு விசிறுவதனால் பயிர்களுக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்தினை நீங்களே மண்புழு நண்பனுடன் இணைந்து தயாரிக்க முடியும். வீட்டுத் தோட்டம் எமது தேசத்திற்கான, அதன் அபிவிருத்திக்கான அடிக்கல். இதையே ஒவ்வொருவரும் பயிர் வளர்ப்போம், உணவு செய்வோம் என அறை கூவுகின்றார்கள். சுருங்கச் சொன்னால் சிறிய வீட்டுத்தோட்டம் பாரியளவில் விவசாய அபிவிருத்தியாகி பசுமைப் புரட்சியைச் செய்ய வைக்கும். இவ்வாறான இலகு தொழில்நுட்பம் மூலமாகப் பயிர்ச்செய்கை செலவினைக் குறைப்பதுடன் சேதன விவசாயத்தின் கைகளை மேலும் பலப்படுத்த முடியும்.

சேதன விவசாயத்தை யாழ்ப்பாணத்தில் முழுமையாகச் செய்ய முடியாது என அடித்துக் கூறும் பலவான்களுக்கு நாம் இணைந்து சொல்லக்கூடிய செய்தியிது. பீடைநாசினிகளாலும் அசேதனப் பசளைகளினாலும் மாசுபட்டுப் போயிருக்கும் எமது தேசத்தை நஞ்சற்ற வளங்கொழிக்கும் பிரதேசமாக மாற்றுவோம். இரும்புக் கடைகளிலே கிடைக்கக்கூடிய சிறியகைத் தெளிப்பான் மண்புழுசுரப்பை விசிறுவதற்கான சிறந்த உபகரணம்.

வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு விசிறுவதற்கு மண்புழு சுரப்பு மிகவும் சிறந்தது. வீட்டிலே தயாரித்து அங்கேயே விசிறலாம். வளமான விவசாயத்திற்கு அன்றும் இன்றும் என்றும் இயற்கைதந்த இனியவரம்தான் மண்புழு சுரப்பும் மண்புழு உரமும். சேதன விவசாயத்தைத் துணிந்து முன்னெடுப்பதற்கு இவ்வாறான இலகுவான எளிமையான தொழில்நுட்பம் என்றென்றும் கைகொடுக்கும். பொழுதுபோக்காக செலவிடும் நேரத்தை மண்புழு உரம் தயாரிப்பதிலும் மண்புழுசுரப்பை உற்பத்தி செய்வதிலும் செலவிடலாமே. நேரமும் பிரயோசனமாகக் கழியும். தேவையான மண்புழு சுரப்பும் உரமும் கிடைக்கும். மூலிகைத் தாவரங்களின் இலைகளை தண்ணீரில் ஊறவைத்து வீட்டுத்தோட்டத்தில் வரும் பூச்சிப்பீடைகளைக் கட்டுப்படுத்த முடியும். மாறாக வீட்டுத் தோட்டத்தில் பீடைநாசினிகளை துவும் விசிறாதீர்கள். சேதனமுறை பயிர் வளர்ப்பதை சிறியளவில் வீட்டுத்தோட்டத்தில் செய்ய நாம் அனைவரும் முயற்சி செய்வோம்.


சாதாரணமாக வீட்டுத்தோட்டமமைப்பதை சிறியதொரு காரியமாக எண்ணி அலட்சியப்படுத்துவது தான் தற்போதைய நடைமுறையாகும். வீட்டுத்தோட்டத்தை பசுமைப் புரட்சியின் அலகாக உருவகித்தால் பல விடயங்கள் தெளிவாகும். வீட்டுத்தோட்டத்தில் பூக்கும் தாவரங்களைப் பயன்படுத்துவது குறைவாகும். உங்களது வீட்டில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத்தோட்டத்திற்கு வரும் மகரந்தச் சேர்க்கையாளர்களை கவரும் பூக்குந் தாவரங்களை கணக்கிட்டுப் பாருங்கள். மிகக்குறைவானதாகவே இருக்கும். பொதுவாக அழகுத் தாவரங்களில் வண்ண வடிவமான இலைகளையுடைய அழகு தாவரங்களுக்கே நாம் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றோம். மாறாக பூக்கும் தாவரங்களின் எண்ணிக்கையை அதிகரித்தால் மகரந்தச் சேர்க்கையாளர்களான தேனீக்கள், வண்ணத்துப்பூச்சி, ஈக்கள், பறவைகள் என்பனவற்றை விரும்பியழைக்கலாம். இதன் மூலம் நாம் இவற்றின் எண்ணிக்கையையும் பேணிப்பாதுகாக்க முடியும்.

விளைநிலத்தில் விசிறப்படும் பீடை நாசினிகளினால் மகரந்தச் சேர்க்கையாளர்கள் விரட்டப்படும் போதுவீட்டுத்தோட்டமே இவற்றிற்கு தஞ்சமாக இருக்கும். குறிப்பாக கள்ளி வகைகள், நித்திய கல்யாணி, செவ்வரத்தை, சூரியகாந்தி, இன்னும் மரக்கறிப் பயிர்களான பூசணி குடும்பப் பயிர்கள், கத்தரி, தக்காளி, வெண்டி போன்றவற்றுக்கும் மகரந்தச் சேர்க்கையாளர்கள் வருகை தருகின்றன. வாழை, தென்னை, புளி, மா போன்றவற்றுக்கும் வருகை தரும் மகரந்தச் சேர்க்கையாளர்களுக்கு நாம் அவற்றை இரசாயனங்களை விசிறாது வரவேற்பதற்கான வழிவகைகளை செய்வது முக்கியமானதாகும். பீர்க்கு மற்றும் பூசணி என்பவற்றின் பூக்களுக்கு அதிகளவில் தேனீக்கள் வருகை தருகின்றன.

சணல் மற்றும் அவரைத் தாவரங்கள் இன்னும் மூலிகைத் தாவரங்கள் தேனீக்களைக வருவதற்கு சிறந்தன. அவற்றிற்கு மகரந்தமணி, தேன் சுரப்பு மற்றும் நீர் என்பன கிடைப்பதற்கு நாம் ஆவன செய்து கொடுக்க வேண்டும். இவையனைத்தும் வீட்டுத்தோட்டத்தில் ஏற்படுத்திக் கொடுக்க நாம் முயற்சி செய்தால் எமது சூழலை நாம் சிறப்பாக பேணிப் பாதுகாக்கலாம். சூழகத்துடனான இணைவு இங்கே விவசாயத்தை மேம்படுத்தலைக் கொடுக்கும். சிறுகச் செய்தால் வீட்டுத்தோட்டம். பெருகச் செய்தால் பசுமைப்புரட்சி. எமது நாட்டின் அபிவிருத்தியின் அத்திவாரமும் அதுதானே.

# சந்தை வாய்ப்புகளுக்கான மத்திய நிலையம் வடமாகாணத்தில் அமைக்கப்பட வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

வடக்கு விவசாயிகளின் நன்மை கருதி சந்தை வாய்ப்புகளுக்கான மத்திய நிலையம் ஒன்று வட மாகாணத்தில் அமைக்கப்பட வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விவசாயத்துறையை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் தொடர்பாக மாகாணசபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ். பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு மாகாணத்தின் பாரம்பரிய தொழில் முயற்சியான விவசாயம் விருத்தி செய்யப்படுதல் அவசரமானதும் அவசியமானதுமாகும்.

இப்பகுதியில் உள்ள பாரம்பரிய விவசாயிகள் பல்வேறு காரணங்களால் தமது விவசாய முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் உரிய சந்தை வாய்ப்பினைப் பெறுக் கொள்வதற்கும் சிரமப்படுவதையும் அக் காரணங்களால் தமது விவசாய முயற்சிகளில் இருந்து ஒதுங்கி வேறு சிறு தொழில்கள் புரிய முனைவதையும் அவதானித்திருக்கின்றோம்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் இங்கு நீர்த்தேவைக்கான ஆறுகளோ அல்லது நீர்வீழ்ச்சிகளோ இல்லாத நிலையில் நிலத்தடி நீரை நம்பியே எமது விவசாய முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது.

அண்மைக் காலமாக விவசாய நிலங்களில் பயன்படுத்தப்பட்டுவரும் அளவுக்கதிகமான உரப்பாவனைகள் மற்றும் பூச்சிகொல்லிப் பாவனைகள் எமது நிலத்தடி நீரைப் பருக முடியாத அளவிற்கு அதை நஞ்சாக்கி விட்டது.

எத்தனையோ நூற்றாண்டுகளாக விவசாய முயற்சிகளில் எமது விவசாயிகள் ஈடுபட்டுவந்துள்ளார்கள். ஆனால் விவசாய நிலங்கள் அண்மைக் காலங்களில் மட்டும் இவ்வாறு நச்சடைந்தமைக்கும் மழை காலத்திற்கு வராமைக்கும், நீர்ப்பற்றாக் குறைக்கும் காரணங்கள் கண்டறிதல் அவசியமாகும்.

புற்றரைகள் பலதும் கற்றரைகளாக மாற்றப்பட்டமை, பனந்தோப்புக்கள், மரச்சோலைகள் அகற்றப்பட்டு அங்கே மாடிவீடுகள் அமைக்கப்பட்டமை, வீட்டைச் சுற்றியும், தோட்ட வயல் நிலங்கள் மற்றும் தரிசு நிலங்களைச் சுற்றியும் வரம்புகள் அமைத்து மழை நீரைத் தேக்கி நிலத்தடி நீரின் அளவை பேணுகின்ற நடைமுறையைக் கைவிட்டமை, சிறு சிறு குளங்களை தூர்வை வாரி நீரைச் சேமித்து வைக்க முயற்சி செய்யாமை, சேதனப் பசளைகள் பாவனைக்குப் பதிலாக இரசாயன உரக் கலவைகளின் பாவனை மற்றும் மாற்றுப் பயிரீட்டு முறைமைகள் இல்லாமல் ஆக்கப்பட்டதால் அதிகரிக்கப்பட்ட நோய்த்தாக்கங்கள், பூச்சித் தாக்கங்கள் அதன் காரணமான கிருமிநாசினிப் பாவனைகள் போன்ற பல தவறான நடவடிக்கைகள் நிலத்தடி நீர் அசுத்தமாவதற்கும் நீர்ப்பற்றாக் குறைக்கும் காரணங்களாக அமைந்தது விட்டன. மலக் கழிவுகள் நீருடன் கலப்பதும் ஒரு பாரிய பிரச்சினையாகும்.

இதன் தாற்பரியம் என்னவென்றால் விவசாயத்தின் ஆத்மார்த்த சாராம்சத்தைப் புரிந்துகொள்ள மறந்து விட்டோம். நாம் வாழ்வது இந்தப் பூமியில். அதனோடு இயைந்து வாழப்பழகிக் கொள்ளாவிட்டால் அதன் எதிர்மறையான தாக்கத்திற்கு நாங்கள் இடங்கொடுக்க வேண்டி வரும்.

ஆகவே சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு இல்லாமல் விவசாயிகள் வாழ்ந்து வந்த உலகத்தில் சுயநலம் தலைவிரித்தாடத் தொடங்க அது விவசாயத்தையும் பாதிக்கத் தொடங்கிவிட்டது.

நாம் இயற்கையில் இருந்து வளங்களை எடுக்கின்றோம். அதற்கேற்றவாறு இயற்கைக்கும் பாதுகாப்பு அளிப்பது எங்கள் கடமையாகும்.

உதாரணமாக நஞ்சுப்பொருட்களை நீர் நிலத்துடன் சேர்ப்பது நாம் இன்னொருவருக்கு நஞ்சை ஊட்டி கொலை செய்வதற்குச் சமமாகும். ஆகவே நச்சுத்தன்மை பொருந்திய கிருமி நாசினிகளும், உர வகைகளும் நிலத்தைப் பாதிக்க வைக்கின்றன. இதிலிருந்து விடுபட்டு நிலத்தை எமது நண்பராகப் பாவிப்பதில்தான் இயற்கையை நாம் பேண முடியும். இவற்றை யெல்லாம் கருத்திற் கொண்டு எமது விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

மரக்கறி வகைகள் அனைத்தும் இங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற போதும் இரண்டு குறைபாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஒன்று அளவுக்கதிகமான செயற்கை உரப்பாவனை மற்றையது சந்தை வாய்ப்பின்மை. செயற்கை உரப்பாவனையைக் குறைத்து இயற்கை உரத்தைப் பாவிப்பது நீண்டகால நிலையான பாதுகாப்புள்ள விவசாயத்திற்கு இடங்கொடுக்கும்.

வடமாகாணத்தில் ஒரு பொருளாதாரச் சந்தையை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது இடத்தைத் தேர்ந்தெடுப்பதில், சுயநலமான சிந்தனைகள் மேலோங்கியதால் அத்திட்டங்கள் கைகூட தாமதமானது.

எமது விவசாயிகளும் தமக்குக் கிடைக்க வேண்டிய வரப்பிரசாதங்களை மறந்து ஏவிவிட்டவர்கள் பக்கத்திற்கு எழுந்து நின்று கூச்சல் போட்டதால் நிலைமைகள் குழப்பப்பட்டு ஈற்றில் பொருளாதார மத்திய நிலைய நடவடிக்கைகள் பின்தள்ளிப் போனது. அப்படி இருந்தும் சுயநலத்துடன் ஈடுபட்டோரே எம்மைக் குறைகூறுகின்றார்கள்.

சந்தை வாய்ப்புகளுக்கான மத்திய நிலையம் ஒன்று வட மாகாணத்தில் அமைக்கப்படும் பட்சத்தில் இங்குள்ள விவசாய உற்பத்திப் பொருட்கள் அம் மத்திய நிலையத்தில் விற்பனை செய்வதற்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள விவசாயிகள் இங்கே வந்து பொருட்களை கொள்வனவு செய்யவும் அதே நேரம் தமது பகுதிகளில் உற்பத்தி செய்கின்ற பொருட்களை கொண்டு வந்து இங்கு விற்பனை செய்யவும் ஏற்ற ஒரு தளத்தை நாம் உருவாக்க முன்வர வேண்டும்.

அதன் மூலமாக அதனோடு அண்டிய பகுதிகளில் நூற்றுக்கணக்கான வர்த்தக நிலையங்கள் உருவாவன. உணவகங்கள் அதிகரிக்கப்படுவன. தொழில் வாய்ப்புக்கள் அதிகரிப்படுவன. ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு பல்வேறு தரத்திலான வேலைவாய்ப்புக்கள் கிட்ட வழிவகுக்கும்.

இந்த நிலையில் விவசாயத்தை நவீன மயப்படுத்த வேண்டிய நிலை எழுந்துள்ளது. விவசாயத்தின் ஆத்மார்த்த சாராம்சத்தைப் புரிந்து கொண்டே எமது நடவடிக்கைகளில் நாம் இறங்க வேண்டும்.

அத்துடன் நாம் இந்த பாரிய உலகின் ஒரு பகுதியே என்பது கருத்துக்கெடுக்கப்பட வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## 70வது சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் ஆயிரம் ரூபாய் புதிய நாணயத்தாள் ஜனாதிபதியிடம்



(கொழும்பு)

நாளை 4 ஆம் திகதி இடம்பெறும் 70ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள புதிய 1000 ரூபாய் பெறுமதியுடைய நாணயத்தாள் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

இது மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நான்காவது நினைவு நாணயத்தாள் ஆகும்.

நாணயத்தாளின் பருமன், நிறங்கள், பாதுகாப்பு அடையாளங்கள் என்பன தற்போது பாவனையில் உள்ள 11ஆவது நாணயத் தொடருக்குரிய ஆயிரம் ரூபா நாணயத்தாளுக்கு ஒப்பானதாக காணப்படுவதுடன், இதன் இடதுபக்க கீழ் மூலையில் வண்ணத்துப்பூச்சியின் உருவத்திற்கு பதிலாக பல்லினத் தன்மையை கொண்டாடும் இலட்சினையும் 70ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் இலச்சினையும் பொறிக்கப்பட்டுள்ளன. 11ஆவது நாணயத் தொடருக்குரிய ஆயிரம் ரூபா நாணயத்தாளின் மத்தியில் காணப்படும் ரம்பொட சுரங்க கால்வாய் உருவிற்கு பதிலாக விகாரை, பள்ளிவாசல், கோவில் மற்றும் தேவாலயத்தின் உருவங்கள் மாத்திரம் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்த நினைவு நாணயத்தாள்கள் 2018.02.06 ஆம் திகதி முதல் அத்தாட்சிபெற்ற வர்த்தக வங்கிகளினூடாக பாவனைக்கு வெளியிடப்படும் மென மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் நிதி பயன்பாடுகள் திணைக்களத்தின் தலைவர் தீபா செனவிரத்ன, மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநர் நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட குழுவினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

## சுதந்திர தினத்தன்று விசேட போக்குவரத்து

(கொழும்பு)

நாட்டின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாளை 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேட வாகன போக்குவரத்து திட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கோட்டை மற்றும் காலி முகத்திடலை அண்மித்த வீதிகளில் குறித்த விசேட வாகன போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அன்றைய தினம் அதிகாலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை குறித்த போக்குவரத்துத் திட்டம் அமுலில் இருக்குமெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காலிமுகத்திடல் வீதி அன்றைய தினம் முழுமையாக மூடப்பட்டிருக்கும் என்பதுடன் அதனை அண்டியுள்ள வீதிகள் சிலவற்றில் போக்குவரத்து நடவடிக்கை காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணிவரை மட்டுப்படுத்தப்பட்டிருக்குமென பொலிஸார் தெரிவித்தனர். (இ-8)

## ரவி கருணாநாயக்கவால் கட்சிக்குப் பெரும் அவமானம்

### பிரதியமைச்சர் ரஞ்சன் காட்டம்




(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் ரவி கருணாநாயக்கவால் கட்சிக்குப் பெரும் அவமானம் ஏற்பட்டுள்ளதாக பிரதி அமைச்சரும் கட்சியின் உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

துணைத் தலைவர் பதவியை ரவி கருணாநாயக்க இனி இராஜினாமா செய்தாலும் இனிப் பயனில்லை என அவர் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், ரவி கருணாநாயக்க பற்றி குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் கட்சிக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என அவர் தெரிவித்தார்.




இதன் காரணமாக கட்சிக்கு கிடைக்கக்கூடிய வாக்குகள் கிடைக்காமல் போகக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார். காலம் தாழ்த்தியேனும் ரவி கருணாநாயக்கவை கட்சிப் பதவியிலிருந்து நீக்குவதற்கு கட்சித் தலைமை எடுத்த தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)




## ஏமாற்றாதே ஏமாற்றாதே!



நீண்ட காலத்துக்கு முன்னர், அனான்சி என்ற சிலந்தி வாழ்ந்து வந்தது. அது மிகவும் பேராசை பிடித்ததாக இருந்தது. அதனால், அது தன்னுடைய பொருட்கள் எதையும் மற்றவர்களுடன் எப்போதுமே பகிர்ந்து கொள்ளாது. 'பகிர்ந்துண்டு வாழ்வாரே வாழ்வர்' என்பதை அது புரிந்துகொள்ளவில்லை. ஒரு நாள், அது தன்னுடைய தோட்டத்தில் விளைந்த சுவையான சேனைக் கிழங்குகளைச் சமைத்துக்கொண்டிருந்தது. சேனைக் கிழங்கின் வாசனை அதன் மூக்கைத் துளைத்து மேலும் பசியை உண்டு பண்ணியது. ஆனால், எப்படியோ மதிய உணவுவேளை வரும்வரை பொறுமையுடன் காத்திருந்தது.

அது தன்னுடைய சுவையான சேனைக்கிழங்குகளைச் சாப்பிடத் தயாராக இருக்கும் போது, யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அனான்சிக்கு ஒரே கோபமாக வந்தது. அதே கோபத்துடன் வேகமாக வந்து கதவைத் திறந்தது. பார்த்தால், கோசோ என்ற ஆமை அங்கே நின்றுகொண்டிருந்தது. அது நீண்ட தூரம் பயணித்து வந்த களைப்பிலும் பசியிலும் இருந்தது.

"வணக்கம் அனான்சி, நீ என்ன சமைத்துக்கொண்டிருக்கிறாய்? ஏதோ நல்ல சுவையாக சமைத்து வைத்திருக்கும் வாசனை வருகிறது" என்றது கோசோ.

"ஓ, ஆமாம், இன்று மதிய உணவுக்காக சேனைக்கிழங்குகள் சமைத்திருக்கிறேன்" என்று தயக்கத்துடன் சொன்னது அனான்சி.

"ஓ, அப்படியா? நீண்ட பயணம் முடித்து திரும்பியிருப்பதால் களைப்புடனும் பசியுடனும் இருக்கிறேன். இன்று உன்னுடன் நான் சாப்பிடலாமா?" என்று கேட்டது கோசோ.

அனான்சிக்கு கோசோவுடன் உணவைப் பகிர்ந்துகொள்வதில் சற்றும் விருப்பமில்லை. ஆனால், உணவு நேரத்தில் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுடன் உணவைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது அந்த நாட்டின் வழக்கம். அதனால், அனான்சியால் மறுக்க முடியவில்லை. ஆனால் எப்படியிருந்தாலும்கோசோவுடன் சேனைக்கிழங்குகளைப் பகிர்ந்துகொள்ளக் கூடாது என்ற முடிவுடன் இருந்தது.

"அதற்கென்ன தாராளமாக, உள்ளே வா! இந்த இருக்கையில் உட்கார்! நான் உனக்கு சாப்பிட எடுத்து வருகிறேன்" என்று அனான்சி கோசோவிடம் சொன்னது.

இருவரும் சாப்பிடத் தயாரானார்கள். அப்போது, திடீரென்று அனான்சி கோசோவை சாப்பிட விடாமல் தடுத்தது.

"சாப்பிடுவதற்கு முன்னால் கைகளைக் கழுவ வேண்டுமென்பது உனக்குத் தெரியாதா? போய், உன் கைகளைச் சுத்தமாகக் கழுவிக்கொண்டு வா!" என்றது அனான்சி.

கோசோ தன்னுடைய கைகளைப் பார்த்தது. பயணத்திலிருந்து அப்படியே சாப்பிட வந்ததால் அவை மிகவும் அழுக்காக இருந்தன. அருகிலிருக்கும் ஆற்றுக்குச் சென்று கைகளைக் கழுவிக் கொண்டு வந்தது கோசோ.

அதற்குள் அனான்சி சாப்பிடத் தொடங்கியிருந்தது. "சேனைக்கிழங்குகள் ஆறிப்போய்க்கொண்டிருந்தன. அதனால் சாப்பிடத் தொடங்கி விட்டேன். நீயும் என்னுடன் சாப்பிடத் தொடங்கு!" என்றது அனான்சி.

ஆனால், மறுபடியும் அதே காரணத்தைச் சொல்லி கோசோவை சாப்பிடவிடாமல் திருப்பி அனுப்பியது அனான்சி. பாவம் கோசோ! அது தன்னுடைய கைகளைப் பார்த்தால் மீண்டும் அவை அழுக்காகியிருந்தன. ஆற்றிலிருந்து வீட்டுக்கு வரும் வழியில் மீண்டும் அதனுடைய கைகள் அழுக்காகியிருந்தன.

(தொடரும்)




❖1377- இத்தாலியின் செசெனா நகரத்தில் பாப்பரசரின் படைகளினால் 2000 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

❖1509 - போர்த்துக்கலுக்கும் துருக்கிக்கும் இடையில் இந்தியாவின் தியூ என்ற இடத்தில் கடற்சமர் மூண்டது.

❖1690-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது காகித நாணயம் மசாசூசெட்ஸில் அறிமுகப்படுத்தப் பட்டது.

❖1894 - யாழ்ப்பாணத்தின்பல இடங்களிலும்நிலநடுக்கம் உணரப்பட்டது.

❖1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா மார்ஷல் தீவுகளைக் கைப்பற்றியது.

❖1945- இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் 1000 விமானங்கள் பேர்ளின் மீது குண்டுகளை வீசின.

❖1969 - யாசீர் அரபாத் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராகத் தெரிவானார்.

### பிறப்புகள்

❖1504- ஸ்கிபியோன் ரெபிபா, இத்தாலியக் கத்தோலிக்க திருச்சபையின் கர்தினால் (இ. 1577)

❖1821- எலிசபெத் பிளாக்வெல், அமெரிக்க மருத்துவர், கல்வியாளர் (இ. 1910)

❖1898- அல்வார் ஆல்ட்டோ, பின்லாந்துக் கட்டடக் கலைஞர் (இ. 1976)

❖1899- லாவ் ஷே, சீன எழுத்தாளர் (இ. 1966)

❖1900- டி. ஆர். சேஷாத்ரி, தமிழக வேதியியலாளர் (இ. 1975)

❖1930-மணி கிருஷ்ணசுவாமி, கர்நாடக இசை வாய்ப்பாட்டுக் கலைஞர் (இ. 2012)

❖1933-தான் சுவே, பர்மிய அரசியல்வாதி, பிரதமர்

❖1944- கந்தர்வன், தமிழக எழுத்தாளர், கவிஞர், தொழிற்சங்கவாதி (இ. 2004)

❖1963- ரகுராம் கோவிந்தராஜன், இந்தியப் பொருளியல் அறிஞர், கல்வியாளர்

❖1983- சிலம்பரசன், தமிழக நடிகர்

### இறப்புகள்

❖1468- குட்டன்பேர்க், அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்த செருமானியர் (பி. 1398)

❖1855- பானியல் புவர், அமெரிக்க இலங்கை மிஷனின் மூத்த முதல்வர்

❖1883- ரிச்சார்ட் வாக்னர், செருமானிய இயக்குநர், இசையமைப்பாளர் (பி. 1813)

❖1900- எ. ஆ. கிருட்டிணப்பிள்ளை, தமிழகக் கிறிஸ்தவத் தமிழ்ப் புலவர் (பி. 1827)

❖1915- யோன் சிலம்புவே, ஆபிரிக்க விடுதலைப் போராளி (பி. 1871)

❖1919- எட்வார்டு சார்லசு பிக்கரிங், அமெரிக்க வானியலாளர், இயற்பியலாளர் (பி. 1846)

❖1924- வூட்ரோ வில்சன், அமெரிக்காவின் 28 வது அரசுத்தலைவர், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1856)

❖1925- ஆலிவர் ஹெவிசைட், ஆங்கில மின் பொறியாளர், கணிதவியலாளர், இயற்பியலாளர் (பி. 1850)

❖1964- கதிரவேலு சிற்றம்பலம், ஈழத்து அரசியல்வாதி (பி. 1898)

❖1969- கா. ந. அண்ணாதுரை தமிழகத்தின் 7வது முதலமைச்சர், எழுத்தாளர் (பி. 1909)

❖1975- வில்லியம் டி. கூலிட்ச், அமெரிக்க இயற்பியலாளர், பொறியியலாளர் (பி. 1873)

❖1987- ஜார்ஜ் தாம்சன், பிரித்தானிய மார்க்சியப் புலமையாளர், மானிடவியலாளர் (பி. 1903)

❖2005- எர்னஸ்ட்மாயர், செருமானிய-அமெரிக்க உயிரியலாளர், பறவையியலாளர் (பி. 1904)

❖2016- பல்ராம் சாக்கர், இந்திய அரசியல்வாதி (பி. 1923)

### சிறப்பு நாள்

❖மாவீரர் நாள் (சாவோ தொமே மற்றும் பிரின்சிப்பி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 100 | 100 | 120 |
| தக்காளி | 50 | 50 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 80 | 40 | 60 | 40 | 60 |
| கரட் | 80 | 80 | 90 | 100 | 100 |
| பூசணி | 80 | 40 | 40 | 40 | 100 |
| புடோல் | 60 | 50 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 150 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 150 | 120 | 200 |
| பாகற்காய் | 140 | 200 | 140 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 120 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 120 |
| பயற்றங்காய் | 150 | 100 | 140 | 120 | 60 |
| லீக்ஸ் | 150 | 250 | 200 | 200 | 120 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 60 | 240 |
| கறிமிளகாய் | 150 | 100 | 150 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 1000 | 800 | 400 | 200 |
| போஞ்சி | 80 | 100 | 150 | 60 | 120 |
| கத்தரித்தம்புள்ள | 50 | 50 | 70 | 60 | 60 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 20 | 10 | 40 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 90 | 100 | 75 |
| இராசவள்ளி | 160 | 100 | 200 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 80 | 50 | 120 | 100 | 120 |
| முள்ளங்கி | 20 | 50 | 80 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 60 | 60 | 80 |

பேசிய பிறகு வருந்துவதை வட பேசுவதற்கு முன்னாலேயே யோசனை செய்வது மிகவும் நல்லது.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிக்கும் அநாகரிகத்தை அனுமதிக்கலாமா?

நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். சட்டமும் நீதிபரிபாலனமும் தம்மைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையிலேயே உலகம் முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், எங்கள் தமிழர் பிரதேசங்களில் நீதிபரிபாலனத்தின் மீது மக்கள் அதீத நம்பிக்கை கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே.

நிலைமை இதுவாக இருக்கையில், மல்லாகம் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் இரட்ணஜீவன் கூல் கண்டபாட்டில் விமர்சனம் செய்துள்ளார்.

நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகிய மறுநாளே பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி நீதிமன்றத் தீர்ப்பை விமர்சித்த செயல் கண்டு மக்கள் அதிர்ந்து போயுள்ளனர்.

நீதிமன்றத் தீர்ப்பை இவ்வாறு விமர்சித்தால் நிலைமை என்னவாகும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பில் திருப்தியின்மை ஏற்படுமாக இருந்தால், அதன் அடுத்த கட்ட நடவடிக்கை மேல் நீதிமன்றத்தை அல்லது உயர் நீதிமன்றத்தை நாடுவதாகவே இருக்கும்.

ஆனால் இங்கு பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி, நீதிமன்றத்தின் தீர்ப்பை இரட்ணஜீவன் கூல் விமர்சித்தார் என்றால், இது நீதிபரிபாலனத்துக்கான சவால் என்பதை எவரும் மறுதலிக்க முடியாது.

நீதிமன்றங்கள் மீதும் நீதிபதிகள் மீது எம் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைத் திட்டமிட்டுச் சிதைப்பதே இதன் உள்ளார்ந்த நோக்கம் என்று கருதுவதில் தவறில்லை.

மல்லாகம் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை விமர்சித்து அதனை ஊடகங்களில் பரப்பும் வேலையை தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் செய்தார் என்றால்; தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி ஒன்றைக் கண்டபாட்டில் குறைகூறி இவர்களை அரசியலில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று அவர் கூறுகின்றார் என்றால்,

நடைபெறப்போகும் தேர்தல் நடுநிலைமையாக – நீதியாக – ஜனநாயகப் பண்பு நிறைந்ததாக இருக்குமா? என்ற ஐயவினா தமிழ் மக்களிடம் எழுவதில் நியாயம் இருக்கவே செய்யும்.

எதுஎவ்வாறாயினும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் இரட்ணஜீவன் கூல் நீதிமன்றத் தீர்ப்பை விமர்சித்தமைக்கு நீதிபரிபாலனம் தனது சட்ட நியாயங்களுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அதேநேரம் பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி நீதிமன்றத் தீர்ப்பை விமர்சித்துள்ளமை தொடர்பில், எங்கள் சட்டத்தரணிகள் சங்கம் தனது கடுமையான கண்டனத்தையும் எதிர்ப்பு நடவடிக்கையையும் காட்டத் தவறாது என்பதும் மக்களின் நம்பிக்கை.

நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிப்பது பாதகம் அல்ல என்று விட்டுவிட்டால்; நாளை, கசிப்பு வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளியும் பத்திரிகையாளர் மாநாட்டைக்கூட்டி, நான் கசிப்புக் காய்ச்சவில்லை. நான் காய்ச்சியது மக்களின் ஆரோக்கியத்துக்கான கசாயம். எனக்கு விதிக்கப்பட்ட தண்டம் அபாண்டமானது என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவையாவற்றுக்கும் மேலாக, 500 ரூபாயுக்கு விலை போகும் பொலிஸார் என்று இரட்ணஜீவன் கூல் பகிரங்கமாகச் சுமத்திய குற்றச்சாட்டு பொலிஸ் சேவைக்கு இழுக்கைத் தரும் என்பதால், பொலிஸ் தலைமையும் தனது சேவைக்கு ஏற்பட்ட களங்கத்தை நீக்க நடவடிக்கை எடுக்கும் என நம்பலாம்.

# மோசடியாளர்களை தண்டிக்க புதிய சட்டங்கள் வேண்டும்

## வியாழேந்திரன் எம்.பி.வலியுறுத்து

(ஏறாவூர்)

நாட்டில் பாரிய மோசடிகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமானால், சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற "மார்ச்-12" இயக்கத்தின் தூய அரசியலை ஏற்படுத்தும் கருத்தாடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தற்போது ஏற்பட்டுள்ள பிணைமுறி போன்ற பல்வேறு குற்றங்களுக்கு 20 வருடங்களை கடந்தும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த முடியாத நிலையேற்படும்.

இன்று தேர்தல் களத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தாங்கள் செய்த சேவையினை விட மற்றவர்களை தாழ்த்தி பேசுவதையும் விமர்சிப்பதையுமே செய்து வருவதை காண முடிகின்றது. இந்நிலையினை விடுத்து தங்களது வெற்றியை நோக்கி பயணித்தால் அல்லது மக்கள் முன்பாக தாங்கள் செய்த சேவைகளை பரப்புரை செய்தால்நிச்சயமாக அந்த மக்கள் எங்களை ஆதரிப்பார்கள். இதுவே யதார்த்தமாகும்.

இன்று நாங்கள் தூய்மையான அரசியலைப் பற்றி பேசுகின்றோம். சில போலியான முகப்புத்தகங்களில் பெண வேட்பாளர்கள் சிலரை தகாத வார்த்தைகளினால் விமர்சிப்பதாகவும், இதனால தாங்கள் தேர்தலில் இருந்து விலகப் போவதாகவும் அவரகள கூறுகின்றனர். இந்தசூழல மாற வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## திறப்பு விழா

யாழ்ப்பாண விஞ்ஞானச சங்கத்தின் 25வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சங்க அலுவலகமானது இல.84, கல்லூரி வீதி நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இன்றைய தினம் காலை 9.00 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது

அத்துடன் இச்சங்கத்தினால் வெளியிடப்படவுள்ள புலமைசார் பருவ இதழின் (Journal of Jaffna Science Association) இணையத்தளமும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 25வது செயற்குழு அறிவித்துள்ளது. (ம)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடத்தனை அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் வி.பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி பிரதேச கல்வி அலுவலர் எஸ்.திரவியராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-8,19)

# நாடு அழிந்து வருகிறது

## மைத்திரியுடன் இணைவதை மக்கள் விரும்பவில்லை

## மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்தை அமைக்க இணையுமாறு ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்தாலும் மக்கள் அதனை விரும்பவில்லை என்பதால், தானும் அதனை நிராகரித்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி இறக்குவானை பகுதியில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அன்று மாணிக்கக்கல் அகழ்வதில் எந்த பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால் தற்போது அதுவும் முடியாது. அதுமாத்திரமல்ல எதிர்வரும 10 ஆம் திகதிக்கு பின்னர் மிளகு மீள் ஏற்றுமதியை நிறுத்த போவதாக ஜனாதிபதி அறிவித்தார்.

தற்போதே அதனை நிறுத்தலாமே. ஜனாதிபதி புதுமையாக கதைகளை கூறுகிறார். எங்களுடன் இருந்த மைத்திரியா இவர் என எனக்கு எண்ண தோன்றுகின்றது.


நாங்கள் நாட்டை கட்டியெழுப்பினோம். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம். கிராமத்திற்கு அபிவிருத்தியை கொண்டு சென்றோம்.

யுத்த அச்சமின்றி அபிவிருத்தியடைந்து வந்த நாடு புதிய மாற்றத்தினால் அழிந்து வருகிறது. நாங்கள் வாங்கியதை விட இரண்டு மடங்கு கடனை வாங்கி இவர்கள் செய்தது எதுவு மில்லை.

திறைசேரியின் பணம் அமைச்சர்களுக்கு நெருக்கமானவர்களிடம் இருப்பதாக இந்த அரசாங்கத்தின் ஜனாதிபதி கூறுகிறார். நாங்கள் கூறவில்லை.

நாட்டின் ஜனாதிபதி இதனை கூறுகிறார் என மகிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### மனிதவாழ்வில் பஞ்சலோகங்கள் வகிக்கும் பங்கு என்ன?

தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் ஆகியவை பஞ்சலோகங்கள் ஆகும். சிறு வயதில் குழந்தைகளுக்கு பஞ்சலோகம் அணிவிப்பது ஒரு சடங்காகும். பஞ்சலோகத்தின் சிறு சிறு ஐந்து நீண்ட முத்துக்களை கறுப்புக் கயிற்றில் கோர்த்து குழந்தையின் இடுப்பில் கட்டுவார்கள். நமது உடலுக்கு பஞ்சலோகசக்தி கூடுதல் பலம் அளிக்கிறது என்பது நம்பிக்கை.

பஞ்சலோகத்தில் கால் சிலம்பு, வளையம் போன்ற ஆபரணங்களைச் செய்து குழந்தைகளுக்கு அணிவிக்கலாம். இது பஞ்சலோகத்தின் ஒவ்வொரு சக்தியும் உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் கிடைக்கும் என்பதற்காகச் செய்யப்படுவதாகும். பஞ்சலோகங்கள் மனித வாழ்வில் தீர்க்க முடியாத ஒன்றாகும்.

பழைய காலத்தில் பஞ்சலோகங்களைப் பல வடிவங்களிலும் முறைகளிலும் உபயோகித்து வந்தார்கள். தங்கத்தை ஆபரணங்களாக அணிவித்து வந்தார்கள். திருமணம் போன்ற சடங்குகளில் தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டு பெண்களைக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்கள். இருந்தாலும் இந்தக் காலத்தைப்போல் தங்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. (தொடரும்)

## யானை தாக்கிய விகாராதிபதி வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

பெல்லன்வில ரஜமகா விகாரையின் விகாராதிபதி பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் யானைக்கு உணவு கொடுக்க முற்பட்டபோது ஏற்பட்ட விபத்து காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

களுபோவில வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் தேரர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பெல்லன்வில விமலரத்ன தேரர் நேற்று காலை மியன் குமரா என்ற யானைக்கு உணவு கொடுக்கும் போதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள தேரரது இடுப்பு எலும்பு உடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




- ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படுவதையும், வெறுப்பதையும் விட்டுவிட்டு ஒருவருக்கொருவர் பூஜிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.
- மனதுக்கு பிடித்த வேலையை செய்ய மூடனாலும் முடியும், எந்த வேலையையும் தன் மனதுக்குப் பிடித்ததாகச் செய்பவன் அறிவாளி.
- பிறர் நலனுக்காகச் சிறிது பணி செய்தாலும் உனக்குள் உள்ள சக்தி விழித்துக் கொள்ளும். பிறருக்காக சிறிது சிந்தித்தாலும், உன் உள்ளத்தில் சிங்கத்தின் பலம் வந்து சேரும்.
- பணத்தால் எதுவும் ஆவதில்லை, பெயரால், புகழால், கல்வியால் எதுவும் ஆவதில்லை, அன்பால் அனைத்தும் நிறைவேறும்.
- எவரையும் "நீ கெட்டவன்" என்று சொல்லாதே, "நீ நல்லவன் தான். இன்னும் நல்லவனாக ஆகு" என்று தான் கூற வேண்டும்.
- உன்னை நீயே வெறுக்காமலிருப்பது தான் முதற் கடமையாகும். முன்னேற்றமடைய முதலில் சுயநம்பிக்கை அவசியம் தேவை.



முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலையின் அதிபர் க.ஜெயவீரசிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

# ஒரேசதம் மூலம் வரலாற்று சாதனை படைத்த விராட் ஹோலி



இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி, நேற்றைய போட்டியில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக சதம் விளாசியதன் மூலமாக, பல வரலாற்று சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

தென் ஆபிரிக்காவில் சுற்றுப பயணம் செய்து விளையாடி வரும் இந்திய அணி, தற்போது ஒருநாள் தொடரில் பங்கேற்று வருகிறது.

நேற்று நடந்த முதல் ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியா சத்தில் வெற்றிபெற்றது.

நேற்றைய போட்டியில், இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி சதம் விளாசினார், இது அவருக்கு 33 ஆவது சதமாகும். இதன் மூலம் இந்திய அணியின் தலை வராக அதிக சதங்கள் விளாசிய முன்னாள் ஜாம்பவான் சௌரவ் கங்குலியின் சாதனையை ஹோலி சமன செய்துள்ளார்.

கங்குலி, 142 போட்டி களில் 11 சதங்கள் அடித்திருந்தார். ஆனால், விராட் ஹோலி 41 போட்டிகளிலேயே 11 சதங்கள் அடித்துள்ளார்.

விராட் ஹோலி, இரண்டாவதாக துடுப்பாட்டம் செய்த போது 20 சதங்கள் விளாசியுள்ளார். அதில், 18 போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

சர்வதேச அளவில் அணித தலைவராக அதிக சதங்கள் அடித்தவர்களின் பட்டியலில், அவுஸ்திரேலியாவின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண் டிங் (22) முதலிடத்திலும், தென் ஆபிரிக்காவின் டி வில்லியர்ஸ் (13) இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.

மேலும், இந்த சதத்தின் மூலமாக ஒருநாள் போட்டியில் விளையாடும் அனைத்து நாடுகளிலும், சதம் அடித்த வீரர் என்ற பெருமையைப் பெற்று ள்ளார்.

ஹோலி அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை, நியூசிலாந்து, வங்கதேசம், தெ ன்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் ஆகிய நாடுகளில் சதம் அடித்துள்ளார். ஆனால், பாகிஸ்தானில் விளையா டாததால் அங்கு, அவர் சதம் விளாச முடியாமல் போய் விட்டது.

இதற்கு முன்பு, இந்திய முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் மற்றும் இலங்கையின் முன்னாள் ஜாம்பவான் ஜெயசூரிய ஆகியோர் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர். தற்போது விராட் ஹோலியும் அவர்களுடன் இணைந்துள்ளார்.

டெண்டுல்கர் மேற்கிந்தியத் தீவுகளிலும், ஜெயசூரிய சிம்பாவேயிலும் சதம் அடிக்கவில்லை. ஹோலி இதுவரை 203 ஒருநாள் போட்டிகளில், 33 சதங்கள் அடித்துள்ளார். அதில் வெளி நாட்டு மண்ணில் 19 சதங்கள் அடங்கும். (க)

அன்பான மக்களே!

'தூய கரங்கள் - தூய நகரம் - தூய கிராமம்'
'Clean hands - Clean City - Clean Village'

இச் சமூகத்தில் மிகப்பெரிய கருத்துருவாக்கங்களைச் செய்து சமூக மாற்றத்திற்கான அடித்தளத்தை இடும் வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள்தான் அரசியல் மாற்றத்திற்கும் காரணமாக அமைய வேண்டும் என்பது எங்கள் அன்பான வேண்டுகோள்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் அபிவிருத்திக்கான தேர்தலாக இருந்தாலும் இது **பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்து ஒற்றையாட்சியை வலியுறுத்தும் இடைக்கால அரசியல் அமைப் பிற்கு** ஆதரவு தேடுவதாகவே அமையப்போகிறது என்பதே உண்மை. இதற்கு ஆதரவு தேடும் முகமாகவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உள்ளடங்கலான அரசின் பங்காளி கட்சிகள் யாவும் இத்தேர்தலில் களமிறங்கியுள்ளன என்பதை நாம் உணரவேண்டும்.

எனவே உங்கள் மனசாட்சியின் கதவுகளை உரக்கத்தட்டி இப்பெரும் ஆபத்தினை உணர்ந்து எமக்கு வாக்களித்து அரசியல் பேரம்பேசுகின்ற ஒரு சக்தியாக எதிர்காலத்தில் எமது அரசியல் இயக்கத்தை உருவாக்குவீர்கள் என்பது எங்களுடைய அசையாத நம்பிக்கை.

அதுமட்டுமல்லாது **'தூய கரங்கள் - தூய நகரம் - தூய கிராமம்'** என்ற தொனிப் பொருளில் இம்முறை உள்ளூராட்சித்தேர்தலை எதிர்கொள்கின்ற நாம் புலம்பெயர் தமிழ் உறவுகளின் நிதி உதவியுடன் தாயகத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள காத்திருக்கின்றோம். தமிழர் அரசியலில் புதிய இரத்தத்தினை பாய்ச்சி, புதிய சிந்தனையுடன் நமக்கான அரசியலை முன்னெடுக்க எம்மோடு இணைந்து எமது கரங்களை பலப்படுத்த எமக்கு வாக்களிக்குமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் சம உரிமை இயக்கம் மற்றும் நம்பிகள் நல்வாழ்வுக் கழகம் என்பவற்றின் கூட்டான **தமிழ் தேசியப் பேரவைக்கு** வாக்களித்து எமக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கித்தான் பாருங்கள்.

**அவலங்கள் சுமக்காத இன்னொரு விடியலுக்காய்
வாக்களிப்போம் தமிழ்த் தேசியப் பேரவைக்கு**

**என்றும்போல் இன்றும் வருகிறார்கள்
"வெற்றுவார்த்தைகளுடன்"
சிந்தித்து வாக்களிப்போம் தமிழ்த் தேசியப் பேரவைக்கு**

**தமிழா விழித்துக்கொள் தலையெழுத்தை
மாற்றிக்கொள். மாற்றத்துக்காய் வாக்களிப்போம்
தமிழ்த் தேசியப் பேரவைக்கு**

நன்றி



கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்
(தலைவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி)



விஸ்வலிங்கம் மணிவண்ணன்
(யாழ் மாநகர முதன்மை வேட்பாளர்)



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன்
தமிழ்த் தேசியப் பேரவை (021)

## வவுனியா மேல் நீதி...

மாற்றக் கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த மனு கடந்த செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது.

அதன்போது சட்டமா அதிபர் சார்பாக முன்னிலையான அரச சட்டத்தரணி அரசியல் கைதிகள் மூவருக்கும் எதிரான சாட்சிகளாக மூன்று சாட்சிகள் காணப்படுகின்றனர்.

சாட்சிகள் மூவரும் வவுனியா மேல் நீதிமன்றுக்கு சாட்சியளிக்க வருவதில் தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக கூறிய தன் காரணமாகவே இந்த வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

எனவே சாட்சிகளுடன் தொடர்பு கொள்வதற்குரிய கால அவகாசத்தை வழங்குமாறு அரச சட்டத்தரணி மேன்முறையீட்டு நீதிமன்றில் கோரியிருந்தார்.

இதனால் அந்த மனு மீதான விசாரணை இன்றுவரை மேன்முறையீட்டு நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அந்த மனு நேற்றைய தினம் மீளவும் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

இதன்போது சமுகமளித்திருந்த சட்டமா அதிபர் சார்பான அரச சட்டத்தரணி, மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன் மற்றும் இராசதுரை திருவருள் ஆகியோரின் வழக்கு விசாரணைகள் அநுராதபுரம் மேல் நீதிமன்றிலிருந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு மீளவும் மாற்றப்படும் என்று மன்றுக்கு அறிவித்தார். மேன்முறையீட்டு நீதிமன்றம் மனு மீதான விசாரணையை முடிவுறுத்திக் கட்டளையிட்டது.

2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் வவுனியா மேல் நீதிமன்ற நியாதிக்க எல்லையான புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இடைக்கட்டு பகுதியில் 18 கடற்படை சிப்பாய்களுக்கும், 8 இராணுவச் சிப்பாய்களுக்கும் உயிரிழப்பை விளைவித்தனர் என்று தெரிவித்து பயங்கரவாத தடைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் இராசதுரை திருவருள், மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன் ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ம.சுலக்சன், க.தர்சன் ஆகிய இருவருக்கும் எதிராக 2013ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குற்றப்பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

முதலாம் எதிரியான இராசதுரை திருவருள் என்பவரை இந்த வழக்கிலே சேர்ந்து 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால குற்றப்பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கை தொடர்வதற்கு உதவி செய்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், சிவன் பவுண்டேசன் நிறுவுனர் கணேஸ் வேலாயுதம், வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் உப தலைவர் எஸ். சதீஸ் ஆகியோருக்கு கைதிகளின் உறவினர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (ம-4,250)

## அத்தியாவசிய...

என்று, சதொச நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி எஸ்.எச்.எம். பராஸ் தெரிவித்துள்ளார்.

சதொச நிறுவனத்தின் ஊடாக சுதந்திரத்தைக் கொண்டாடுவோம் என்ற தொனிப்பொருளில் இந்த வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்படவுள்ளதோடு, மக்கள் இதன் மூலம் பாரிய அளவில் நன்மையடைவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோ பாஸ்மதி அரிசி 120 ரூபாவிற்கும், ஒரு கிலோ அரிசி 60 ரூபாவிற்கும், 500 கிராம் பெரிய வெங்காயம் 55 ரூபாவிற்கும், 500 கிராம் செத்தல் மிளகாய் 110 ரூபாவிற்கும், 500 கிராம் பருப்பு 54 ரூபா 50 சதத்திற்கும், விற்பனை செய்யப்படுவதாகவும், சதொச நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மேலும் தெரிவித்தார். (ம-4)

## இறைமை பகிரப்பட...

யாட்சி பொருத்தமில்லை என 'இடைக்கால அறிக்கையின் முதற் பக்கத்திலேயே எழுதப்பட்டுள்ளது.

அதனை ஒருத்தரும் வாசிக்கவில்லையா என தமிழரசுக் கட்சியின் பிரசார கூட்டத்தில் அடிக்கடி சிலர் கூறிக்கொண்டு திரிகின்றனர். இவ்வாறு குறிப்பிட்டதன் காரணம் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கூறுவது போன்று, அதிகாரங்கள் பொருத்தமற்றது என்பதற்காக குறிப்பிடப்படவில்லை.

ஐக்கிய அரசு இராச்சியத்தில் இருந்து ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து பிரிந்து செல்லும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

அவ்வாறு தமிழர்கள் பிரிந்து சென்று விடக் கூடாது என்ற காரணத்திற்காகவே ஒற்றையாட்சி பொருத்தமில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. ஒற்றையாட்சியை மேலும் பலப்படுத்துவதாகவே இது குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் உள்ளூராட்சி தேர்தலில் தமிழர் தேசத்தை கட்டி எழுப்பக் கூடியவர்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் தமிழ்த் தேசிய சிந்தனையைக் கொண்டவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என குருபரன் மேலும் தெரிவித்தார். (ம-4)

## ஐந்து சந்தேக நபர்கள்...

ஏனைய 5 பேரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நேற்று பிணையில் விடுவித்தது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவித்து பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்களான முஸ்லிம் இளைஞரான இக்ரம் உள்ளிட்ட மூவர் கொழும்பு புறநகர் பகுதியில் வைத்து கடந்த நவம்பர் 28ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

அடுத்த இரண்டு நாள்களில் வவுனியா நகர் பகுதியில் வைத்து மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் 6 பேரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் கடந்த நவம்பர் 30ஆம் திகதி தொடக்கம் சுமார் இரண்டு மாதங்களாக தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் மொகமெட் இக்ரமுக்கு எதிராக 4 வழக்குகளைப் பொலிஸார் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த நான்கு வழக்குகளில் இரண்டில் ஏனையவர்களில் நால்வரும் ஒரு வழக்கில் 5 பேரும் சந்தேகநபர்களாக இணைக்கப்பட்டிருந்தனர்.

நான்கு வழக்குகளும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தன.

சந்தேகநபர்கள் 6 பேரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர் இக்ரமிடம் கைக்குண்டு மீட்கப்பட்டதாகத் தனியாக முன்வைக்கப்பட்ட வழக்கில் அவரது விளக்கமறியல் வரும் 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

ஏனைய 3 வழக்குகளிலும் இக்ரம் உள்ளிட்ட 6 சந்தேகநபர்களையும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் விடுவித்து நீதிவான் உத்தரவிட்டார்.

இக்கிரம் உள்ளிட்ட ஆறு சந்தேகநபர்களும் வழங்கிய தகவலின் அடிப்படையில் 6 வாள்கள், 2 கைக்கோடாரிகள் மற்றும் கைக்குண்டு ஒன்று என்பன கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர். (ம-4)

## வடக்கில் விகாரை...

முன்னணியின் தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர்,

தேர்தலின் பின் வடக்கு கிழக்கிலே ஆயிரம் விகாரைகளை அமைக்கப்போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது. வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடைய மரபுவழித் தாயகம் என நாங்கள் கூறிவருகின்ற நிலையில் வடக்கு கிழக்கிலே சிங்கள மயப்படுத்தலை தீவிரப்படுத்துவதற்காக ஆயிரக்கணக்கான விகாரைகளை இங்கு நிறுவுவதற்கு தற்போது நல்லாட்சி எனக் கூறுகின்ற இந்த அரசாங்கம் முனைப்புடன் ஈடுபட்டுவருவதை ரணில் விக்கிரமசிங்கவினுடைய பேச்சு வெளிப்படுத்தியிருக்கின்றது.

மாறி மாறி இலங்கையில் அரசாட்சி செய்து வருகின்ற அரசாங்கங்கள் அது ரணில் விக்கிரமசிங்கவினுடைய ஐக்கிய தேசியக் கட்சியாகவிருக்கலாம் அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக இருக்கலாம் இரண்டும் மற்றைய கட்சிகளை விட தாங்கள் பௌத்த மேலாதிக்க சிந்தனை வாதத்தில் மேலானவர்கள் எனக்காட்டிக்கொள்ளவே முற்படுகின்றார்கள். அதனடிப்படையிலேயே செயற்பட்டும் வருகின்றார்கள். மாறி மாறி வருகின்ற அரசாங்கங்கள் வடக்கு கிழக்கை சிங்களமயப்படுத்துவதில் தீவிரமாக இருப்பதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

இடைக்கால அறிக்கையின் வரைபுகூட பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்துவதையே தெட்டத் தெளிவாகக் காட்டியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்துவதற்கு அவர்கள் இணங்கியிருக்கின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கின்ற இடைக்கால அறிக்கையை புரிந்து பேசுகின்ற தரப்புக்களை அடியோடு நிராகரிக்க வேண்டும்.

பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதிலும் குறிப்பாக வட-கிழக்கில் பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுப்பதை நாங்கள் முற்றாக நிராகரிப்போம். எனவே இந்த விடயங்களை தொடர்ச்சியாகக் கூறிவருகிறோம்.

மக்களுக்கு ஒரு விடயத்தை எங்களால் தெளிவாகக் கூறிக்கொள்ள முடியும் ஒரு பிரதேசத்தில் விகாரை ஒன்று அமைக்கப்பட வேண்டுமாக இருந்தால் அந்தப் பிரதேச சபையிடம் அனுமதி பெறப்படவேண்டும். உங்களுக்குத் தெரியும் அண்மையில் பௌத்த துறவியின் சடலத்தை யாழ் நகர மத்தியில் எரித்தார்கள். அதற்கும் யாழ் மாநகர சபையின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவ்விடயத்தில் எம்மைத் தவிர எந்த ஒரு அரசியல் கட்சியும் அதற்கு எதிரான நடவடிக்கைக்கு தயாராக இருந்திருக்கவில்லை என்றார். (ம-4)

## மகேந்திரன் உள்...

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு மேலதிகமாக அர்ஜுன் எலோசியஸ் மற்றும் கசுன் பலிய சேன ஆகிய இருவரே சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளுக்காகவே இவர்கள் மூவரும் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது இவர்கள் மூவரும் சம்பவத்தின் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

அதேவேளை முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகி வாக்குமூலம் வழங்குமாறும் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அதன்படி இது சம்பந்தமான வழக்கை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து நீதிபதி லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார். (ம-4)

## பெண் சமூக செயற்பாட்...

ழைப்பு இயக்கத்தின் வடமாகாண இணைப்பாளர் அன்ரனி யேசுதாசன் மேலும் தெரிவிக்கையில்

யாழ்ப்பாணம் இளவாலை சேந்தாங்குளம பகுதியில் வசித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தாயான அன்ரன் உதயராஜ் டிலக்ஷினி (வயது 25) என்ற குடும்ப பெண் கடந்த 31 ஆம் திகதி அவரது வீட்டில் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

இவர் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வலி வடக்கு பிரஜைகள் குழுவின் ஒரு முக்கிய அங்கத்தவராக கடமையாற்றி வந்தார்.

ஆரம்பத்தில் இருந்து இவருடைய மரணத்தில் எமக்கு பலத்த சந்தேகம் எழுந்திருந்தது. அதே போன்று குறித்த பெண் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனையில் குறிப்பிட்டுள்ளதாக எமக்கு தெரியவந்துள்ளது.

எனினும் இந்த கொலை தொடர்பில் இதுவரை உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. பொலிஸாரின் விசாரணைகள் சரியாக இடம்பெறவில்லை என அப்பகுதி மக்களும் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

எனவே எமது அமைப்பின் உறுப்பினர் என்ற ரீதியில் நாமும் எமது அனுதாபங்களை தெரிவிப்பதுடன் கண்டனத்தை தெரிவிக்கின்றோம் .

அவ்விடயம் தொடர்பாக பொலிஸார் உடனடியாக நேர்மையான முறையில் விசாரணைகளை நடத்த வேண்டும் என்பதுடன் குற்றவாளி யாராக இருந்தாலும் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும். இல்லையேல் நீதியை வேண்டி எமது அங்கத்தவர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம் என மேலும் தெரிவித்தார் (ம-9,4)

## சுதந்திரதினம், பிணை...

அறிக்கை மீதான விவாதத்திலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்ளப் போவதில்லை என அறிவித்துள்ளது.

இதனிடையே இலங்கையின் 70ஆவது சுதந்திரதினத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்துள்ளதாக வெளியான தகவல் உண்மைக்கு புறம்பானது என எம். ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ம-4)

## மற்றுமொரு ஜனாதி...

குழுவொன்றை நியமிக்கும் வர்த்தமானி அறிக்கையில் தாம் கையெழுத்திட்டிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஹெட்டிபொலவில் நேற்று நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி மோசடிகளை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக கடந்த டிசம்பர் மாதம் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்த ஆணைக்குழுவின் விசாரணைகளில், மேலும் பல ஊழல் அரசியல்வாதிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## விபத்துக்குள்ளான...

வரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் கடந்த டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி நாவற்குழி பகுதியில் தனது நண்பரை சந்தித்து விட்டு துவிச்சக்கர வண்டியில் வீடு நோக்கி வந்துகொண்டிருந்துள்ளார்.

அப்போது கைதடி களஞ்சிய சாலை பகுதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று இவரை மோதிவிட்டு தப்பி சென்றுள்ளது. அந்த இடத்திலேயே விழுந்து படுகாயமடைந்த குறித்த நபரை வீதியால் சென்றவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குறித்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இந்த மரண விசாரணையை தென்மராட்சி பிரதேச மரண விசாரணை அதிகாரி சி.கி.இளங்கீரன் மேற்கொண்டிருந்தார். (ம-9,4)


**கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**முதலாம், இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள்-2016**

■ முதலாம், இரண்டாம் அரையாண்டு பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கலைப்பீட மாணவர்களிடமிருந்து 08.02.2018 திகதி வரை பீடாதிபதி அலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்

1. முதலாம் அரையாண்டு -2016
(இரண்டாம், மூன்றாம், நான்காம் வருடங்கள்)
2. இரண்டாம் அரையாண்டு-2016 (முதலாம் வருடம்)

■ விண்ணப்பப்படிவங்களை பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

■ மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாட அலகிற்கு மீள் பரீட்சைக்கட்டணமாக ரூபா 250/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ (162100130000880) செலுத்திப் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மாணவர்கள் கவனத்திற் கொள்ளவும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
02.02.2018

(சி-1478)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

(C-1467)

**UK-550*/=Kg**

DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

கொழும்பு Emerald Isle & Winstone Hotel School நிறுவனங்கள் தரும்

## 50,000/- முதல் 1 இல. வரை வருமானத்துடனான...



வெளிநாட்டு ஹொட்டேல் OR ஜேர்மன் கப்பல்

## வேலைவாய்ப்புக்கள்

பயிற்சி / முன்அனுபவமில்லாதவர்களுக்கு...

3-6 மாத பயிற்சியுடன் வேலைவாய்ப்பு & VISA ஏற்பாடு

சிங்கப்பூர், சுவிஸ், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, கனடா செல்லும் ஏற்பாடுகளும் உண்டு!

எந்தவொரு நாட்டுக்குமான என்ன வகை விசாவையும் வெல்ல

மேலதிக விபரங்களுக்கு **077 36 16 798**

9வது ஆண்டில் 9th Year

SIKARAM ACADEMY

Business · Hospitality · English

FAST TRACK to CAREERS

Sri Lankan Entrepreneur of the Year 2017

(C-1459)

175, 1ம் குறுக்குத்தெரு, (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்

Tel: 021 222 0011 www.sikaram.lk

## 100கோடி கேட்...

ப்பின் நற்பெயருக்கு களங்கம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில், சட்டத்தரணிகளூடாக அவருக்கு நேற்று வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரகாரம் கூட்டமைப்பினால் கோரப்பட்ட தொகையை, சிவசக்தி ஆனந்தன், 14 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நட்டஈட்டுத் தொகையை குறித்த காலக்கெடுவுக்குள் செலுத்த மறுக்கும் பட்சத்தில் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவளித்தமைக்காக, தன்னைத் தவிர கூட்டமைப்பின ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 2 கோடி ரூபாய் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம)

## யாழ் பாடியில்

தினமும் முற்பகல் 11 மணிமுதல்

பிறைட் சிக்கன் - Fried Chicken

றைஸ் & பைட்ஸ் - Rice & Bites

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

(C-1473)

## யாழ் பாடியில்

தினமும் முற்பகல் 11 மணிமுதல்

## ஒடியல் கூழ்

சைவம், அசைவம்

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

(C-1448)

## சவுதி அரேபியாவில்...

70,000/- வருமானத்துடன்...



மேசன், காபென்ரர், பிளம்பர், வெல்டர், பெயின்ரர், டிரைவர்

## வேலைவாய்ப்புக்கள்

உணவு, தங்குமிடம், விமானச்சீட்டு இலவசம்

உடன் பதிவுகளுக்கு **0777 324 004**

TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd.,

(C-1460) 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222 www.tgl.lk

SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS

175, 1ம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11 www.sikaram.lk

## வேலையாட்கள் தேவை

இணைய செய்தி சேவை நிறுவனம் ஒன்றுக்கு பின்வருவோர் தேவை.

- செய்தி பதிவேற்றுநர்
- வானொலி அறிவிப்பாளர்
- கணனி தொழில் நுட்பவியலாளர்
- செய்தியாளர்

தொடர்புகளுக்கு : 0775623785

நேர்முகத் தேர்வு 05.02.2018 அன்று இடம்பெறும்

(C-1481)

## ICT A/L 2020, 2019, 2018, Day Class

Group Class & Personal Class

ஆசிரியர்: கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் B.Sc, M.Sc in Computer Science

**077 326 1648**

(C-1484)

## A/L கிறிஸ்தவ நாகரிகம்

ச.டெனிக்சன்

(B.A English Literature & Political Science)

இடம்: A.A.C (ஸ்ரான்லி வீதி) Beacon (யாழ்ப்பாணம்)

**077 069 0654**

(C-1484)

## அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மிசாலை

முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை

(C-1471)

## வேலைவாய்ப்பு

யாழ். வடமராட்சியில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு Type Setting (ரைப் செற்றிங்) தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புகளுக்கு : 077 832 9477, 021 226 0055

(C-1480)

## உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையின் முதற்தரம் வாய்ந்த கல்வி நிறுவனத்திற்கு செயற்றிட்ட பிரதிநிதிகளாகப் பணியாற்ற ஆண், பெண் இருபாலாரும் கீழ் குறிப்பிட்ட இடங்களில் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், பருத்தித்துறை, சாவகச்சேரி, தீவகம், வடமராட்சி கிழக்கு, நெல்லியடி.



- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- இலவச பயிற்சி வழங்கப்படும்.
- முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள்
- அடிப்படை தகைமையாக O/L பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

கீழ் குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு:- 077 119 7831

Jaffnabwea@gmail.com

முடிவுத் திகதி:- 10.02.2018

HR. Division

(சி-1472)

## Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)

A/L தொழில்நுட்ப பிரிவில் பாடசாலை மட்டத்தில் முதலிடத்தை பெற்ற எமது மாணவர்கள்

**2019 A/L**

| No | Name | Rank | School | Marks | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | Bio-Tec | SFT | தெரிவுப் பாடம் |
| 01 | லாவண்யா | 1st | J/KHC | 90 | 85 | 90 |
| 02 | சந்துயா | 1st | J/MHC | 88 | 86 | 83 |

## A/L தொழில்நுட்ப பிரிவு - 2020

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

புதிய கல்வியாண்டு - A/L 2020 விஷேட பிரிவு - A/L 2019

Day Class - A/L 2018 Paper Class - A/L 2018

### தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)

**சக்தி** (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) **ராகவன்** (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)

**முருகநீரோஜன்** (யா/வயாவிளான் ம. கல்லூரி) **மதுசுதன்** (யாழ்.பல்கலைக்கழகம்)

### பொறியியல் தொழில்நுட்பவியல் (E-TEC)

**அருண்குமார்** (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)

**ஜெகநாதன்** (விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி)

**றஜீதரன்** (பல்கலைக்கழகக் கல்லூரி)

**சிவஜன்** (தொழில்நுட்பக்கல்லூரி)

### உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio - Tec)

**திருக்குமரன்** (நெல்லியடி மகா வித்தியாலயம்)

**கலைதீபன்** (நெல்லியடி மகா வித்தியாலயம்)

**பொன் சிவகுமார்**

### (ICT)

**லவன்** (உதவி விரிவுரையாளர், கணனி விஞ்ஞானம்)

**உமாகாந்தன்** BIT (யா/மத்திய கல்லூரி)

ஆரம்பம் - 03.02.2018 காலை 8.00 மணி

**077 017 5346**

(C-1484)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்



## திருமதி கனகம்மா தெல்லியூர் நடராசா

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா தெல்லியூர் நடராசா அவர்கள் நேற்று (06.02.2018) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தெல்லியூர் நடராசா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம் தம்பையா, சிவசுப்பிரமணியம் மற்றும் கனகசபை (முன்னாள் யாழ்.மாநகரசபை பிரதம சிறாப்பர்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நமசிவாயம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, நகுலாம்பிகை, பூபதி, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், கனகவேல்ராசா, இராஜசிவசக்தி (கணனி மையம் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாநிதி மகேசன் (கணனி விஞ்ஞானத்துறை யாழ். பல்கலைக்கழகம்), இராஜமனோகரன் (கொமர்ஷல் வங்கி, வெள்ளவத்தை), இராஜமோகன் (கனடா), ஆகியோரின் மாமியாரும், வித்தகன் (பொறியியல் மாணவன்) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவ (பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை), சங்கவி (வேம்படி மகளிர் கல்லூரி - உயர்தர மாணவி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.02.2018) புதன்கிழமை 21/2, குமாரசாமி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே இல.: 077 662 2061,
021 222 3821

தகவல்: கனகவேல்ராசா (மகன்)
கலாநிதி சி.மகேசன் (மருமகன்)

(2680)



## செல்லத்துரை ஜெகநாதலிங்கம்

(மூளாய் வீதி, செல்லத்துரை கடை - உரிமையாளர்)

மூளாய் வீதி வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், அராலி வீதி துணவியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஜெகநாதலிங்கம் நேற்று (06.02.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமலிங்கம் - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், நித்தியலக்சுமி அவர்களின் பாசமிகு கணவரும், லக்ஸ்மன் (விரிவுரையாளர் - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புத் தந்தையும், சிவாஜினி (ஆசிரியர் - யா/காரைநகர் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மாமனாரும், சன்ஜிற், பிரியங்கி ஆகியோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவராமலிங்கம், யோகலிங்கம் மற்றும் இராசலிங்கம், பஞ்சலிங்கம் (நோர்வே), தவேஸ்வரி, புவனேஸ்வரி, இரட்னேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், விஜயலக்சுமி, வரதராசா, நித்தியானந்தம் (கனடா), அன்னலக்சுமி (ஆசிரியர்), குலேந்திரராசா (கனடா), கமலாம்பாள், இராதா, பவானி, வாசுகி, காலஞ்சென்ற அழகேந்திரன் மற்றும் தில்லைநடராசா (ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி), ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2018) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வீதி, துணவி,
வட்டுக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 077 994 7440

(சி-1515)


# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2018

சிவபாதம் குகநேசன்
பிரதான வேட்பாளர்
முப்புர வட்டாரம்


இலங்கை தமிழ் அரசுக்கட்சி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


(இ-0557)





# மரண அறிவித்தல்



## சுப்பையா சிவபாலன்

வற்றாப்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியர் சுப்பையா சிவபாலன் நேற்று (06.02.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - குட்டியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிராமசேவையாளர் சண்முகம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஓய்வுநிலை ஆசிரியர் தங்கமணியின் பாசமிகு கணவரும், சிவஜினி (ஆசிரியர் - கேப்பாபுலவு அ.த.க பாடசாலை), சிவாகரன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - வவுனியா), சிவாகுகன் (லண்டன்), ஸ்ரீலதா ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரராஜா (உரிமையாளர் - அம்மன் மோட்டோர்ஸ், முல்லைத்தீவு), கலைச்செல்வி (முகாமைத்துவ உதவியாளர் - வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை), கஜனி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கவி (மாணவி - வித்தியானந்தா கல்லூரி), யதுர்ஷா (மாணவி - வற்றாப்பளை மகா வித்தியாலயம்), திவ்யா (மாணவி - வவுனியா றம்பைக்குளம் மகா வித்தியாலயம்), பிரவீன் (வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்), நிகேஷ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, தெய்வநாயகி, மீனாட்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, சாம்பசிவம், சந்திரபாலன் மற்றும் கமலேஸ்வரி, குணபாலசிங்கம், இராஜேஸ்வரி, லோகசிவம், கெங்காதீஸ்வரன், திலகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராசலட்சுமியின் வளர்ப்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2018) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வற்றாப்பளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வற்றாப்பளை,
முள்ளியவளை.

தகவல்:
குடும்பத்தினர்

(சி-1511)

TECHNO WORLD

A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2018 இல் செயல்முறைப் பரீட்சைக்கு (Practical Exam) தோற்றும் தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான விசேட தொடர்ச்சியான செயலமர்வு.

பொறியியல் தொழில்நுட்பம் (E-TEC)

ஆரம்பம் 09,11/02/2018 காலை 9.00 மணி

(வெலிங்டன் சந்தி, புதிய லிங்கம் கூல்பார் அருகாமை)

| | |
|---|---|
| பிரபல ஆசிரியர் ஜெகநாதன் | - இயந்திரவியல் (Auto mobile) |
| சேரலாதன் (தொழில்நுட்ப பீடம்) | - உற்பத்தி தொழில்நுட்பம் |
| அருண்குமார் (J/MHC) | - நில அளவை |
| சிவயன் (தொழில்நுட்ப பீடம்) | - குடிசார் தொழில்நுட்பம் |
| நிறோஜன் (பொறியியல் பீடம்) | - நில அளவை |
| நிரூபன் (தொழில்நுட்ப பீடம்) | - நில அளவை |
| பிரசாந்தன் (தொழில்நுட்ப பீடம்) | - Electrical & Electronics |
| புவிராஜ் (தொழில்நுட்ப பீடம்) | - Electrical & Electronics |

உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் (BIO-TEC)

திருக்குமரன் (J/NCC)
கலைதீபன் (J/NCC)
சாரங்கன் (K/KCC)
விஷ்ணு (யா/ சிதம்பராக் கல்லூரி)
பொன் சிவகுமார்

குறிப்பு

- யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்களின் விசேட கருத்தரங்கு இடம்பெறும்.
- அகில இலங்கை ரீதியாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முதலிடம் பெற்ற மாணவர்களின் கருத்தரங்கு இடம்பெறும்.
- 2018 பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் (விடைகளுடன்)
- கடந்த 2015, 2016, 2017 செயல்முறை வினாக்கள் விடைகளுடன் தரப்படும்

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

077 017 5346

(சி-1516)


# மாற்றத்தை ஏற்படுத்த தமிழ் தேசிய பேரவைக்கு வாக்களியுங்கள்

## உலகத் தமிழர் சைவப் பேரவை வேண்டுகோள்

வரலாற்றின் முக்கியமான தருணத்தில் வந்துள்ள உள்ளூராட்சி தேர்தலானது எமது மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிலும் தமிழர் நலன் பேணும் அரசியல் சித்தாந்த ரீதியிலும் மரபுரிமைகளை நிலை நிறுத்துவதி லும் முக்கியமானது எனக் குறிப்பிட்டுள்ள உலக ஈழத்தமிழர் சைவப் பேரவை தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

சைவத் தமிழ் சங்கிலிய மன்னன் ஆண்ட நல்லூரும் குளக்கோட்ட மன்னன் ஆண்ட கோணமாமலையும் உள்ளடக்கிய மாநகர, நகர, பிரதேச சபைகள் எம் பாரம்பரியங்களைக் காக்ககூடிய தமிழ்த் தேசிய பற்றுறுதியாளர்கள் முதல்வர்களாக, தவிசாளர்களாக வருவதை உறுதிப்படுத்த வேண்டியது நம் அனைவரதும் கடமையாகும்.

ஏழை மக்களின் வாழ்வு ஏற்றம் பெறவும் தமிழர்கள் தங்கள் சுதேச மத பண்பாட்டு அடையாளங்களுடன் தலை நிமிர்ந்து இன, மத திணிப்புக்கள், ஆக்கிரமிப்புக்கள் என்பவற்றை இதய சுத்தியுடன் எதிர்கொள்ள தக்கதாகவுள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த ரீதியில் தற்காலத்தில் தமிழர்களுக்கு வழிகாட்டியாக விளங்கக்கூடிய சி.வி. விக்னேஸ்வரன் ஐயாவை தலைமையாகக் கொண்ட தமிழ் மக்கள் பேரவையின் கொள் கையை ஏற்று அகில இலங்கை தமிழ் காங் கிரஸின் சைக்கிள் சின்னத்தில் தேர்தல் களம் இறங்கியுள்ள தமிழ்த் தேசிய பேரவைக்கு ஆதரவளித்து எமது மக்களின் அடித்தள பொறிமுறையான உள்ளூராட்சி சபையில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்த எதிர்வரும் 10ஆம் திகதி உறுதி ஏற்போம் எனவும் அந்த அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

# விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

வீதி விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மட்டுவிலை சேர்ந்தவரும் சிலாபத்தில் வசித்து வருபவருமான சின்னையா யசீதரன் (வயது 49) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் தனது தாயை பார்ப்பதற்காக மட்டுவிலுக்கு வந்துள்ளார். கடந்த டிசம்பர் மாதம் 30ஆம் திகதி மட்டுவில் வைரவர் கோவிலடியில் மோட்டார் சைக்கிளில் வந்த இவரை எதிரே வந்த முச்சக்கர வண்டி மோதியுள்ளது.

அந்த இடத்தில் மயக்கமடைந்த குறித்த நபர் விபத்தை ஏற்படுத்திய முச்சக்கர வண்டியில் ஏற்றப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இவரை மோதியவர்கள் குறித்த நபரை வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு தப்பி சென்றுள்ளனர். இவர்கள் தொடர்பில் எந்தவிதமான பதிவுகளையும் சாவகச்சேரி வைத்தியசாலை காவலாளி மேற்கொள்ளவில்லை. மேலும் குறித்த நபர்களை கண்டுபிடிப்பதற்கு ஏற்ற வகையில் வைத்தியசாலை வளாகத்தில் கண்காணிப்பு கமெராக்களும் பொருத்தப்பட்டிருக்க வில்லை இதனால் விபத்து ஏற்படுத்தியவர்களை அடையாளம் காண முடியவில்லை.

இந்நிலை வேறு பாதிக்கப்பட்ட வர்களுக்கு வரக்கூடாது. இது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் கவனத்தில் எடுக்க வேண்டும் என உறவுகள் தெரிவித்திருந்தன. (ம-9)


Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை - யாழ்.)

A/L தொழில்நுட்ப பிரிவு

A/L 2020 - திங்கள் - வெள்ளி 8.00 - 12.00

A/L Day Class - திங்கள் - வெள்ளி 8.00 - 1.00

வார நாட்களில் பகலில் நடைபெறும் ஒரேஒரு தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் 0770175346

(C-1516)



உள்ளூராட்சித் தேர்தல்-2018



பருத்தித்துறை நகர சபை

"தூய கரங்கள்-தூய நகரம்"



தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற உறுதியான அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் அணிதிரளுங்கள்





பி.வின்சன் டி போல்

உப தலைவர், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், முன்னாள் உபதவிசாளர் (பருத்தித்துறை நகர சபை) சமூக சேவகர்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

தமிழ்த் தேசியப் பேரவை

(C-058)

பருத்தித்துறை நகர மக்கள்